SKY WINGS TRAVEL & TOURS LTD
IATA
"WHERE THE SUN NEVER SETS"
Cheapest Worldwide Fares with the Best Service
We are authorised main agents for Srilankan, Jet Airways, Qatar, Kuwait, Oman...
Reservation: Mob: 07850876921
02086729111
Colombo £170 + Taxes
We accept all major credit cards
Visa Service to Srilanka, Australia, India & USA
119,Tooting High street, London, SW17 0SY

BILINGUAL FORTNIGHTLY

# ஒரு பேப்பர்

ORU PAPER

FREE

PAPER - 12 ♦ ISSUE - 248 ♦ FRIDAY 21 AUGUST 2015

LONDON ACCIDENT CLAIMS LIMITED
70 Windmill Road, Croydon, CR0 2XP
வாகன விபத்தா? உங்கள் தவறில்லயைா?
Driver / Passenger – within last 3 years
3 வருட காலத்துக்குள் சந்தித்த அனைத்து வாகன விபத்துக்களிலும் ஏற்பட்ட
• Personal injury (Neck,Back & Shoulder Pain)
• Replacement Vehicle (Terms & Conditions Apply)
Mini cab ஓட்டுனர்களுக்கு "PCO" உடன் வாகனம் வழங்கப்படும்
NO WIN NO FEE *
* Other Insurance charges may apply
Call Free:0800 032 6798 | Tel: 020 8665 7667
Web: www.lacl.co.uk | Mail: info@lacl.co.uk

உங்கள் வாழ்க்கைத் துணையை இணையத்தில் தேடுங்கள் WWW.ORUMANAM.COM




குழந்தைப் பாக்கியம் இல்லையே என்ற கவலையைப் போக்க 20 வருட அனுபவமுள்ள திறமையான வைத்தியர்களைத் தொடர்பு கொள்ளுங்கள்
HSFC offers comprehensive services in the areas of assisted reproduction (including IVF, ICSI, egg donation and egg sharing), gynaecology, and male infertility.
We have a flexible schedule, including appointments in the evenings and weekends.
தமிழில் தொடர்புகொள்ள அழையுங்கள்
HSFC HARLEY STREET FERTILITY CLINIC
Director: Dr Geetha Venkat MD, FRCOG
134, Harley Street, London, W1G 7JY
Phone: +44 (0)20 7436 6838
Mail : info@hsfc.org.uk | Web:www.hsfc.org.uk

• விசா முடிவடைந்து சட்டவிரோதமாக தங்கியிருப்பவர்கள்.
• புதிதாக அகதி அந்தஸ்து கோருபவர்கள்.
• ஏற்கனவே அகதி அந்தஸ்து கோரி நிராகரிக்கப்பட்டவர்கள் தொடர்பில் ஆலோசனை மற்றும் விண்ணப்பம் செய்து தரப்படும்
• கைது செய்தல் தடுத்து வைத்தல் மற்றும் உயர் நீதிமன்ற விண்ணப்பம்
• ஐரோப்பிய சட்டத்தின் கீழ் உறவினர்கள் மற்றும் துணைகளை Sponsor செய்தல்
• மனிதாபிமானம் மற்றும் Fresh Application விண்ணப்பம் அனுப்புதல்
போன்றவை தொடர்பில் அனுபவம் வாய்ந்த சட்டத்தரணிகள் குழு தமிழ் மக்களுக்கான இலவச ஆலோசனை வழங்கி வருகிறனர்.
M&S Solicitors
1A Beaconsfield Road Southall Middlesex UB1 1BA
(Southall Stationக்கு அருகாமையில்)
Mob: 078 7076 3570, 075 0874 4038
Tel: 020 8571 7760
Email: fahmy@mandssolicitors.com

R & C PROPERTY LAWYERS LLP & NOTARY PUBLIC
CONVEYANCING SERVICES:
• Residential and Commercial Conveyancing
• Last will
NOTARIAL SERVICES:
• Power of Attorneys, Notarisation of documents
• Affidavits , Oaths/ Statutory Declarations / Affirmations
Contact: SEN THAVARAJA LLB (Hons)
Solicitor & Notary Public
Consultant : RAJA THAVARAJA LLB Solicitor
Telephone: 020 8772 4920
10a Upper Tooting Road , London SW17 7PG

WANT TO BECOME A DOCTOR ?
Didn't get a place?
Don't worry you haven't missed out..
We will help you to find the right place
STUDENT LOANS ARRANGED
For more details
020 8863 4684
Web : www.mashaconsultants.co.uk

A CAMBRIDGE TUTOR
CHEMISTRY & BIOLOGY
KS3 , GCSE, A/S & A LEVELS
(All Exam Boards) and Small Group
Contact:
Dr. K. Tharani (BmedSci, MBBS, MRCP)
Dr. K. Pragash (BA Cambridge, MBBS) } (Ex. Tiffinians)
Tel: 07940499852
Email: pragash.cambridge@gmail.com
New Malden & Surrey Areas
Upon request can also provide medical school interview preparation

சென்னையிலிருந்து UK விசா
⏩ தொழிலாளர் விசா
⏩ தங்கியிருக்கும் விசா
⏩ மாணவர் விசா
⏩ சுற்றுலா விசா
இந்தியாவிலிருந்து கொண்டு UK விசா செய்து தரப்படும்
UK Immigration Specialist
Poul & Minnaa 044 4261 3698
New No. 88, Old No. 150, 1st Floor, Dharma Towers
Nelson Manickam Road, Choolaimedu, Chennai 94

நீங்கள் லண்டனில் நீண்ட காலம் இருக்கின்றீர்களா? அல்லது உங்கள் அகதி அந்தஸ்து நிராகரிக்கப்பட்டு விட்டதா? நீண்ட காலமாக விசா முடிந்த பின்னர் இந்த நாட்டில் இருந்துள்ளீர்களா? கவலையை விடுங்கள். மனித உரிமை சட்டத்தின் கீழ் விசாவை விண்ணப்பிக்கலாம்
Contact - Immigration Law Expert - Paul John & Co. Solicitors
020 8215 1205
இந்த விளம்பரம் கொண்டு வருபவர்களுக்கு இலவச சட்ட ஆலோசனை வழங்கப்படும்
எந்த விதமான UK விசா பிரச்சனைகளையும் உங்களுக்கு செய்து தருவோம்.
Paul John & Co. Solicitors
115a, The Grove, Stratford, E15 1EN
website - www.pauljohnandco.co.uk

வான் சாரதிகள் தேவை
மிட்சம் (Mitcham) பகுதியில் உள்ள நிறுவனம் ஒன்றிற்கு பொருட்கள் விநியோகம் செய்வதற்கு வான் சாரதிகள் தேவை.
Robert Fresh Fruit & Veg Ltd
Unit 13 , 91 -92 church road
Mitcham, CR4 3TD
தொடர்புகளுக்கு : 02086871222
Mob : 079 1902 6083

ஈசியாய் வாசிக்க ஒரு பேப்பர்

• தோசை
• இட்லி
• வடை

# Dosa – Idly - Vada

• தோசை
• இட்லி
• வடை

off 50% off

**50% Discount Until September 2015**

Prepared by our new Dosa Chef with over 40 years experience in South Indian Cuisine.

CERTIFICATE of EXCELLENCE 2015 Winner tripadvisor



Award winning Fushia Restaurant
Daily opening from 5 pm to 11 pm
(Sunday 12 Noon to 11.00 pm)

FUSHIA

## Fushia Restaurant and Banqueting Hall

TEL - 020 8680 8833 / 07958424222

3, Brighton Road, South Croydon, Surrey, CR2 6EA

web : www.fushiauk.com Mail : info@fushiauk.com



# திருமண சேவை

## மணமகள் - மணமகன் தேவையா ?

எம்மிடம் 6000க்கு மேற்பட்ட உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்கள் பற்றிய தகவல்கள், படங்கள், குறிப்புக்கள் உள்ளன.

*சேவை நேரம்:- திங்கள், வெள்ளி, ஞாயிறு: 1 மணி முதல் மாலை 4 வரை*

குறிப்பு: 29 வயது (இந்து) லண்டனில் வசிக்கும் படித்த மணமகனுக்கு மணமகள் தேவை
27 வயது (இந்து) இலங்கையில் வசிக்கும் படித்த மணமகளுக்கு படித்த மணமகன் தேவை

எம்முடன் தொடர்பு கொள்ள - **07939531418**

EMail:- info@friendsmatrimony.com

முகவரி:- Temple House, Station Road, Harrow, London, HA1 2TH



# SURREY PAWNBROKERS

(அடைவு கடை)

## உங்கள் நகை அடைவில் உள்ளதா ?
## அதி கூடிய வட்டியா ?

# கவலை வேண்டாம்!

நாம் நேரில் வந்து உங்கள் நகைகளை மீட்டு குறைந்த வட்டியில் மீள் அடைவு செய்து தரப்படும்.

- நகை அடையவும் மீள் அடைவும் - FOR £1000 MONTHLY £25
- பழைய புதிய நகைகள் வாங்குதல் - HIGHEST PRICE PAID
- நாணய மாற்று சேவை - EURO, USD, CAD BEST RATE GURANTEED
- காசோலை மாற்றுதல் - CHEQUE CASHING

இலங்கைக்கான பணமாற்று சேவை RIA, Western Union

உங்கள் நகைகளுக்கு
பிரித்தானியாவில் அங்கீகாரமும், உத்தரவாதமும் பெற்ற
ஒரே தமிழ் நிறுவனம் SURREY PAWNBROKERS

தொடர்புகளுக்கு: **Surrey Pawnbrokers**

94, TOLWORTH BROADWAY, TOLWORTH, SURREY, KT6 7HT

T: **0208 399 9176** M: **07947 579 682**



# THE MORTGAGE ORGANISATION

AUTHORISED BY THE FINANCIAL CONDUCT AUTHORITY

Contact:

**David Eva**
OR
**Ernest Sri**

258- High Street North
Manor Park, London E12 6SB

Tel: **020 8475 0755**
Fax: **020 8470 4755**
Mob: **07803 600 543**

## RESIDENTIAL MORTGAGES & COMMERCIAL MORTGAGES

**Commercial Loans**

- Petrol Stations, Social Clubs
- Hotels, Restaurants &
- Takeaways
- Convenience Shops
- Pharmacies, Care Homes,
- Optician, Dentist
- Children Nurseries

**Residential Mortgages**

- Re-Mortgages
- Buy to Let
- Bridging Loans
- Right to Buy
- Help to Buy



## Loans can be arranged for leasehold and freehold businesses

Arrangements are made to meet senior business manager from leading banks in our premisesTHE MORTGAGE ORGANISATION

How will a 'YES' make you feel ?

YOUR HOME MAY BE REPOSSESSED IF YOU DO NOT KEEP UP REPAYMENTS ON YOUR MORTGAGE




## தேர்தல்...

இலங்கையில் இடம்பெறும் தேர்தல் பிரச்சாரங்களில் குறிப்பாக வடக்கிலும், கிழக்கிலும் போட்டி போடும் வேட்பாளர்களின் எண்ணிக்கையும், அவர்களுடைய பிரச்சாரங்களையும் எடைபோட்டால், 30 வருட சாத்வீகப் போராட்டம், 30 வருட ஆயுதப் போராட்டம் 5 வருட அமைதிப் போராட்டம் அடைய முடியாத சாதனையை, தேர்தலில் வெற்றியிலும் வேட்பாளர்களால் சாதிக்க முடியுமா என்பது ஒருபுறமிருக்க, ஒரு வேளை ஈழம் கிடைத்து விட்டால் என்ன கதியென்பது தான் நினைக்கவே பயமாயிருக்கிறது.

*- உமா மகாலிங்கம்*

## நெஞ்சு பொறுக்குதில்லையே...

*நெஞ்சு பொறுக்குதில்லையே இந்த நிலை கெட்ட மாந்தரை நினைத்து விட்டால்...*

இப்பாடல் நான் சிறுவனாக இருக்கும்போது ரேடியோவில் கேட்டிருக்கிறேன். அப்போது எனக்கு இப்பாடலின் அர்த்தம் புரியவில்லை. இப்போது அதன் அர்த்தமும் அது போன்ற மாந்தர்களையும் இனம் காணமுடிகிறது. குறிப்பாக சிலரை என்னால் குறிப்பிட முடிகிறது. அவர்கள் திரு.சம்பந்தன், திரு.சுமந்திரன், அருட்தந்தை இமானுவேல், திரு.சுரேன், திரு.வித்தியாதரன் (மரியா தைக்காக 'திரு.' குறிப்பிட்டுள்ளேன்.)போன்றவர்கள். 100% இவர்களைநினைத்தால் நெஞ்சு பொறுக்குதில்லையே.

இவர்கள் எல்லோரும் தமிழ் இனத்துக்கு என்ன செய்தார்கள்? செய்து கொண்டு இருக்கிறார்கள்? என்ன செய்யப் போகிறார்கள்? தேர்தலின் போது மதிப்புக்குரிய தலைவர் மேதகு பிரபாகரனின் பெயரையும் இன விடுதலைக்காக இன்னுயிர் நீத்த மறவர்களின், பொதுமக்களின் தியாகங்களுக்காக பாடுபடுவதாகவும் இன்னும் ஏதேதோ பேசிக் கொண்டு மக்கள் முன்னால் வாக்கு கேட்டு பிரசாரம் செய்கிறார்கள்.

தேர்தலின் பின் என்ன நடக்கப் போகிறது? எதுவுமே நடக்கப் போவதில்லை. இதையும் என்னால் உறுதியாக கூறமுடியும். 1960களிலிருந்தே தமிழ் அரசியல்வாதிகளின் நிலைப்பாட்டை அறிந்தவன் என்ற வகையில் திடமாக கூறுகிறேன். மக்களே திரும்ப திரும்ப ஏமாறாதீர்கள். சற்று சிந்தியுங்கள்.

*- நாதன், தென் கென்சிங்டன்*

## தட்டிக் கொடுப்பு

அண்மையில் மகேந்திரன் என்பவர் பல பிராயத்தனங்களின் பின் என்னுடைய தொலைபேசி எண்ணை கண்டுபிடித்து தொடர்பு கொண்டு சென்ற இதழில் வெளிவந்த தன்னுடைய ஒடியல் கூழ் பற்றிய பாராட்டை மகிழ்ச்சியுடன் தெரிவித்தார். தன்னுடைய தந்தையார் தான் எங்களுடைய சிறுவயதிலே கூழுக்குப் பொறுப்பானவர் என்றும் அவருடைய நினைவை கொண்டுவந்ததாக கூறினார். மிகவும் மனம் குளிர்ந்தது. இதேபோல அண்மைய தேர்த் திருவிழாக்களிலும் பலர் நேரில் காணும்போது தெரிவித்த கருத்துகளும் நெஞ்சை நெகிழ வைத்தது. இவ்வாறான தட்டிக் கொடுப்புகள் தான் எழுத்தாளர்களுக்கான ஊக்குவிப்பு அந்த வகையிலே இத்தகைய தன்மைகளை உருவாக்குகின் அதே வேளைகளில் குறைகளை சுட்டிக்காட்டுகின்ற பூராயம் பகுதியாளர்களை பாராட்டுகின்றேன். இதே விமர்சனங்களை ஏனைய எழுத்தாளர்களிடம் வரவேற்கின்றேன்.

*- பாவை ஜெயபாலன்*

## தமிழர் விகிதாசாரம்

கடந்த ***ஒரு பேப்பர்*** இல் (07.08.15) திரு முரளி வல்லிபுரநாதன் அவர்கள் யாழ் மருத்துவ சங்கத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட கலந்துரையாடலில் எதிர்காலத்தில் தமிழர் விகிதாசாரம் பற்றிய தகவல்களைத் திரு உமா மகாலிங்கம் அவர்கள் தனது தகவல் களஞ்சியத்தில் தந்ததையிட்டு ஆச்சரியப்படாமல் இருக்க முடியவில்லை. தாய் நாட்டில் இனப்பிரச்சனையைச் சாட்டி மேற்கு நாடுகளுக்குப் புலம் பெயர்ந்து இங்கு வேர்ஊன்றி விட்டோம் என்று கவலை கவலையடையாமல் இருக்க முடியவில்லை.

எனினும் இவ்வாறு புலம் பெயர்ந்த ஒருசாரார் நாட்டுப்பற்றுடன் தழிழர் பிரச்சனையை சர்வதேச மயமாக்கி எமது பிரச்சனைக்குத் தீர்வு காண்பதில் உன்னிப்பாகச் செயல் படுவது வரவேற்கத்ததாக இருந்தாலும் பொறுப்பற்ற வயதானவர்கள் தாய் நாட்டுக்குத் திரும்பிப் போனால் தமிழர் விகிதாசாரம் குறைவடைவதைத் தவிர்க்கலாம் என எண்ணுகின்றேன்.

*- த.செல்வரத்தினம்*

## கூட்டமைப்பின் ஊதுகுழல்களா?

லண்டனிலிருந்து இயங்கும் இரண்டு தமிழ்த் தொலைக்காட்சிகள் கூட்டமைப்பின் ஊதுகுழல்கள் போன்று செயற்படுகின்றன. நோர்வே தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவினால் இயக்கப்படுவதாக பீலா காட்டிய வியாபாரத் தொலைக்காட்சி இப்போ சுமந்திரனின் விசுவாசிகளின் தொலைக்காட்சியாகச் செயற்படுகிறது. மற்றையது கரம்பிடிப்போம் வடம் பிடிப்போம் இதில் ஆஸ்தான அரசியல் ஆய்வாளராக சர்வதேச்சட்ட வல்லுனர் சிறீமான் சிதம்பரப்பிள்ளை சேர்ந்திருக்கிறார்.

*- சோ. ஆறுமுகதாஸ்*

## சர்வதேச விசாரணை கையெழுத்து வேட்டை

தமிழ்மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட இனவழிப்பு நடவடிக்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் விசாரிக்க வேணும் என்று நாடுகடந்த அரசாங்கத்தைச் சேர்ந்தவர்கள் கையெழுத்து வேட்டையில் ஈடுபட்டு வருகிறார்கள். ஒருலட்சம் கையெழுத்தை சேர்த்திட்டார்கள் என்று சொல்கிறார்கள். ஆனால் நாடுகடந்த அரசாங்கத்தின் மதியுரைஞர் சந்திரகாந்தன் சர்வதேச விசாரணைபற்றிப் பேசுவதை நிறுத்தி சிறிலங்கா அரசாங்கத்திற்கு இடைஞ்சல் ஏற்படுத்தாமிலிருக்க வேண்டும் என்று ஆலோசனை வழங்கியதாக செய்தி கசிந்திருக்கிறது.

*- இணுவை சி. ரங்கன்*

## தீர்விலும் கொஞ்சம் குறையுமா?

கூட்டமைப்பு 20 ஆசனங்கள் பெற்றால் 2016ம் ஆண்டு சமஸ்டி தீர்வைப் பெற்றுதரும் என்று கூறியது. இப்போது தமிழர்கள் 16 ஆசனங்களை மாத்திரம் பெற்றுத் தந்தநிலையில், எம்மால் வடக்குக் கிழக்கு இணைந்த சுயாட்சியைப் பெற்றுத்தர முடியாது, அதுக்கு குறைந்த தீர்வைத்தான் பெற்றுத்தருவோம் என்று கூறுமா?

*- மதியழகன்*

## உங்கடை அலுவலைப் பாருங்கோ

சிறிலங்கா அரசாங்கத்துடன் இணைந்து செயற்பட்டுத்தான் தமிழ் மக்களின் பிரச்சனைகளை தீர்த்துக் கொள்ளலாம். முதலில் அன்றாடப் பிரச்சனைகளைத் தீர்த்துக் கொள்வோம். பின்னர் அரசியல் தீர்வைப் பற்றிப் பார்ப்போம் என்ற நிலைப்பாட்டை தாயகத் தமிழ்மக்கள் தேர்தலில் காட்யிருக்கிறார்கள். இந்த நிலையில் இங்கையிருக்கிற ஆட்கள் ஆர்ப்பாட்டம் ஊர்வலம் என்று நேரத்தையும் காசையும் வீணாக்காமல் வேறை ஏதும் முன்னேறுகிற வழியிருந்தால் பாருங்கோ.

*- கயல்விழி*

*உங்கள் கருத்துக்களுக்கு.....*
***Tel : 020 7043 4314***

# தேர்தலில் ஊடகங்களின் நிலை

யாழ்ப்பாணத்தைப் பொறுத்த வரை கூட்டமைப்பின் கட்சி பத்திரிகையாகிப்போன உதயன், யாழ்.தினக்குரல், வலம்புரி, ஈபிடிபியால் இயக்கப்படும் தினமுரசு பத்திரிகையும் டாண் தனியார் தொலைக்காட்சியும் , ஈபிடிபியின் டிடி தொலைக்காட்சி மற்றும் அரச ஊடகமான வானொலி ஒன்றும் குறிப்பிடத்தக்கன.

உதயன் நாடாளுமன்ற உறுப்பினருமான சரவணபவனினை எவ்வாறேனும் வெற்றி பெறவைப்பதென்ற நிகழ்ச்சி நிரலில் கூட்டமைப்பின் வெற்றிக்காக பாடுபட்டது. தேர்தல் அறிவிப்பின் பின்னராக எந்தவொரு சந்தர்ப்பத்திலும் தமிழ் தேசிய மக்கள் முன்னணியென்ற வார்த்தையே உதயனின் வராது தடுத்துக் கொண்டது.

ஆனால் அதே தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினால் வழங்கப்பட்ட பணத்தை மட்டும் கல்லாவில் போட்டுக்கொண்டது. ஆனாலும் நிமிடத் திற்கொரு தடவை நடுநிலைமை, பக்கச்சார்பின்மை பற்றி அதன் ஆசிரியர் பேசிக்கொண்டிருந்தார்.

ஒட்டுமொத்தமாக போலி பல்கலைக்கழக அறிக்கையினை அதிலும் உத்தியோக கடிதத்தலைப்பே இல்லாத அறிக்கையினை முன்பக்க தலைப்பு செய்தியாக்கினர். கூட்டமைப்பிற்கு பல்கலைக்கழக மாணவர்கள் வாக்களிக்க சொல்வதாக மக்களை குழப்பமுற வைத்தனர். அவர்களது அல்லக்கைகள் முகப்புத்தகங்களில் நியாயம் தேடி பக்கம் பக்கமாக குறிப்பெழுதினர்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் மீது கூட்டமைப்பினர் முன்வைத்த பொய்யான குற்றச்சாட்டுக்களிற்கு பதிலளிக்க கூட சந்தர்ப்பம் வழங்க அவர்கள் மறுதலித்தனர். தொடர்ந்தும் பொய்கைகளினை எழுதி அதனை மெய்களாக்க அவர்கள் பாடுபட்டனர்.

யாழ்.தினக்குரல் பத்திரிகை ஆரம்பத்தில் ஓரளவு நடுநிலைமையாக செயற்பட்டது. ஆனால் தேர்தல் இறுதி நாட்களில் சுமந்திரனின் முறைப்பாடுகளையடுத்து அதன் பணிப்பாளர் கேசவராஜன் இந்திய தூதுவராலயத்தாலும் ரணிலாலும் அழைக்கப்பட்டு மிரட்டப்பட்டார். அதனையடுத்து அவசரமாக யாழ்.வருகை தந்திருந்த அவர் ஆசிரிய பீடத்தை கூட்டமைப்பினை மட்டும் முன்னிலைப்படுத்த பணித்தார். மறுதலித்த ஆசிரிய பீடத்தை சேர்ந்த சிலர் விடுமுறையில் சென்றனர். இன்னும் சிலர் அறிக்கையிடாமல் ஓய்ந்திருந்தனர்.

இந்நிலையில் சீ.வி.கே.சிவஞானம் தனது தரகு வேலையில் களமிறங்கினார். தனது உறவினரான தினக்குரல் உதவி ஆசிரியர்களுள் ஒருவனான கோபி என்றழைக்கப்படும் செல்வசசீபன் என்பவனுடன் சுமந்திரனை பேச வைக்க தினக்குரலும் ஊதுகுழலாகியது. கொழும்பைச் சேர்ந்த முகமறியாத எழுவர் அனுப்பி வைத்த ஊடக அறிக்கையினை ஏனைய ஊடகங்கள் குப்பை தொட்டியினுள் போட தினக்குரலோ தலைப்பாக்கி கொண்டாடியது.

சுமந்திரனின் சாதகத்தை வாசித்தது. போலி பெயரில் தானே கடிதங்களை எழுதி பிரசுரித்திருந்தது. ஆலமரத்தடிகளை எழுதிய தினக்குரல் இறுதியில் மைலந்தனை படுகொலை வழக்கில் கஜேந்திரகுமார் வாதாடியதாக சுமந்திரன் செய்த பொய் பிரச்சாரத்தை மீள வாந்தியெடுத்தது.

அதற்கான பதிலிறுக்கும் ஒரு சந்தர்ப்பத்தை கூட கஜேந்திரகுமாரிற்கு வழங்க அது மறுத்தது. தங்களை தாமே ஊடக நடுநிலைவாதிகளென பறையடிக்கும் பாரதியும், சிவகணேசனும் தமது பிழைப்பு வாதத்தை மட்டும் பார்த்துக்கொண்டனர். மூத்த சட்டத்தரணி இரத்தினவேல் கஜேந்திரகுமாரிற்கும் மைலந்தனை வழக்கிற்கும் தொடர்பில்லையெனவும் தானே கடைசி வரை வாதாடியதாக சொன்ன போதும் இவர்கள் எவருமே கண்டு கொள்ளவேயில்லை.

மறுபுறம் புலம்பெயர் இணைய ஊடகங்களில் ஒரு சில தமது நன்றி விசுவாசத்தை காட்டிக்கொள்ள போட்டிபோட்டுக்கொண்டு பறந்து திரிந்தன. சகோதர பாசத்திற்கு சிறீதரனையும் கூட்டமைப்பினையும் உயர்த்தி பிடிக்க இன்னொருவரே பழைய தோழமைகளிற்காக குரல் கொடுத்தார். மற்றையவர்கள் ஏதுமே புரியாது விரல் சூப்புவதாக வியாக்கியானமும் அளித்தவாறு விளக்கமளித்தார்.

பாட்டு பாடி பரிசு பெற்ற புலவர்கள் போல இவர் கேள்விகளை கேட்டே பரிசு பொட்டலங்களை பெற்றார். பொட்டலங்கள் தூதுவராலயங்களிலிருந்து அனுப்பப்பட்டதா இல்லையா என்பதனை பிறிதொரு பதிவில் பார்ப்போம்.

*- -ஈழத்திலிருந்து டாம்போ*

Broadband
Choice of best available download and upload speeds to suit your needs
Range of ADSL, Superfast or Fibre Broadband now up to 80MB speed
Data package to include Static/Dynamic IP addresses and routers to fulfil your needs

Hosted voice solutions
FREE Inter-Office calls
FREE on net calls to landlines and mobiles
UNLIMITED DDI numbers
Provided as an end-to-end fully managed service
Simple Management via online portal
Ability to add, move or edit users at the click of a button
Easy call management schedules for office hours and holidays
Flexibility to move office as all phones are plug and play
Customise features according to user needs
Flexible Auto Attendant and 'Press 1' menu options
Soft Phone (pc based) available
Increased business efficiency

Inbound numbers
Full range of inbound number types available including 020x, 03xx, 0800, 0844, 0845, 0870 and 0871
Have your own Virtual Reception to enhance efficiency and excel in customer service
Low monthly service rental and call charges







SALES@MONEXTELECOM.CO.UK 0207 402 2900 WWW.MONEXTELECOM.CO.UK

ஒரு பேப்பர்
ORU PAPER

FRIDAY, AUGUST 21, 2015, ISSUE 248

## புதிதாக முளைக்கும் ‘கடும்போக்காளர்’ அடைமொழி

அண்மையில் கசியவிடப்பட்ட ஐ.நா. சபையின் ஆவணங்களில், ஐ.நா. மனித வுரிமைச்சபையானது அடுத்த கட்ட விசாரணைகளை சிறிலங்காவில் உள்ளகப் பொறி முறையின் மூலம் நடத்தவிருப்பதாகவும், அதனை ஏற்க மறுத்து, சர்வதேச விசார ணையை வேண்டிநிற்கும் ‘கடும்போக்கு’ புலம்பெயர் அமைப்புகளை தந்திரமாகக் கையாளவிருப்பதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. இங்கு ‘கடும் போக்கு’ அமைப்புகள் என எவற்றைக்குறிப்பிடுகிறார்கள் என்ற விடயத்தில் தமிழ் மக்கள் அதிக கரிசனம் கொள்ளவேண்டியவர்களாக உள்ளனர்.

தமிழ் மக்களின் ஆயுதம் தாங்கிய விடுதலைப் போராட்டத்தை தீவிரவாதமாகவும், பின்னர் பயங்கரவாதமாகவும் வரையறுக்கப்பட்டதும், பல மேற்கத்தைய நாடுகள் விடுதலைப்புலிகள் அமைப்பை பயங்கரவாதப் பட்டியலில் அடக்கி, அவர்களது செயற்பாடுகளைக் கட்டுப்படுத்தி வந்ததமையும் அண்மைக்கால வரலாறு. விடுதலைப்புலிகள் அமைப்பு தனது செயற்பாடுகளை நிறுத்தி ஆறாண்டுகளாகியும் அவ்வமைப்பு மீதான தடை இன்று வரையும் தொடர்ந்து வருகிறது. இந்நிலையில், இலங்கைத்தீவு விடயத்தில் மேற்கத்தைய நாடுகளின் விருப்பிற்கு மாறாக ஜனநாயக முறையில் எதிர்ப்பு காட்டுபவர்களையும், விமர்சிப்பவர்களையும் ‘கடும்போக் காளர்கள்’ என அடையாளப்படுத்தும் முயற்சிகள் தற்போது நடைபெறுவதனை அவ தானிக்க முடிகிறது. மேற்குறித்த ஐ.நா. ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ‘கடும் போக்கு’ அடைமொழியானது, தமக்கு எதிராகச் செயற்பட்டுவந்த புலம்பெயர் தமிழ் அமைப்புகளைத் தடைசெய்த இராஜபக்ச அரசாங்கத்தின் செயற்பாட்டுக்கு நிகரா னது. தமக்கு ஒத்திசைவாகச் செயற்படாத தமிழ் அமைப்புகளைத் தனிமைப்படுத்தி அவற்றின் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்த முடியும் என்ற எதிர்பார்ப்பிலேயே இவ்வாறான அடைமொழி வழங்கப்படுகிறது.

ஒருபுறத்தில் மக்களிடமிருந்து அந்நியப்பட்டிருக்கும் உலகத்தமிழர் பேரவை போன்ற அமைப்புகளை முன்னிலைப்படுத்திக் கொண்டு, மறுபுறத்தில் மக்கள் மத்தியில் செயற்படும் அமைப்புகளைக் கட்டுப்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்படு கின்றன. இம்முயற்சிகளை உள்ளூர் அமைப்புகளின் துணையுடன், புலம்பெயர் தமிழ் மக்கள் எல்லாவழிகளிலும் எதிர்க்க முன்வர வேண்டும்.

நடந்து முடிந்த சிறிலங்காவின் பொதுத் தேர்தலில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு பெற்ற பெருவெற்றியானது அவர்களைத் தொடர்ந்தும் தமிழ் மக்களின் பிரதிநிதி களாக அடையாளப்படுத்துவதற்கு சர்வதேச சக்திகளுக்கு உதவியுள்ளது. அதே சமயம் அவர்களை விமர்சிக்கும், அல்லது எதிர்க்கும் தரப்புகளை கடும்போக் காளர்களாக காட்டுவதற்கும் இது உதவியிருக்கிறது.

## ஒரு பேப்பர்

*வணக்கம்!*

*எலெக்சன் முடிஞ்சிட்டுது, இனியெண்டாலும் அரசியலைக் குறைச்சு மற்ற விசயங்களையும் பிரசுரியுங்கள் என்று கனபேர் சொல்லியிருக்கினம். நாங்களும் அதைத்தான் விரும்பிறம். இனி உங்கடை கையிலைதான் மிச்சமிருக்குது.*

*மற்றது, இளந்தாரிப் பெடி பெட்டையளை ஆசிரியர் குழுவிலை சேர்த்து அவையளின்ரை விருப்பதுக்கு ஏற்றமாதிரியும் **ஒரு பேப்பர்** ரை கொண்டுவரோணும் எண்டு சொல்லியிருந்தம். அதை மறந்திடாதேங்கோ. அவையளையும் சேர்த்தால்தான் வித்தயாசமான விசயங்களைக் கொண்டு வரலாம்.*

***ஒரு பேப்பர்** க்கு சமயம், சமயவிழாக்கள் பற்றி எழுதிற ஆட்கள் கொஞ்சம் தயங்கித்தயங்கித்தான் எழுதிற மாதிரிக் கிடக்கு. எங்கை போடாமல் விட்டுவாங்களோ எண்ட ஐமிச்சம் சிலருக்கு இருக்குது. அதாலை சமய விசயமாய் எழுதிறவை “ஏலுமெண்டால் போடுங்கோ” எண்ட கணக்கிலைதான் சலிப்போடை எழுதி அனுப்பிகினம். இதிலை நாங்கள் ஒண்டைச் சொல்லோணும். நாங்கள் ஒண்டும் எந்தச் சமயத்திற்கும் எதிரான ஆட்கள் இல்லை. இன்ன சமயத்தை திட்டினால்தான் எங்களையும் ‘முற்போக்குகள்’எண்ட பட்டியலிலை போடுவினம் எண்டு திட்டம்போட்டும் நாங்கள் பேப்பர் அடிக்கேல்லை. நாங்கள் எந்த சமயத்திற்கும் எதிரும் இல்லை அதே சமயம் சமயவெறி பிடிச்சு அலையவுமில்லை. மக்களுக்கு சேரவேண்டிய தகவல்கள், கருத்துகள் எண்டால் தாராளமாய் எழுதி அனுப்புங்கோ. ஆனால் ஒரு விசயத்திலை கவனமாயிருங்கோ, உபதேசம் செய்ய வெளிக்கிட்டாதேங்கோ, புண்ணியம் கிடைக்கும். சுருக்கமாய் சொன்னால் சமய நம்பிக்கை பற்றி எழுதிற கட்டுரையும், சமய நம்பிக்கையை மறுத்து எழுதுகிற கட்டுரையும் எங்களைப் பொறுத்தவரை ஒண்டுதான்.*

*கோயிலிலை பிரச்சனை, பள்ளிக்கூடத்திலை பிரச்சனை, இதுகளை எழுதித் தந்தால் போடுவியளோ என்று பலர் கேட்கிறார்கள். தாராளமாகப் போடலாம் ஆனால் உங்கடை தொடர்பு விபரங்களை எங்களுக்கு தர வேணும். இப்பிடிச் சொன்னால் அதுக்குப்பிறகு ஆட்களின்ரை சிலமனை காணக் கிடைக்குதில்லை. பிரச்சினையை வெளியாலை கொண்டு வாறதிலை உங்களுக்கு இருக்கிற அக்கறை மாதிரி, இப்பிடியான விசயங்களிலை நாங்களும் பொறுப்போடை நடக்க விரும்பிறம்.*

*பூராயம் பகுதிக்கு கடிதங்களை அனுப்பிறவை புனைபெயரைப் பயன்படுத்தலாம் ஆனால் அவர்களது தொடர்பு விபரங்களை எங்களுக்கு தெரியப்படுத்த வேணும். இந்த தொடர்பு விபரங்கள் யாருடனும் பகிரப்படமாட்டாது என்பதனை நாங்கள் உறுதிப்படுத்துகிறோம். வழி தெருவிலை எங்களை காணுகிற ஆட்கள் “ஆர் தம்பி இந்தப் பெயரிலை எழுதிறது?” எண்டு கேட்டால் அதுக்கு நாங்கள் பதில் சொல்லமாட்டம். அப்பிடியில்லை எண்டு நீங்கள் ஆய்க்கினைப்படுத்தினால் நாங்கள் சொல்கிற விபரம் உண்மையாக இருக்காது. தயக்கமின்றி தங்களின் கருத்துகளைச் சொல்லிறதுக்கும் நீங்கள் கொஞ்சம் இடம் கொடுக்கோணும். அதுக்கு பூராயத்தை விட்டால் வேறை எங்கை இடமிருக்கு.*

*இது 248வது பேப்பர் 250வது பேப்பர் சில மாற்றங்களைச் செய்யலாம் என இருக்கிறோம்.*

*வேற என்ன.. அடுத்த பேப்பரில் சந்திப்பம்*

***ஒரு பேப்பர்** காரன்கள் + காரிகள்*

# Eezham Tamils preparing for unfolding phase of struggle



**TamilNet**

The Eezham Tamil voting pattern in August-2015 elections resembles in certain ways the 1970 elections in then Ceylon. Mr V. Navaratnam, who had understood the course of deceptive politics by genocidal Colombo and futility of Tamils alternately looking upon Sinhala political parties, came out of the ITAK (Federal Party) to form Thamizhar Chuyaadchik Kazhakam (Tamil Self-Rule Party). The Party's performance in 1970 elections was pathetically poor, overshadowed by the Federal Party and Tamil Congress. But it took just two years for the situation to change thoroughly. Colombo's new constitution in 1972 compelled both the FP and TC, as well as Tamil communists, to declare higher than what Navaratnam was envisaging – independent and sovereign Tamil Eelam, which the Tamils endorsed in the 1977 elections.

The difference then and now is that in addition to the two Sinhala political parties who can't be changed of their colours, there are the two Dadas: Washington and New Delhi directly in the field, after enacting gang-genocide on Eezham Tamils.

So far there is no precedence in post WW II history for seeing 'lasting peace' in any place entered by Washington. New Delhi is a novice to the game, spoiling its prospects and credibility by adopting genocidal route to the national question in the island.

Another difference is that Srimao's SLFP in 1970 had two-third majority to deliver a constitution, right or wrong. Today's Colombo, having not even simple majority, is not going to deliver anything of fundamental change other than serving outside interests, which itself is going to be a worse crisis than the 1972 constitution.

So far there is no precedence in post WW II history for seeing 'lasting peace' in any place entered by Washington. New Delhi is a novice to the game, spoiling its prospects and credibility by adopting genocidal route to the national question in the island.

For the national question of the Tamil homeland covering nearly one-third of the island, the TNA with its 16 members is not going to achieve anything in the 225-strong congenitally genocidal parliament.

Ever since the British introduced universal enfranchisement under a unitary State in 1931, the fall of percentage in Tamil membership from the then State Council to today's parliament would itself evidence to the structural genocide that took place over 9 decades. A single illustrative example is Trincomalee district.

The difference then and now is that in addition to the two Sinhala political parties who can't be changed of their colours, there are the two Dadas: Washington and New Delhi directly in the field, after enacting gang-genocide on Eezham Tamils.

This month's elections was a long-prepared engineering of strategic partners and naturally that should show results to their satisfaction. But, what is going to be delivered only will soon tell whether bragging about getting endorsement from the people is premature or not.

Tamils, long-experienced in the deceptions of electoral politics and games of geopolitics, should be prepared for the next line of substantial polity in showing democratic will. The occasion would come soon.

In the given circumstances of Eezham Tamils there is much more noble to do on the ground than engaging in the deliberations of 'set agendas' in Colombo's parliament, even though the historical responsibility of honestly reflecting the fundamentals of the struggle through the recognition of elected representation can't be underestimated.

This month's elections was a long-prepared engineering of strategic partners and naturally that should show results to their satisfaction.

A new experience faced by Eezham Tamils since 2009 is the hijack capacity and leadership-simulating capacity of the ultimate culprits. If the nation is not careful enough in identifying and strengthening right political shades and personalities, it will be under the constant pressure of keeping vigilance and generating new leaders every time the old ones are hijacked or their simulation is exposed.

# Just how electable is Jeremy Corbyn, really?



By Leo Barasi

Whenever I see a picture of Jeremy Corbyn, I find myself smiling. He's obviously a decent man, hard-working, straight-talking and different from most leading politicians. It's easy to see why he's unleashed such enthusiasm, with overflowing rallies and polls suggesting he could win the leadership ballot without even needing second preferences.

But, how representative of the general public are the people who are enthused by Corbyn? Because if they're unusual in their reaction to the Islington North MP, the fact that he's likely to win an election of Labour's supporters wouldn't tell us much about how he would do in a general election. Indeed, one of the chief criticisms of Corbyn is that the public would find him unelectable.

If Labour under Corbyn would be unelectable it couldn't do the kind of things the last Labour government did, like introducing the minimum wage, creating the Department for International Development, massively investing in the NHS, introducing devolution to Wales and Scotland, establishing Civil Partnerships and passing the Climate Change Act.

You might notice that the Tories now support all those things. That's because the other great advantage of being in power is that you set the boundaries of debate, making changes that the next government can't easily undo. Labour's period in power made it impossible for the Tories to explicitly oppose the minimum wage, foreign aid, equal love, tackling climate change, and so on.

On the flip side, if Corbyn would make Labour unelectable, the Tories would not only be able to do all the things they can while in power, but also to shift the debate further to the right. This is what Osborne has done with the benefits cap: from being unthinkable a few years ago, it is now widely accepted in policy debates.

So, an unelectable Labour leader would mean Labour couldn't do the kind of things it does when in power, while the Tories would be free to do the things they want to do and to push the debate further to the right. This suggests that it would be significant if some candidates have a reasonable chance of forming a Labour government, while others have little chance. With this in mind, how confident can we be that Corbyn would make it much harder for Labour to form a government?

The case for it seems strong.

Firstly, it's much easier for Labour to form a government if it wins votes from the Tories than from other parties. The new leader has to gain 100 seats relative to the Tories, even before boundary changes (which would make victory even harder). There are far too few Green voters available for this to be possible with just them. Even with some votes back from the SNP, gains purely from the left wouldn't be enough. Ukip voters and non-voters can't easily be combined with Green and SNP voters either as they generally have quite different views from their more liberal counterparts. On the other hand, Labour would gain 112 seats relative to the Tories with a swing of less than 6pts: a challenge, but not an unprecedented one.

The second problem is that the main reasons people didn't vote Labour in May look hard to resolve with a more left-wing leader. The top two reasons people gave for voting Tory both related to the perception that the economy was being fixed, while the top reason for not voting Labour was the view the party couldn't be trusted on the economy. People thought Labour meant well – they just didn't think it could deliver on its promises. For Labour to win in 2020, it needs either to regain trust on the economy to stop the economy being voters' top concern.

A common objection to people arguing that Labour should improve its economic credibility is the question, why would people vote for Tory-lite Labour when they can vote for the real thing? But this misrepresents the appeal of parties being seen as economically credible. Just like you wouldn't choose a cafe only because it has a 5-star hygiene rating, most people don't vote for parties just because they trust them to manage the economy. Yet, they're repelled from parties they can't trust on the economy. Many people naturally prefer Labour to the Tories but won't vote for the former until they're confident Labour can manage the economy. Once Labour has regained this trust, it can talk about the things that make it different from the Tories. This isn't about turning Labour into Tory-lite, it's about turning the Tories into Toxic Labour.

But how about the evidence that Corbyn wouldn't be such a disaster for Labour?

It's fair to be sceptical of opinion polls after their epic fail in May – but we shouldn't let scepticism turn into denial. They were wrong at the election in the crucial gap between Labour and the Tories, though only by a couple of points each way. Those few points mattered enormously for predicting the election so we were right to be angry about the polls. But even if the recent polls about the reasons for Labour's defeat are wrong by twice as much as the election polls were, they would still point to the same conclusion that Labour's lack of economic credibility cost the election.

If Labour under Corbyn would be unelectable it couldn't do the kind of things the last Labour government did, like introducing the minimum wage, creating the Department for International Development, massively investing in the NHS, introducing devolution to Wales and Scotland, establishing Civil Partnerships and passing the Climate Change Act.

Equally, some polls show Corbyn is reasonably popular as a potential Labour leader and prime minister. But these polls are pretty much meaningless as guides to future opinion. Currently, most people have very little idea who the candidates are. Their views will change once they get to know the candidates, particularly when they hear the attacks fired at them by the Tories and the right-wing media.

So far, the Mail, Sun and Telegraph (and others) have been remarkably quiet about Corbyn. That will change dramatically if he's elected. Expect the public to be carpet-bombed with depictions of Corbyn as an old-style socialist, who wants to raise your taxes, open the floodgates to immigrants and destroy the economy. Just as with Miliband – painted as a weird lefty who knifed his own brother – these impressions of Corbyn would be widely heard and effective. Opinion of him would almost certainly worsen among people who already doubt Labour on the economy.

You might notice that the Tories now support all those things. That's because the other great advantage of being in power is that you set the boundaries of debate, making changes that the next government can't easily undo.

The final argument that Corbyn could still lead Labour into government is the hardest to refute: events. The Tories could implode over the EU referendum, leaving an open goal. The economy could fall off a cliff, creating conditions like those that took Syriza to power. The public could change their mind about deficit-reducing economics, and embrace a higher tax-and-spend alternative. All of these are possible, yet none seem likely.

Equally, some polls show Corbyn is reasonably popular as a potential Labour leader and prime minister. But these polls are pretty much meaningless as guides to future opinion. Currently, most people have very little idea who the candidates are. Their views will change once they get to know the candidates, particularly when they hear the attacks fired at them by the Tories and the right-wing media.

So those now considering putting Corbyn at the top of their ballot have a calculation to make. Presumably they prefer his policies and values to those of his rivals. But presumably they also prefer Labour governments to Tory governments (if not, they shouldn't be voting in a Labour election). The choice is between, on the one hand, a Corbyn-led Labour Party that has only a very slim chance of stopping the Tories extending their run of power to 15 years and pushing the agenda further to the right, and on the other hand, a party led by any of the other candidates, which is much more likely to restrain the Tories' extremes and has a decent chance of being in power in 2020 to follow up on the things the last Labour government got right.

*Courtesy: New Statesman*

ஒரு பேப்பர் உங்கள் கைகளில் தவழுவதற்கு உறுதுணையாய் நிற்பவர்கள் . . .

BBK Partnership
Croydon.................. 020 8150 9950

Meera Arnold & Co
Southgate............... 020 8882 2333

Aananthi Acca [Rayners Park]
Dr. Ratneswaran [Bromley]
R. Ganeshalingam [Purley]
Subramaniam [Eastham]
Sinnakutty [Walthamstow]
Babu [Thornton Heath]
Sriskanthan [Kensal Rise]
Vithuran [Croydon]
Bobby [Sutton]
P. Pathmanathan [Wembley]
Peter Jesudasan [Rayners Park]
T.Selvaratnam [Wembley]
K.Durairajah [Greenford]

இந்த வெற்றிடத்தை நிரப்புவது உங்கள் கைகளில்தான் உள்ளது.

ஒரு பேப்பர் தொடர்ந்து வெளிவர உங்கள் தயவை நாடி நிற்கிறது. உங்களால் முடிந்த சிறிய பங்களிப்பை தந்துதவுமாறு அன்புடன் கேட்கின்றோம்.
நன்றி.

Name: **ORU PAPER Ltd**
Bank: **HSBC**
A/C: **02211556**
S/C: **40-07-04**

ஒரு பேப்பர்
ORU PAPER

எண்ணும் எண்ணங்கள் யாவினும் வெற்றி!

ஆசிரியர் குழு:

பிரித்தானியா
அ.இரவி - மணி - அகிலன் மாதவன்

கனடா
தயா - அரவிந்தன் - சிந்து

பொறுப்பாசிரியர்
- கோபி -

விளம்பரம்
அஜந்தா

அச்சு
தர்சினி (கனடா) - சுகன்யா

வடிவமைப்பு
மயூரன் - யுகன்

முகப்பு வடிவமைப்பு
seven zero graphics

விளம்பர வடிவமைப்பு
ரஜீவன் - மாயா - சாரங்கன்

தமிழ் எழுத்துரு உதவி
சுரதா யாழ்வாணன்

நிதி – நிர்வாகம்
அஜந்தா

வழங்கல்
உதயகுமார்-ரூபன்-பிரகாஸ்

உங்கள் தொடர்புகட்கு:

தொலைபேசி (Tel)
லண்டன் 020 7043 4310
கனடா 416 613 2850

தொலைநகல் (Fax)
லண்டன் 020 7043 4312
கனடா 416 438 7855

ஆக்கங்கள் மற்றும் அஞ்சல்வழித்தொடர்புகட்கு:

பணிமனை முகவரி
ORU PAPER
G11 LOMBARD HOUSE
2 PURLEY WAY
CROYDON, CR0 3JP

மின்னஞ்சல்:
info@orupaper.com
இணையம்:
www.orupaper.com

*'Oru Paper' is a bi-lingual paper published from London by Oru Paper Ltd. on the 1st and 3rd Fridays of each month The views expressed are those of the contributors and do not reflect the views of editors or its publishers. All information including advertisements are presented in good faith. However the general public is informed that the publisher accepts no responsibility for any loss or damage whatsoever caused by errors or omissions.*

# ஐ.நா அறிக்கை மக்களுக்கு ஏமாற்றத்தைக் கொடுக்குமா ?

**- பவித்திரா நந்தகுமார்**

இறுதியுத்தம் நடைபெற்ற காலத்தில் வன்னியில் வாழ்ந்தவரும் தற்போது லண்டனில் வசிக்கும் பதினாறு வயதான செல்வி பவித்திரா நந்தகுமார் ஐ.நா. மனிதவுரிமைச்சபைக்கு தான் வழங்கிய சாட்சியம் தொடர்பாக எழுதியது.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை ஆணையத்தின் அழைப்பில் இரு தினங்களாக எங்கள் சாட்சியங்கள் பதியப்பட்டன. அதில் இறுதி யுத்தத்தின் போது அதாவது 2009-5-15, 16, 17,18 ஆகிய நாட்களில் நடந்த கொலைக்களங்கள் தொடர்பான ஆவணங்கள் மீதான விசாரனை நடாத்தப்பட்டது. 2013ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 28ம் திகதியன்று எனது வாக்குமூலம், மற்றும் சில ஆவணங்கள், சில கானொளிகள் என்பன அவைக்கு வழங்கப்பட்டன. இரண்டு வருடங்களாக எந்த விசாரனையும் இன்றி இழுத்தடித்த சபை இப்போது அழைத்திருந்தது.

அங்கே பல்லாயிரக்கணக்கான பதிவுகளும், ஆதாரங்களும் இத்தனை ஆண்டுகளாக தூசி படிந்த நிலையிலேயே காணப்படுகின்றது. இத்தனை ஆதாரங்கள் ஆவணங்கள் இருந்தும் இது வரை எந்த நடவடிக்கையும் எடுக்காமல் இருக்கும் ஐ.நா வெறும் பூச்சாண்டி காட்டுகிறது என்பது உண்மையே.

*எங்கள் சாட்சியங்கள்-*

* யுத்த காலத்தில் நீங்கள் அங்கே இருந்தீர்களா?

#ஆம் இருந்தோம் இல்லாமலா இத்தனை ஆதாரங்கள் எங்களால் வழங்கப்பட்டது.

* நீங்கள் எப்படி அந்த களத்தில் ஒரு சிறுமியாக இருந்தீர்கள்?

#எங்கள் குடும்பத்தில் அனைவரும் போராளிகள். அதில் அம்மா அப்பா இருவரும் இறந்த நிலையில் என்னோடு இருந்தவர் அண்ணா மட்டுமே. அவர் ஒரு மருத்துவ பிரிவு போராளி. அதனால் என்னால் எந்த இடத்திற்கும் போக முடியவில்லை.

*உங்களால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள காணொளியானது பலர் மயக்கமுற்ற நிலையிலும், இறந்த நிலையிலும், காயமுற்ற நிலையிலும் காணப்படுகிறார்கள். அதே நேரம் அதில் உள்ளவர்களில் நீங்களும் காயப்பட்டுள்ளீர்கள். அது தெளிவாக தெரிகிறது. இது எப்படி நடந்தது?

#மே 17 பகல் பல பிரிவுகளாக புலிகளும் மக்களும் பிரிந்து செல்ல வேண்டி எங்களுக்கு பணிக்கப்பட்டது. அதில் நாங்களும் ஒரு பிரிவாக சென்றோம். சென்ற வேளையில் தான் இந்த அசம்பாவிதம் இராணுவ பகுதியில் இருந்து நடாத்தப்பட்டது. அதில் நாங்கள் மெத்தமாக 47 பேருக்கும் மேலானவர்கள் இருந்தோம். அதில் எத்தனை பேர் உயிர் தப்பினோம் என்று தெரியாது. காரணம் நாங்கள் இராணுவ பகுதியை நோக்கி சென்ற வேளையில் அவர்கள் எங்களை நோக்கி நடாத்திய பாரிய தாக்குதல் அது. நாங்கள் நிராயுதபாணிகளாக சென்ற வேளை கண்மூடித்தனமான தாக்குதலை இராணுவம் நடாத்தியது. அதில் இரசாயண பாவனை அதிகம் எனலாம் இதனாலேயே பலர் மயக்கமுற்ற நிலையில் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

* வெள்ளைக்கொடி விவகாரம் பற்றி ?

# அதுபற்றி எனக்கு முழுவிபரம் தெரியாது. அதில் புலிகளின் உயர்மட்டத்திற்கு எந்தளவு தொடர்பு இருந்ததாக எனக்கு தெரியாது.

* அங்கு பொது மக்கள் புலிகளால் வழிமறித்து திருப்பி அனுப்பினார்களா?

* இதற்கு பதில் எனக்கு தெளிவாக கூற முடியும். காரணம் மக்கள் பாதுகாப்பு சந்தேகம் வந்தவேளை புலிகள் மக்களை போக எந்த தடையும் விதிக்கவில்லை. மாறாக மக்கள் வெளியேற அரச தரப்பு இடம் கொடுக்கவில்லை என்பதே உண்மை. அந்தளவு உக்கிரமான தாக்குதல் நடாத்தப்பட்டது.

* உங்கள் பாதுகாப்பு நிலை உணர்ந்த நீங்கள் எதற்காக அங்கே இருந்தீர்கள்?

#பாதுகாப்பு நிலை என்பது புரியவில்லை.....

* உங்களுக்கு பாதுகாப்பற்ற நிலையினை நீங்கள் உணர்ந்தும் ஏன் அங்கே இருந்தீர்கள்?

#அதற்கான பதில் என்னால் முன்பே வழங்கப்பட்டுள்ளது. நாங்கள் அனைவரும் புலிகளாகவே அரசு பார்த்து கொன்றது.

* லண்டன் வந்தது எப்படி?

மே18 தப்பிய சிலரோடு அதாவது அண்ணா உட்பட இரண்டு தளபதிகள் மற்றும் அவர்கள் இரண்டு பிள்ளைகளுமாக ஒரு அகதி முகாமில் இருந்து 20 அன்று மட்டக்களப்பை அடைந்து அங்கிருந்து ஒரு மாத இடைவெளியில் லண்டன் பயணமானோம். எங்கள் கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்பட்டு குடியுரிமை வழங்கப்பட்டது.

* சரி தற்போது இந்த காயம் எப்படி?

# முள்ளிவாய்க்கால் காயம்தான் இன்னும் குணமாகவில்லை. இது நான்காவது அறுவை சிகிச்சை.

* தற்போது ஏதாவது உதவி தேவையா?

#வேண்டாம். நீதி மட்டுமே வேண்டும்.

* உங்கள் வயது?

#16

* ஐ.நா சபையின் பெண்களுக்கான உரிமையகம் பற்றி தெரியுமா? இணைய விருப்பமா?

உடன் பதில் கூறமுடியாது. அதற்கு காலம் இருக்கிறது இன்னும்.

இவை என்னிடம் வினவப்பட்ட சில கேள்விகளும் பதில்களும். இந்த விசாரணை என்பது ஒரு கண் துடைப்பே. இப்படி ஒரு மணித்தியாலத்திற்கு மேலாக பல கேள்விகள் வினவப்பட்டது. சில இரகசியத்தன்மையும் பாதுகாப்பு தன்மையும் கருதி பதிவிடவில்லை.

ஐ.நா அறிக்கை செப்டெம்பர் மாதம் பல ஏமாற்றங்களை மக்களுக்கு வழங்கும் என்பது அங்கே கடைப்பிடிக்கப்படும் அசமந்தப்போக்கில் தெரிகிறது.

# வாழ்ந்து படிக்கும் பாடங்கள்

## கோபத்தையும் பயன்படுத்தலாம்!

"சினம் என்னும் சேர்ந்தாரைக் கொல்லி" என்று திருவள்ளுவர் கூறுவார். பொதுவாக, கோபம் எங்கே எல்லாம் சேர்கிறதோ அங்கெயெல்லாம் அழிவு தான். முக்கியமாய் அழிந்து போவது மன நிம்மதி. அதன் பின் கோபத்தால் உந்தப்பட்டு செய்யும் செயல்கள் எல்லாமே மேலும் அதிக அழிவை ஏற்படுத்தி நிலைமையை மோசமாக்கி விட்டே தணியும். இது பொது விதி. ஆனால் கோபம் கூட முறையாகப் பயன்படுத்தப்பட்டால் நல்ல மாற்றங்களையும் விளைவுகளையும் ஏற்படுத்த வல்லது. அது எப்படி என்பதை சில உதாரணங்களுடன் பார்ப்போம்.

1943ல் ஒரு நாள் அமெரிக்க கருப்பர் இனத் தலைவரான மார்ட்டின் லூதர் கிங் (ஜுனியர்), டுப்ளின் நகரில் ஒரு பேச்சுப் போட்டியில் கலந்து கொண்டு அட்லாண்டாவிற்கு பஸ்ஸில் திரும்பி வந்து கொண்டிருந்தார். அவருடன் அவருடைய ஆசிரியை ஒருத்தியும் பயணித்துக் கொண்டிருந்தார். வழியில் சில வெள்ளையர்கள் பஸ்ஸில் ஏறினார்கள். அவர்களுக்கு அமர இடம் இல்லாமல் போகவே பஸ் டிரைவர் மார்ட்டின் லூதர் கிங்கையும், அவரது ஆசிரியையும் எழுந்து அந்த வெள்ளையர்களுக்கு உட்கார இருக்கையை விட்டுத் தரச் சொன்னார். மார்ட்டின் லூதர் கிங்கிற்கு அது அநியாயமாகவும், அவமானம் தருவதாகவும் இருந்தது. ஆனால் அந்தக் காலத்தில் அது அடிக்கடி நடக்கக் கூடிய நிகழ்ச்சி ஆனதால் அவருடைய ஆசிரியை உடனடியாக எழுந்து விட்டார். மார்ட்டின் லூதர் கிங் வேறு வழி இல்லாமல் தயக்கத்துடன் எழுந்தார். அவர் எழத் தாமதமானதால் பஸ் டிரைவர் அவரைக் கடும் வார்த்தைகளால் திட்டினார். அது அவரை மேலும் கோபமூட்டியது. 90 மைல் தூரத்தை அவர் பஸ்ஸில் நின்றபடியே பயணிக்க நேர்ந்தது.

அந்த நிகழ்ச்சியைப் பற்றி தன் சுயசரிதையில் பிறகு எழுதிய போது மார்ட்டின் லூதர் கிங் இப்படி குறிப்பிட்டார். "என் வாழ்வில் நான் மிக அதிக கோபம் கொண்ட நாள் அது. அந்த இரவை என்னால் என்றுமே மறக்க முடியாது". ஒடுக்கப்படும் கருப்பு இன மக்களுக்காக அவர் குரல் கொடுக்க அந்த நிகழ்ச்சி ஒரு விதையாக அமைந்தது என்றால் அது தவறாகாது.

அந்தக் கோபத்தை அவர் தணித்துக் கொள்ள அவர் பலரும் நாடும் வழிகளை மேற்கொள்ளவில்லை. தானும் கண்டபடி திருப்பி அந்த டிரைவரைத் திட்டவோ, தாக்கவோ முனையவில்லை. ஒரு மத போதகராக வாழ்க்கையை ஆரம்பித்த அவருக்கு அந்த வழிகளில் மனம் செல்லவில்லை. தனிப்பட்ட விதத்தில் அதை எடுத்துக் கொள்ளாமல் கருப்பர்களுக்கு தொடர்ந்து நிகழும் அவமானமாகக் கண்ட அவர் கோபம் அந்த தவறான அநீதியான முறையையே ஒழிக்க வழிகளைத் தேடியது. 1955ல் மாண்ட்கோமரி பஸ் புறக்கணிப்பு போராட்டத்தைத் தலைமை தாங்கி பெருமளவில் நடத்திய அவர் பல எதிர்ப்புகளைக் கண்டார். அரசாங்கம் சின்ன சின்ன வழக்குகளிலும் அவரை சிக்க வைத்து தடை செய்யப்பார்த்தது. அவருடைய சக கருப்பர் தலைவர்களோ அவரது அறப் போராட்டம் பிடிக்காமல் அவரை எதிர்த்தனர்.

இரண்டு பக்கங்களிலும் எதிர்ப்பு அதிகமாக இருந்தது போதாது என்று வெள்ளைத் தீவிர வாதிகள் தொடர்ந்து தாக்குதல்கள் நிகழ்த்தினார்கள். 1956 ஆம் ஆண்டு அவர் வீட்டிலேயே வெடி குண்டு வெடித்தது. அதிர்ஷ்டவசமாக அவரும் அவர் குடும்பத்தினரும் உயிர் தப்பினார்கள் என்றாலும் அவர் கோபம் அதிகரித்தது. கருப்பர்களில் தீவிரவாதத்தை ஆதரிக்கும் தலைவராக அவரும் மாறி விடும் படியான மனநிலைக்குத் தானும் வந்து விடுமோ என்று கூட சந்தேகப்பட்டதாக அவர் தன் சுய சரிதையில் சொன்னார்.

ஆனால் அந்தக் கோபத்தையும் தனிப்பட்ட விதத்திலும், தனிப்பட்ட மனிதர்கள் மீதும் எடுத்துக் கொள்ளாமல் அப்போதிருந்த சமூக முறையிலேயே குற்றம் கண்ட அவர் அந்த முறையை சமூகத்திலிருந்து அகற்ற போராட்டத்தில் இறங்கினார். அதில் கடைசியில் வெற்றியும் கண்டார். 1964 ஆம் ஆண்டு சத்தியாகிரக வழியில் அவர் அந்த சமூக அநீதிக்கு எதிராக போராடி வெற்றி கண்டதற்காக சமாதான நோபல் பரிசு பெற்றார். 1968 ல் அவர் படுகொலை செய்யப்பட்ட போதும் அவர் தான் எடுத்துக் கொண்ட போராட்டத்தில் வெற்றி பெறறதை வரலாறு இன்றும் பாராட்டுகிறது.


பஸ்ஸில் நின்று கொண்டே பயணிக்க வைத்த டிரைவரை வரை வாயிற்கு வந்தபடி திட்டியோ, இறங்கிய பிறகு கல்லெடுத்து எறிந்தோ, பிறகு எதாவது ஒரு வெள்ளையருக்கு ஏதாவது தொந்தரவு கொடுத்தோ தன் கோபத்தை அவர் தீர்த்துக் கொண்டிருந்தால் தனிமனித கோபத்தைத் தீர்த்துக் கொண்ட ஒரு சராசரி மனிதனின் செய்கையாய் போயிருந்திருக்கும். அமெரிக்க கருப்பர்களுக்கு சம உரிமை கிடைத்த சரித்திரம் உருவாகி இருக்காது. கோபம் நம்முள் பெரியதொரு சக்தியை உருவாக்க வல்லது. உறுதியாகச் செயல்பட வைக்கும் சக்தி வாய்ந்தது. கோபம் இருக்கும் நேரத்தில் செயல்படாமல் இருப்பது தான் மிகவும் கஷ்டம். அப்படிப்பட்ட நேரத்தை முறையாகப் பயன்படுத்தினால் அந்தக் கோபமும் நல்ல சிறப்பான மாற்றங்களை ஏற்படுத்த உதவும்.

இது பெரும் தலைவர்களுக்குத் தான் முடியும் என்பதல்ல, சாதாரண மனிதர்களுக்கும் முடிந்தது தான். பல சமயங்களில் கோபம் இது போல் பெரிய உந்து சக்தியாக அமையக்கூடும். பெரிய மாற்றங்களுக்கான பிள்ளையார் சுழியை அது போடக் கூடும். அதனால் அர்த்தமில்லாத கோபங்களை அவ்வப்போதே விட்டுத் தள்ளுங்கள்.

அர்த்தமுள்ளதாய் கோபம் வரும் போது அதனை முறையாகப் பயன்படுத்திக் கொள்ளுங்கள். ஒரு தீர்வையோ, நல்ல மாற்றத்தையோ உருவாக்க முடிந்தால் கோபமும் நல்லதே அல்லவா?

- என்.கணேசன்

# மேற்கின் ஒழுங்கிற்குள் சிறிலங்கா : பத்து வருட வேலைத்திட்டம் நிறைவுக்கு வருகிறது



**கோபி**

*ஒரு பேப்பர்*

சிறிலங்காவின் நாடாளுமன்றத் தேர்தல் முடிவுற்று, இன்று இரணில் விக்கிரமசிங்க பிரதம அமைச்சர் பதவியை ஏற்றிருக்கிறார். முன்னாள் ஜனாதிபதி இராஜபக்சவினால் ஆட்சியமைக்க முடியாமற் போனமை, விருப்பு வாக்களிப்பில் முன்னாள் அமைச்சர்கள் தோல்வியடைந்தமை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வெற்றி, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தோல்வி எனத் தேர்தல்முடிவுகள் பற்றிய பல்வேறு விடயங்கள் ஊடகங்களிலும் சமூக வலைத்தளங்களிலும் பேசுபொருளாக அலசப்படுகின்றன. 2005ம் ஆண்டு நொவெம்பர் பதினேழாம் திகதி நடைபெற்ற சிறிலங்காவின் அதிபர் தேர்தலில் தோல்வியடைந்த இரணில் விக்கிரமசிங்க பத்து வருடம் கழித்து மீண்டும் முன்னரைவிடப் பலம்பொருந்திய பிரதமர் பதவியை கைப்பற்றியிருக்கிறார். கழிந்துபோன பத்து வருடங்களில் சிறிலங்காவை ஆட்சிசெய்த மகிந்த இராஜபக்சவின் அரசாங்கம் இரணிலுக்கும், ஐக்கியதேசியக் கட்சிக்கும் மட்டுமல்லாது மேற்குலகத்திற்கும் உவப்பானதாக இருக்கவில்லை. ஆதலால் இரணிலின் வெற்றியில் மகிழ்ச்சியடையும் தரப்புகளில் ஒன்றாக மேற்குலகம், குறிப்பாக ஐக்கிய அமெரிக்கா உள்ளது. இத்தேர்தலில் அதிகூடிய விருப்பு வாக்குகளைப் பெற்று பிரதமராகியிருக்கிற இரணிலின் வெற்றியென்பது தனித்து அவரினதோ அல்லது ஐக்கிய தேசியக் கட்சியின் முயற்சியினாலே ஏற்பட்டதொன்றல்ல என்பதனையும் இதன் பின்னணியில் உலக வல்லரசு ஒன்றுக்கும் வல்லரசாக உருவெடுத்துவரும் அப்பிராந்திய நாடொன்றுக்கும் இடையிலான ஆதிக்கப் போட்டியிருந்தது என்பதனையும் பலரும் கவனத்தில் எடுக்கத் தவறிவிடுகிறார்கள்.

தேர்தல் முடிவுகள் வெளியாகியதற்கு மறுதினமான ஒகஸ்ட் 19ம் திகதி நியூயோர்க் ரைம்ஸ் பத்திரிகையில் வெளியான செய்திக் கட்டுரையொன்றில்: "ஜனாதிபதியாக இராஜபக்ச சீனாவுடன் மிக நெருக்கமான உறவுகளைப் பேணி வந்தார். இராஜபக்ச அரசாங்கம் பொருளாதாரம் மற்றும் இராணுவ விடயங்களில் சீனாவுடன் கொண்டிருந்த நெருக்கம் இந்தியாவிற்கும், ஐக்கிய அமெரிக்காவும் எச்சரிக்கைவிடுப்பதாக அமைந்திருந்தது. இவ்விருநாடுகளும் வங்காள விரிகுடாவிற்கும் அரபிக்கடலுக்கும் இடையிலான கடற்பாதையில் மூலோபாய முக்கியத்துவான இடத்தில் அமைந்திருக்கும் நாடான சிறிலங்கா சீனாவுடன் நெருக்கமான உறவுகளைப் பேணுவதை விரும்பவில்லை. சிறிசேனவும், விக்கிரமசிங்கவும் இவ்விடயத்தில் தற்காலிக ஓய்வை ஏற்படுத்தி, சீனாவுடனான உறவுகளை மீளாய்வு செய்யவுள்ளனர்" எனக் குறிப்பிடப்பட்டிருந்த்து. ஜனவரி எட்டாம் திகதிக்குப் பின்னர் சிறிலங்காவுடனான அமெரிக்காவின் உறவுகள் மேம்பட்டுவருவதனை அவதானிக்கையில் இப்பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ளவை சரியான அனுமானம் என்ற முடிவுக்கு வர முடியும்.

2005ம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில், மகிந்த இராஜபக்சவை எதிர்த்துப் போட்டியிட்ட இரணில் விக்கிரமசிங்க வெற்றிபெறுவதை விரும்பிய மேற்குலகம், அத்தேர்தலில் தமிழ், முஸ்லீம் மக்களின் வாக்குகள் இரணிலுக்குச் செல்லும் என எதிர்பார்த்தது. கடந்த தேர்தலில் எவ்வாறு சிறிசேன தமிழ், முஸ்லீம் வாக்குகளால் வெற்றிபெற்றாரோ அது போன்ற வெற்றியை ரணிலுக்கு இவ்வாக்குள் பெற்றுக் கொடுக்கும் என்ற நம்பிக்கை பலருக்குமிருந்தது. ஆனால் இவ்விடயத்தில் இரணிலுக்கு உதவுவதற்கு விடுதலைப்புலிகள் மறுத்தனர். 2001 இல் இரணில் பிரதமராவதற்கு மறைமுகமாக உதவிய விடுதலைப் புலிகள் 2005இல் தேர்தலைப் புறக்கணிக்குமாறு தமிழ் மக்களைக் கோரினர். மேற்குலகத்துடன் இணைந்து ஒரு சர்வதேச வலைப்பின்னலுக்குள் விடுதலைப்புலிகளை விழுத்த இரணில் எடுத்த முயற்சிகளாலேயே அவரை ஆதரிப்பதற்கு விடுதலைப்புலிகள் தயாராக இருக்கவில்லை. மாறாக மேற்குலகத்தின் ஒழுங்கிற்குள் நிற்காது, புதிதாக உருவெடுத்துவரும் பிராந்திய சக்திகளின் ஒழுங்கிற்குள் செல்ல முனைந்த மகிந்த இராஜபக்ச வெற்றி பெற்றால், மேற்குலகத்துடன் அவர் முரண்பட்டுக்கொள்வார், அதன்மூலம் சர்வதேச வலைப்பின்னல் நெருக்கடியிலிருந்து வெளிவரக்கூடிய வாய்ப்பு ஏற்படும் என அவர்கள் நம்பியிருக்கக் கூடும். விடுதலைப்புலிகளின் செயற்பாடு மேற்கின் நிகழ்ச்சித்திட்டத்தைக் குழப்பியது. இவ்விடயத்தில் மேற்குலகத்திற்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் ஏற்பட்ட முரண்பாடுகளின் காரணமாக, ஏற்கனவே அச்சுறுத்தியபடி உடனடியாக ஐரோப்பிய ஒன்றியத்தில் தடை கொண்டுவரப்பட்டது. அதன் தொடர்ச்சியாக இறுதியுத்தத்திற்கு மறைமுகமான உதவிகளை வழங்கி விடுதலைப்புலிகளை அழிப்பதற்கு மேற்குலக நாடுகள் மகிந்த அரசாங்கத்திற்கு உதவின. இனவழிப்பு யுத்தத்தில் விடுதலைப்புலிகளும், பொதுமக்களும் அழிக்கப்பட்டபோது சர்வதேச நாடுகள் அவற்றை காணாதிருந்தமைக்கும் இதுவும் ஒரு காரணமாக அமைந்தது. தமிழினப்படுகொலையில் மேற்குலகின் பங்கு பற்றிய மேலதிக விபரங்களை ஜெர்மனி பிறீமனில் நடைபெற்ற மக்கள் தீர்ப்பாயத்தின் அறிக்கையில் காணலாம்.

முள்ளிவாய்க்கால் படுகொலைகள் நடந்தேறி, தமிழ்ப் புலிகளைத் தோற்கடித்த மன்னராக பெரும்பான்மை சிங்கள மக்களினால் பார்க்கப்பட்ட மகிந்த இராஜபக்ச 2010ம் ஆண்டில் நடந்த ஜனாதிபதித் தேர்தலில் வெற்றியிட்டினார். அவரது இரண்டாவது ஆட்சிக்காலத்தில் தோற்கடிக்கப்பட முடியாத ஒரு அரசதலைவராக அவர் உருவெடுத்திருந்தார். இவ்வருடம் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல் வரை எந்தத் தேர்தலிலும் மகிந்த இராஜபக்சவின் பொதுஜன சுதந்திர முன்னணி தோல்வியடையவில்லை. மறுபுறத்தில் ஐக்கிய தேசியக்கட்சி தொடர்ந்து பலவீனமடைந்து சென்றது. அற்றகுளத்து அன்றில் பறவைகளைப் போல் அக்கட்சியிலிருந்த முக்கியஸ்தர்கள் எதிரணிக்கு தாவிச் செல்லும் நிலையே காணப்பட்டது. கட்சிக்குள்ளேயே எதிர்ப்பினை எதிர் நோக்கி வந்த இரணிலினால் ஐக்கிய தேசியக் கட்சியை பின்னர் நடந்த எந்தத் தேர்தலிலும் வெற்றிபெற வைக்க முடியவில்லை. ஐந்து வருடம் கழித்து இரணில் விக்கிரமசிங்க பிரதமராவார் என ஐக்கிய தேசியக்கட்சியின் தீவிர விசுவாசிகள் கூட கற்பனை செய்திருக்காத நிலையிலேயே இரணில் விக்கிரமசிங்கவின் மீள்வருகை அமைந்திருக்கிறது.

கடந்துபோன பத்துவருடங்கள் இலங்கைத் தீவில் வரலாற்றில் கறைபடிந்த அத்தியாயங்களையே எழுதி வைத்திருக்கிறது. தமிழ் மக்களின் விடுதலை இயக்கம் அழிக்கப்பட்டு நூற்றிநாற்பதாயிரம் தமிழர்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள். சிறிலங்காவின் அரச தலைவர்களும், இராணுவத்தினரும் போர்க்குற்ற விசாரணையிட்டு அச்சம் கொண்டவர்களாக இருக்கிறார்கள். இக்காலத்தில் மேற்கொள்ளப்பட்ட சீனாவின் உதவியுடனான உட்கட்டுமான மேம்பாட்டு நடவடிக்கைகள் தவிர இலங்கைத் தீவின் மக்கள் பெருமைப்பட்டுக்கொள்ளக்கூடிய விடயங்கள் என எதுவும் நடந்தேறவில்லை. ஆனால் மேற்குலகமோ தனது நிகழ்ச்சித் திட்டத்தை மெதுவாக நகர்த்தி வெற்றிபெற்றிருக்கிறது.

### தமிழ்த் தரப்பின் பங்கு

சிறிலங்காவின் ஆட்சிமாற்றத்தில் தமிழ்த் தரப்பின் வகிபாகம் குறைத்து மதிப்பிடக் கூடிய தொன்றல்ல. இராஜபக்சவின் ஆட்சிக்காலத்தில் பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்ட தமிழ்மக்களுக்கு அவ்வாட்சியுடன் முரண்பட்ட மேற்குலகம் ஆபத்பாந்தவனாகத் தோன்றியதில் ஆச்சரியபட ஒன்றுமில்லை. அதனால் தமிழ்மக்களின் தேசிய விடுதலைப்போராட்டதை அழிப்பதற்கு உதவிய மேற்குலகத்தை நம்பி தமது அரசியற் செயற்திட்டங்களை தமிழ் அமைப்புகள் வகுத்தன. ஏறக்குறைய எல்லாத் தமிழ் அமைப்புகளும் ஐ.நா. மனிதவுரிமைச் சபையூடாகவே தமிழ் மக்களுக்கு நீடித்து நிற்கக் கூடிய தீர்வினை பெற்றுக்கொள்ள முடியும் என நம்பிச் செயற்பட்டுவந்தன. அண்மைக்காலத்தில் ஐ.நா. மனிதவுரிமைச்சபை கூட்டத்தொடர்கள் நடைபெறும் காலத்தில் ஜெனிவாவில் நிற்பதே ஒரு அரசியற் செயற்பாடு என்றளவில் நிலமையிருந்தது. நடந்து முடிந்த பாராளுமன்ற தேர்தல் பரப்புரைகளின்போது, ஐநா மனிதவுரமைச்சபையினால் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகள் தமது முயற்சியினாலேயே நடைபெற்றதாக சுமந்திரன் கூறிவந்தமை தமிழ் வாக்காளர்களை கவர்ந்திருக்கக்கூடும்.

தமது நிகழ்ச்சித்திட்டதினை ஏற்றுச் செயற்படக் கூடிய தமிழ்த் தலைமை ஒன்றை தமிழ்மக்களின் அங்கீகாரத்துடன் உருவாக்குவதில் மேற்குலகமும் இந்தியாவும் வெற்றிபெற்றுள்ளன என்பதனையே கூட்டமைப்பின் வெற்றி கட்டியம் கூறி நிற்கிறது. விடுதலைப்புலிகள் பலமாக இருந்த காலத்திலேயே அதற்கான சமிக்ஞைகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமையிடமிருந்து, குறிப்பாக சம்பந்தனிடமிருந்து சென்றன என்பதும், விடுதலைப்புலிகளை அழிக்கும் முயற்சிக்கு மேற்குலகம் உதவியதற்கு இதுவும் ஒரு காரணமாக இருந்தது என்பதனையும் நாம் கவனத்தில் எடுக்க வேண்டியுள்ளது.

ஆட்சிமாற்றம் முற்றுப்பெற்றுள்ள நிலையில், தமிழ் மக்களின் அரசியல் தீர்வு விடயத்தில் மேற்குலகத்தின் நிலைப்பாடு எப்படியிருக்கும் என்ற கேள்வி அரசியலில் ஈடுபாடுடைய தமிழ்மக்களிடம் எழுவது தவிர்க்க முடியாதது. இவ்விடத்தில். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவாளரான கொழும்பில் வசிக்கும் சட்டத்தரணி சி.வி. விவேகானந்தன் அவர்கள் தனது facebook இல் இட்ட நிலைத் தகவல் ஒன்றில் குறிப்பிட்டவை எதிர்கால அரசியல் நிலவரத்தைப் பற்றிய எதிர்வுகூறலாக அமைந்துள்ளது.

"சமஷ்டியோ, உள்ளக சுயநிர்ணய உரிமையோ, வட, கிழக்கு இணைப்போ, எதுவும் கொடுக்க மாட்டார்கள். நாங்கள் நூறு ரூபா கேட்டால் நல்ல குணம் படைத்த ஜனாதிபதி 25 தொடக்கம் 40 ரூபா வரைக்கும் கொடுக்க முன் வருவார். மற்றவர்கள் எதிர்ப்பார்கள். முன்னாள் ஜனாதிபதி எதிர்ப்பதில் முன் நிற்பார். எதிர்ப்பலை கண்டு கை விட்டு விடுவார் ஜனாதிபதி.

சர்வதேசம், (இந்தியாவும் கூட) கூறும், 'இப்போதைக்கு ஏற்றுகொள்ளுங்கள் பின்பு பார்ப்போம்' என்று. கூட்டமைப்பு தலை ஆட்டலாம். சர்வதேச நாடுகள் கேட்பதை இலங்கை அரசு கொடுக்க முன் வந்தால், சர்வதேசம் தமிழருக்கு 'பின்பு பார்ப்போம்' என ஏமாற்ற தொடங்கும்" இவ்வாறு அவர் குறிப்பிட்டிருந்தார்.

இத்தகையதொரு சூழலில் தமிழ் அரசியற் செயற்பாடுகள் ஒரு முட்டுச்சந்தியை வந்தடைந்திருக்கிறது என்பதை கூட்டமைப்பிற்கு வாக்களித்து வெற்றியடையச் செய்த மக்கள் அறிந்திருக்க நியாயமில்லை.


## ஒரு பேப்பர்

கிடைக்குமிடங்கள்

**New Malden**

| | |
|---|---|
| Ayngaran | 020 8949 6734 |
| Megaa Superstore | 020 8336 0061 |
| Vaaniyan | 020 8605 0434 |
| Murugan Kovil | 020 8942 4475 |
| Vaishna Superfoods | 020 8399 4488 |
| Stoneleigh Amman | 020 8393 8147 |

**Tooting**

| | |
|---|---|
| Yhaal House | 020 8767 8585 |
| Selvarajah Gold house | 020 8767 3795 |
| Niru Con.Store | 020 8672 3200 |
| Ayngaran | 020 8540 1500 |
| Suvai Aruvi | 020 8543 6266 |
| Adchaya | 020 8540 8192 |

**Croydon**

| | |
|---|---|
| Best Foods | 020 8684 6269 |
| Haran Bros | 020 8686 2552 |
| Chennai dosa | 020 8665 9192 |
| Eelam Video | 020 8664 8351 |
| Spice Land | 020 8667 1700 |

**Lewisham**

| | |
|---|---|
| Chandra | 020 8333 8680 |
| Eelam Shop | 020 8690 6545 |
| Katpagam | 020 8694 8810 |
| AJ Video | 020 8691 8888 |
| Sivan Kovil | 020 8318 9844 |
| KRS Supermarket | 020 8297 9432 |
| Best Food | 020 8692 9811 |

**Eastham**

| | |
|---|---|
| Seelans | 020 8471 5733 |
| Sakthi Cash & Carry | 020 8394 4560 |
| Murugan Temple | 020 8478 8433 |
| Station Super Store | 020 8503 4711 |
| Best Food | 020 8552 9578 |
| Saiva Munneta Sangam | 02085144732 |
| Akilan Enterprise | 020 8548 0033 |
| Anjappar | 020 8552 1155 |

**Ilford**

| | |
|---|---|
| Vinnayagar Kovil | 020 8911 8934 |
| Nathan | 020 8514 1744 |
| Angels | 020 8553 0490 |
| Sri store ltd | 020 8553 7737 |

**Edmonton**

| | |
|---|---|
| New Kannan Stores | 020 8884 4979 |
| Sayas | 020 8805 9529 |
| Nagapoosani Temple | 020 8884 3333 |

**Walthamstow**

| | |
|---|---|
| Vinayagar Kovil | 020 8527 3819 |
| Kumarans | 020 7609 1912 |
| Prabas | 020 8509 3322 |

**Harrow**

| | |
|---|---|
| Tsk food & Wine | 020 7622 4258 |
| North Harrow C&C | 020 8863 6160 |
| Prabhas | 020 8866 0977 |
| South Harrow F&W | 020 8423 6321 |
| Best foods | 020 8423 9933 |
| Sambal Express | 020 8799 7171 |

**Wembley**

| | |
|---|---|
| Malar Super Market | 020 8795 5797 |
| Ganapathy C & C | 020 8795 4627 |
| Best foods | 020 8900 0100 |
| Vahizan Disc | 020 8795 0648 |

**Ealing**

| | |
|---|---|
| Amman kovil | 020 8810 0835 |

**Greenford**

| | |
|---|---|
| Ambiha | 020 8813 0967 |

**Coventry**

| | |
|---|---|
| Eellakanthan Temple | 02476663554 |

**South hall**

| | |
|---|---|
| Thamilini C & C | 020 8606 9900 |
| Abi Fast Food | 0208 813 9494 |
| Palm Palace Restaurant | 020 8574 9209 |
| Spicy Palace Restaurant | 020 8574 4087 |
| Luxmys C & C | 020 8571 4599 |
| Tamilan C & C | 020 8561 8174 |
| Lady Margret | 020 8571 4434 |

உ
கற்பகபதி



# வோல்தம்ஸ்ரோ கற்பகபதி ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலயம்

# 14 ஆவது மகோற்சவ விஞ்ஞாபனம் 2015

## 31.08.2015 திங்கட்கிழமை முதல் 16.09.2015 புதன்கிழமை வரை

இடர் களைந்து இன்னருள் புரியும் ஸ்ரீ கற்பக விநாயகப் பெருமான் ஆலயத்தில் நிகழும் மங்களகரமான மன்மத வருட மகோற்சவம் மேற்கண்ட திகதிகளில் நடைபெற திருவருள் கூடியுள்ளது.

## வழிபாட்டு நிகழ்ச்சி நிரல்

30.08.2015 ஞாயிறு மாலை 5 மணிக்கு- கணபதி ஹோமம், சாந்திகள்

31.08.2015 திங்கள் காலை நிகழ்ச்சிகள்: காலை 7மணிக்கு அபிசேகம், காலை 9.30 மணி வசந்த மண்டப பூசை

பகல் 11.00 மணி : கொடியேற்றம்
31.08.2015 திங்கள் மாலை நிகழ்ச்சிகள்
மாலை 5.30 மணி: பூசை
மாலை 6.30 மணி : தம்ப பூசை
இரவு 7 மணி: வசந்த மண்டப பூசை
இரவு 8 மணி: சுவாமி திருவீதி உலா

01.09.15 முதல் 12.09.2015 வரை
காலை 8.30 மணி: பூசை
காலை 9 மணி: அபிசேகம்
காலை 11 மணி: தம்ப பூசை
காலை 11.30 மணி: வசந்த மண்டப பூசை
மாலை 5.30 மணி: மாலை பூசை
மாலை 6.30 மணி : தம்ப பூசை
இரவு 7 மணி: வசந்த மண்டப பூசை
இரவு 8.30 மணி: சுவாமி திருவீதி உலா

13.09.15 ஞாயிறு: தேர்த்திருவிழா
காலை 6.30 மணி: அபிசேகம்
காலை 7.30 பூசை
காலை 8 மணி: தம்ப பூசை
காலை 9 மணி: வசந்த மண்டப பூசை
காலை 10 மணி: தேருக்குள் எழுந்தருளல்
பகல் 11 மணி: தேர் புறப்பாடு
பிற்பகல் 1 மணி: பச்சை சாத்துதல்
பஞ்சமுக அர்ச்சனை பிராயச்சித்தம்

15.09.2015 செவ்வாய்
சங்காபிஷேகம் பூங்காவனம்
காலை 10 மணி: 108 சங்காபிசேகம்
இரவு 7 மணி: பூங்காவனம்

16.09.2015 வைரவர் மடை: இரவு 7 மணி: வைரவர் மடை

14.09.15 ஞாயிறு: தீர்த்தத் திருவிழா, காலை 7 மணி: அபிசேகம், காலை 10 மணி: வசந்த மண்டபப் பூசை,
பகல் 11 மணி: தீர்த்தம், மாலை 5.30 மணி: பூசை, மாலை 6 மணி: வசந்த மண்டபப் பூசை, திருஊஞ்சல், கொடியிறக்கம்

31.08.15 திங்கள் சரஸ்வதிக்கான உற்சவம் | 01.09.15 செவ்வாய்: வேணுகான உற்சவம் | 02.09.15 புதன்: நந்திவாத்ய உற்சவம் | 03.09.15 வியாழன்: நிருத்திய உபசார உற்சவம் | 04.09.15 வெள்ளி: சங்கீத கான உற்சவம் | 05.09.15 சனி: தூர்வா கணபதி உற்சவம் 06.09.15 ஞாயிறு: சக்தி கணபதி உற்சவம் | 07.09.15 திங்கள்: புஷ்ப கணபதி உற்சவம் | 08.09.15 செவ்வாய்: பக்தி முக்தி பாவனா உற்சவம் | 09.09.15 புதன்: வசந்த உற்சவம் | 10.09.15 வியாழன்: மாம்பழத் திருவிழா | 11.09.15 வெள்ளி: வேட்டைத் திருவிழா | 12.09.15 சனி: சப்பறத் திருவிழா | 13.09.15 ஞாயிறு: தேர்த்திருவிழா | 14.09.15 திங்கள்: தீர்த்தம் இரவு: கொடியிறக்கம்

# சதுர்த்தி கலாரூப விநாயகர் நிமஜ்ஜன

## (திருமஞ்சன தீர்த்தத் திருவிழா)

### ஞாயிறு 20.09.2015

(பிள்ளையார் ஆலயத்திலிருந்து புறப்பாடு காலை 9.00 மணி)
Clacton - on - Sea
West Road, Clacton, Essex, C015 1SE
நிகழ்வுகள்
காலை 11.00 மணி முதல் பகல் 2.00 மணி வரை
கடற்கரை வளாகத்தில் மகாபிரசாதம் வழங்கப்படும்

**Sunday 20th Sunday September 2015**
**(Lord Ganesh Leaves the Temple at 9am)**
**Clacton - on - Sea**
**West Road, Clacton, Essex, C015 1SE**
**between 11am to 2pm**
**Maha Prasadam will be provide at the sea side**

**Please Contact 02085273819 Coachs are available. Please book in advance £12 and family £30 (2 Adult, 2 Children)**

தினமும் இரவில் 8.30 மணி முதல் 9.30 மணி வரை மணிகண்டன் குழுவினரின் விசேட தவில் நாதஸ்வர கச்சேரி இடம்பெறும். அடியார்கள் அனைவரும் விழாக்காலங்களில் சைவ ஆசார சீலர்களாக எம்பெருமானை தரிசித்து வேண்டும் நல்லருள் பெற்று ஏகுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

| கொடியேற்றம் | தேர்த்திருவிழா | தீர்த்தோற்சவம் | திருக்கல்யாணம் | வரலட்சுமி பூசை |
|---|---|---|---|---|
| 31.08.2015 | 13.09.2015 | 14.09.2015 | 15.09.2015 | 28.08.15 6 வள்ளிக்கிழமை மாலை 5 மணி |

ஆவணி சதுர்த்தி 17.09.2015 வியாழக்கிழமை பகல் 9.30 மணி சங்காபிஷேகம் 1008 பாற்குட அபிஷேகம், மாலை 6.30 மணி பூஜை, இரவு 7.30 மணி வசந்த மண்டபப் பூஜை தொடர்ந்து பஞ்சமுக அர்ச்சனை சுவாமி வீதி உலா

**2-4, Bedford Road, Walthamstow, E17 4PX | TEL: 02085273819**

# அடிபணிவு அரசியலை மக்கள் ஏற்றுக்கொண்டு விட்டார்களா ?



**அதியன்**

இந்தத் தேர்தலில் ததேகூ வின் வெற்றி எதிர்பார்க்கப்பட்டதுதான். ஆனால் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் படுதோல்வி ஒரு செய்தியை எல்லோருக்கும், குறிப்பாகப் புலம் பெயர் ஈழத்தமிழர்களுக்கும், தமிழகத் தமிழர்களுக்கும் கூறிச்சென்றுள்ளது. முள்ளிவாய்க்காலுக்குப் பிறகு இன்னொரு ஆயுதப்போராட்டம் சாத்தியம் இல்லையென்பதும் அதற்கு மக்களின் ஆதரவு துளிகூட இருக்காதென்பதும் எல்லோருக்கும் வெளிப்படையாகத் தெரிந்ததும், விளங்கிக்கொள்ள கூடியதுமான விடயமாக இருந்தது. ஆனால் இனி எந்த ஒரு எதிர்ப்பரசியலுக்கும், தமிழ்தேசிய அரசியலுக்கும் பெரும்பான்மையான ஈழத்தமிழர்கள் அமைவாக இல்லையென்பதும் அடிபணிவு, இணக்க அரசியலையே முழுமனதாகவிரும்புகின்றார்கள் என்பதுமே நேற்றைய தேர்தல் முடிவுகள் சொல்லிச் செல்லும் செய்தியாக இருக்கின்றது. போரின் அழிவுகள் அவர்களை இந்த நிலைக்குத் தள்ளியது என்பது வேறுகதை. ஆனால் அதுவே அவர்களின் தற்போதைய நிலைப்பாடாக உள்ளது. இதுநாள்வரை சிங்களக் கட்சிகளின் தோல்வியும் ததேகூ வின் வெற்றியும் மக்கள் இணக்க அரசியலுக்கு எதிராக உள்ளனர் என்று நான் உட்பட பலர் தவறாக விளங்கிவிட்டோம். உண்மையில் ஈழத்தமிழர்கள் முற்று முழுதாக இணக்க அரசியலுக்குள் இறங்கிவிட்டனர். ஆனால் அதை நேரடியாக சிங்களக் கட்சிகளுக்கு வாக்களித்துச் செய்யாமல் அதைத் ததேகூ வின் மூலம் செய்வதன் மூலம் ஒரு வகையான 'வறட்டுக் கௌரவத்தை' காப்பாற்றிக் கொள்ளலாம் என்ற எண்ண ஓட்டத்தில் மக்கள் தம் வாக்கைச் செலுத்தியுள்ளார்கள் என்பதே தற்போது விளங்கிக்கொள்ளக்கூடியதாகவுள்ளது. தற்பொழுது கூட யாழில் ஒரு இருக்கை ஐ.தே.க விற்குப் போய்விட்டதே என்று வருத்தப்படுகின்றார்கள். ஆனால் 14 இருக்கைகள் பெற்ற கூட்டமைப்பு இரணிலைத்தான் ஆதரிக்கப்போகின்றார்கள். அவர்தான் எங்களுக்குத் தீர்வு கொடுக்கப் போகிறார் என்று அடித்துச் சொல்கின்றார்கள். அப்படியென்றால் ஐ.தே.க விற்கு ஒன்று கிடைத்தால் என்ன அதற்கு மேலும் கிடைத்தால் என்ன. இது என்ன விளையாட்டுப்போட்டி வெற்றிக் கிண்ணமா அலுமாரியில் அடுக்கி அழகுபார்க்க.

தமிழீழம் என்ற கனவிற்காக உயிர் கொடுத்தவர்களைப் புறந்தள்ளிவிட்டும், அவர்களுக்கான நீதியை வழங்காமலும், ஒரு நிரந்தர, நியாயமான தீர்விற்கான அரசியலை தூர எறிந்துவிட்டும், இருப்பதைத் தக்கவைத்துக்கொள்வோம், சிங்களம் கொடுப்பதை ஏற்றுக்கொண்டு அடிமையாக வாழப் பழகிக்கொள்வோம் என்ற முடிவை ஈழத்தமிழர்கள் எடுத்துவிட்டார்கள் என்பதே இந்தத் தேர்தலின் முடிவுகள் எடுத்துக்காட்டுகின்றன. இதுவேஉள்ள நிலைமை (reality). உங்களுடைய முடிவை நான் முழுவதுமாக ஏற்றுக்கொள்கிறேன். இதை அனைத்துப் புலம்பெயர் ஈழத் தமிழர்களும், தமிழகத் தமிழர்களும் ஏற்றுக்கொள்ள வேண்டும். அதைவிடுத்து தலைவர் கட்டினார் என்பதாலேயே வீட்டுக்கு போட்டோம் என்று தம்மை ஈழ உணர்வாளர்களாக காட்டிக் கொள்ள கூட்டமைப்பு ஆதரவாளர்கள் வேடம்போடுவது சகிக்க முடியவில்லை. ததேகூவிற்கு ஆதரவளிப்பதற்கு என்ன காரணங்களை வேண்டுமென்றாலும் கூறுங்கள். ஆனால் தயவு செய்து தலைவரின் பெயரையும் மாவீரர்களையும் துணைக்கழைக்காதீர்கள். அத்தோடு இதே காரணத்தை புலம்பெயர்ந்தவர்கள் இனியும் சொல்வது தம்மைத் தாமே ஏமாற்றிக் கொள்வதற்கு ஒப்பாகும். இது தமிழீழத்தின் தற்போதைய உள்ளமையை ஏற்றுக்கொள்ளாமல் நம்மை நாமே தொடர்ந்து ஒரு போலி நம்பிக்கையை வைத்துக்கொள்ள பயன்படுமே தவிர எவ்விதமான ஆக்கபூர்வமான செயற்பாடுகளுக்கும் உதவாது.

சரி ஈழம் வாழ் தமிழர்கள் தமது முடிவைக் கூறிவிட்டார்கள். அதை ஏற்றுக்கொள்கின்றேன். ஆனால் இந்த முடிவை புலம்பெயர்ந்தவர்களில் ஒருவனாகிய நான் எப்பொழுதுமே ஆதரிக்கப்போவதில்லை. உங்கள் முடிவுகள் எமது செயற்பாடுகளை எந்தவகையிலும் தடுக்கப்போவதுமில்லை, கட்டுப்படுத்தப் போவதுமில்லை. நாங்கள் போராளிகளோ, செயற்பாட்டாளர்களோ இல்லை. ஆனால் உங்களில் பலர் கருதுவதுபோல் ஈழத்தை வைத்துப் பிழைப்பவர்கள் இல்லை. ஒரு சிலரே அந்த வகையைச் சேர்ந்தவர்கள். பெரும்பான்மையானோருக்கு வெளிநாடுகளில் குடியுரிமை உள்ளது. நல்ல வசதி வாய்ப்பும் உள்ளது. ஈழத்தைப் பற்றிக் கதைப்பதற்கோ, சிந்திப்பதற்கோ, அது சார்ந்த செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கோ எந்தக் கட்டாயமும் இல்லை. அது போலவே தமிழகத்திலும். ஆனால் எல்லோருக்கும் தமிழீழம் அடைய வேண்டும் என்ற எண்ணமும் அதற்கு நாம் எதாவது செய்யவேண்டும் என்று சிந்தனையும் உள்ளது. அதற்கு முள்ளிவாய்க்கால் படுகொலை, மாவீரர்களின் ஈகம், கொல்லப்பட்டவர்களுக்கான நீதி கேட்டல், எம்மக்கள் கொல்லப்பட்டபோது ஒன்றும் செய்யமுடியவில்லையே என்ற விரக்தி, குற்றவுணர்வு, எம்மினத்தைக்கொன்றவர்களைபழிதீர்க்கவேண்டும்என்ற வன்மம் என்று பல கரணியங்கள் உள்ளன.

**கெஞ்சிக் கேட்கிறேன் உங்கள் அரசியலுக்கு தலைவரையும், மாவீரர்களையும் இனிப் பயன்படுத்த வேண்டாம். படிப்பது தேவாரம், இடிப்பது சிவன் கோவில் என்பது போல் மாவீரர்களை கடவுளாக்கி சாமி யறையில் வைத்துவிட்டுஅவர்களின் கனவுக்கு நேரெதிராய் செயற்பட்டு அவர்களை அவமதிக்காதீர்கள். அவர்களை விட்டுவிடுங்கள்.**

தனிப்பட்ட ரீதியில் மாவீரர்களின் ஈகமும், பழிதீர்க்கவேண்டும் என்ற வன்மமுமே தமிழீழத்தை எவ்வாறேனும் எடுக்கவேண்டும் என்ற ஒரு உந்துதலை எனக்குத் தந்துகொண்டிருக்கின்றது. இவ்வாறே இங்கு பல இளைஞர்கள். முள்ளிவாய்க்காலுக்குப் பிறகு தமது சொந்த இலட்சியங்களை கைவிட்டுதமிழீழ விடுதலைக்குப் பயன்படும் ஒன்றை செய்யவேண்டுமென மாறிய பல இளைஞர்கள் உள்ளனர். படிக்கும் துறையை மாற்றியவர்கள் உள்ளனர். படிப்பைக் கைவிட்டு எம்மிடம் பணமிருந்தால் தான் எதாவது செய்யலாம் என்று வியாபாரங்கள் தொடங்கிய இளைஞர்கள் உள்ளனர். இங்குள்ள அரசியலில் நாம் உள்நுழைந்து பலமிக்கவர்களாக வந்தால்தான் எதவாது செய்ய முடியும் என்று அரசியல் கட்சிகளில் சேர்ந்து வளர்ந்து வருபவர்கள் உள்ளார்கள். யூதர்களைப் போன்று பலம்பொருந்தியவர்களாக வளர்ந்தால் தான் நாம் உலகை வளைக்கலாம் என்று ஒவ்வொரு துறையிலும் தமிழர்கள் வளரவேண்டும் என்று அதற்கான முன்னெடுப்புகளைச் செய்பவர்கள் உள்ளார்கள். இந்த இளைஞர்களில் பெரும்பான்மையானவர்கள் ஈழத்தில்பிறக்காத இரண்டாம்தலைமுறையினர். அவர்களின் வழி சாத்தியமோ இல்லையோ தெரியாது. ஆனால் எல்லோரிடமும் தமிழீழம் அடையவேண்டும் என்ற வெறியும் அதற்கு நாம் எம்மால் முடிந்தளவு செய்யவேண்டும் என்ற எண்ணமும் உள்ளது. புலம்பெயர்ந்த முதல்தலைமுறை வீட்டுக்கொருவேலை, நாட்டுக்கொரு வேலையென்று 2 மணித்தியாலம், 3 மணித்தியாலம் நித்திரையோடு வேலை செய்து போராட்டத்திற்கு பணம் அனுப்பியது. அடுத்த தலைமுறை மிகவும் அறிவுபூர்வமாகவும், வேகமாகவும் தமக்குத் தெரிந்த வழிகளில் தமிழீழம் சார்ந்த செயற்பாடுகளில் ஈடுபட்டுவருகின்றது.

**நடந்தது இனப்படுகொலை எமக்கு மகிந்த மட்டும் எதிரி அல்ல. இரணில், மைத்திரி என்று இனப்படுகொலையில் நேரடியாகவோ, மறைமுகமாகவோ தொடர்புபட்ட அனைவருமே எதிரிகள்.**

அதுபோலவே தமிழகமும் ஈழவிடுதலையில் தமது பங்கு வேறுவிதமாக இருக்கவேண்டும் என்பதையுணர்ந்து அதற்கேற்ப தம்மை அணியப்படுத்திவருகின்றது. ஆனால் ஒரு சில பிழைப்புவாதிகளை வைத்துகொண்டு ஈழத்தைப் பற்றி புலம் பெயர்ந்தவர்கள் தங்கள் பிழைப்புக்காக கதைக்கின்றார்கள் என்று குற்றம் சுமத்துவது உங்களின் அடிபணிவு அரசியலுக்குப் பாதகம் வந்துவிடக்கூடாது என்றே எனக்கு இப்பொழுது நினைக்கத் தோன்றுகின்றது.

உங்களுடைய தெரிவு அடிபணிவு அரசியல். ஆனால் நாம் தொடர்ந்து எதிர்ப்பு அரசியலையே இங்கிருந்து செய்வோம். எமக்கு விடுதலைப் புலிகள் போராளிகள். நடந்தது இனப்படுகொலை. எமக்கு மகிந்த மட்டும் எதிரி அல்ல. இரணில், மைத்திரி என்று இனப்படுகொலையில் நேரடியாகவோ, மறைமுகமாகவோ தொடர்புபட்ட அனைவருமே எதிரிகள். தனித் தமிழீழமே எமது தீர்வு. அதை நாங்கள் தமிழகத் தமிழர்களோடும், ஈழத்தில் எஞ்சியிருக்கும் சில ஈழ உணர்வாளர்களோடும் சேர்ந்தும் மனுக் கொடுத்தோ, யாருடைய கையில், காலில் விழுந்தோ ஏதோ செய்து பெற்றுக் கொள்கிறோம். இல்லையெனில் சாகும்வரை அதற்காகவே முயற்சிசெய்துவிட்டு செத்துப் போகின்றோம். நீங்கள் மேதகு மைத்திரியுடன் கைகுலுக்கி, மாண்புமிகு இரணிலைக் கட்டிப்பிடித்து, கௌரவ டக்ளசையும் கூட்டமைப்பில் உள்வாங்கி சிங்களவன் கொடுக்கும் தீர்வைப் மகிழ்வுடன் வாங்கி வளமான வாழ்வு வாழுங்கள். எங்கள் தமிழீழம் சார்ந்த போரட்டங்களால், செய்ற்பாடுகளால் உங்களுக்கு ஆக்கினை என்றால் எம்மைச் சிங்களவனிடம் போட்டுக் கொடுத்துவிட்டோ, காட்டிக் கொடுத்துவிட்டோ போய்க்கொண்டே இருங்கள். ஆனால் கெஞ்சிக் கேட்கிறேன் உங்கள் அரசியலுக்கு தலைவரையும், மாவீரர்களையும் இனிப் பயன்படுத்தவேண்டாம். படிப்பது தேவாரம், இடிப்பது சிவன் கோவில் என்பது போல் மாவீரர்களை கடவுளாக்கி சாமியறையில் வைத்து விட்டு அவர்களின் கனவுக்கு நேரெதிராய் செயற்பட்டு அவர்களை அவமதிக்காதீர்கள். அவர்களை விட்டு விடுங்கள்.



# ஈனத்தனமான குடியிருப்போரும் இரக்கமே இல்லாத வீட்டு முகவர்களும்

**சுகி**

*(ஒரு பேப்பருக்காக)*

வீட்டு வாடகை என்பது, மாதத்திற்கு மாதம் அதிகரித்துக் கொண்டு போகின்றது. முக்கியமாக லண்டன் மாநகரத்திற்குள் வாழ்வதென்பது இப்போது குறிப்பிட்ட வருமானக்கோட்டுக்குள் வாழ்பவர்களுக்கு மிகவும் கடினமான தொன்றாகவும், இன்னும் பலருக்கு அது ஒரு பாரிய வாழ்வாதாரப் பிரச்சனையாக நாளுக்கு நாள் உருப்பெற்றுக் கொண்டு வருகின்றது. முக்கியமாக பல வருடங்களுக்கு முன்பு அகதிகளாகவும், ஐரோப்பிய நாடுகளில் இருந்து இடம் பெயர்ந்தும் வந்த எம் சமூகத்தை சார்ந்தவர்கள் உட்பட சோமாலியா, ரோமேனியா, பல்கேரியா போன்ற பல பாகங்களின் வந்தவர்கள் உட்பட ஏறக்குறைய வாடகைக்கு குடியிருக்கும் எல்லோரையும் இது பலமாகப் பாதிக்கின்றது.

முக்கியமாக வறுமைக்கோட்டிற்கு கீழ் இருப்பதன் காரணமாக உள்ளூராட்சிசபையின் வீட்டு உதவிப்பணத்தில் இருப்பவர்களின் பாடு இன்னும் மோசமாகிறது. வாடகை உயர்விற்கு தாக்கு பிடிக்க முடியாமல், உள்ளூராட்சி சபை (உ.ச) தத்தம் பிரதேசத்திற்கு உட்பட்ட இடங்களுக்கு அதிஉச்ச தொகையாக ( Local housing Allowance) இவ்வளவுதான் தரமுடியும் என தீர்மானித்துள்ளது. https://lha-direct.voa.gov.uk/bedroomcalculator.aspx அத்தொகை, அந்த இடத்தில் உள்ள வாடகை நிலவரத்திற்கு எப்பொழுதுமே குறைவாக இருப்பதால், துண்டு விழும் தொகையை அக்குடும்ப நிலவரத்தை பொறுத்து சில சமயங்களின் உ.ச D.H.P (Discretionary housing payments) என்ற பெயரில் ஒரு குறிப்பிட்ட காலப்பகுதிக்கு செலுத்துவதற்கு முன்வருகின்றது, அந்த குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் அவர்களின் வருமானத்தை கூட்டுவதற்காக முழுநேர வேலைக்கு போகும் படியோ, மேற்கொண்டு படிக்கும் படியோ, வேலை எடுக்கும் படியோ குடும்பத்திற்கு ஏற்றபடி வற்புறுத்துகிறது. அப்படியும் இயலாமல் போகும் நிலையில் அக்குடும்பத்தை வாடகை குறைந்த லண்டனின் வேறுபகுதிகளுக்கோ, அல்லது லண்டனுக்கு வெளியேயோ போகும்படி பணிக்கிறது. அந்த சலுகையை அவர்கள் ஏற்க மறுக்கும் பட்சத்தில், அவர்களுக்கான உ.ச க்குரிய கடமையை ரத்துச்செய்து (Council Duty) அவர்களுக்குரிய உறவை அறுத்து அதனால் வரும் விளைவுகளுக்கு அக்குடும்பத்தலைவர்களை பொறுப்பாக்கின்றது. இது சம்பந்தமாக வழக்கென்றும், Law centre, citizen advice bureau என்று அலைபவர்களின் தொகையும் நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்கிறது.

இது ஒரு பக்கத்தில் இருக்க, இன்னொரு பக்கத்தில் இந்த துண்டு விழும் தொகையை மீதப்படுத்துவதற்காக சிலர், மூன்று அறையுள்ள வீட்டில் இருந்து, இரண்டு அறையுள்ள வீட்டுக்கென, அதே குடும்ப அங்கத்தவர்களோடு முன்பு இருந்ததை விட குறைவான அறையுள்ள வீட்டுக்கு போய் உ.ச யின் உதவியின்றி தமது வருமானத்திற்கு உட்பட்டு வாழத் தலைப்படுகின்றார்கள். அவர்களின் இத்தகைய முடிவிற்கு, அவர்களின் பிள்ளைகள் அந்த இடத்தை விட்டு இன்னொரு பகுதிக்கு போகவிரும்பாமை, அந்த இடத்தில் உள்ள அவர்களுக்கான தொடர்பு என்பனவும் காரணமாகின்றன. ஆனால் இத்தகைய தொடர்புகளை அவர்கள் அவர்களுக்காக வீட்டு விண்ணப்பப்பத்திரத்தில் ஒன்று விடாமல் விளக்கமாக குறிப்பிட்டிருக்கவேண்டும். அதை பலர் செய்வதில்லை. இன்னும் சிலர் முழுக்க வீட்டு உதவிப்பணத்தில் இருந்தாலும், வேலை திணைக்களத்தின் (Job Centre) வற்புறுத்ததால் வேலைக்கு போகும் படி பணிக்கப்படுகின்றனர். ஆனால் அவர்களுக்கு நாம் வேலை தொடங்கும் இடத்து, மேற்கொண்டு தமக்கு எவ்வளவு வீட்டு உதவித்தொகை வரும், எவ்வளவு துண்டு விழும் தொகை எனக் கவலை கொள்கிறார்கள், அதை பின்வரும் இணையத்தளத்தில் உதவியுடன் தாமே தெரிந்து கொள்ள முடியும். http://www.quickcalc.co.uk/nihe/pc/

இது தவிர லண்டனின் மட்டும் 10,000 மேற்பட்டவர்கள் சீரோ மணித்தியால உடன்படிக்கையின் கீழ் வேலை செய்து கொண்டுள்ளார்கள். அவர்களின் வருமானம் நிரந்தரமின்மையால் பலர் மனஉளைச்சலுக்கு உள்ளாகுகின்றனர்.

ஒக்டோபர் 2015 இல் இருந்து நிலமை இன்னும் மோசமாக வர உள்ளது. இப்போது ஒரு குடும்பத்திற்கு £500 வாரத்திற்கு அல்லது வருடத்திற்கு £26K என்று இருக்கும் அதி உச்ச benefit cap £23K எனக் குறைய உள்ளது. இதனால் இப்போது 50,000 இருக்கும் பாதிக்கப்பட்டோர் தொகை 70,000 அதிகரிக்கும். Tax credits £6420 இல் இருந்து £3850 ஆகக் குறைய உள்ளது. (இது universal credit க்கு வெளியே working Tax credit விண்ணப்பிக்கும் பகுதியினருக்கு மட்டும் பொருந்தும்). அத்தோடு Local housing Allowance நான்கு வருடங்களுக்கு அப்படியே Freeze ஆகவுள்ளது.

இதைவிட போனவருடம் முதல் வீட்டு முகவர்கள் அல்லது வீட்டு உரிமையாளர்கள் அவர்களின் குடியிருப்போரின் குடிவரவு அந்தஸ்தை முதலில் சரிபார்த்துக் கொள்ள வேண்டும். தவறும் இடத்தில் தண்டணைக்குரிய குற்றப்பணத்தை செலுத்த வேண்டும் என்று சட்டம் வேறு வந்துள்ளது. சட்டத்திற்கு புறம்பாக எதுவித வதிவித உரிமையும் இன்றி இன்றும் ஆயிரக்கணக்காணவர்கள் பிரித்தானியாவில் உள்ளார்கள். அவர்கள் கூட எங்கோ, எப்பிடியோ வேலை செய்து, எங்கோ, எப்பிடியோ தங்கி சீவியத்தை நடத்திக்கொண்டு தான் உள்ளார்கள். இவர்களில் பலருக்கு, இவர்களை நம்பி அவரவர் நாட்டிலும் உறவுகள் உள்ளன.

மேற்குறிப்பிட்ட எல்லா காரணிகளும் ஈனத்தனமான குடியிருப்போரையும், இரக்கமே இல்லாத வீட்டு முகவர்களை தோற்றுவிக்கவும் காரணமாகின்றது. குறுகிய இடத்தில் அதிகமானவர்கள் குடியிருக்கவும், வீட்டு முகவர்களுக்கும், உரிமையாளருக்கும் தெரிந்தும் இன்னும் பல சந்தர்ப்பங்களில் தெரியாமலும், உறவினர்கள் என்ற போர்வையில், ஒருவீட்டுக்குள் பலர் இருக்கவும், ஜன்னல்கள், காற்று வசதிகள் இல்லாத களஞ்சிய அறைகளை, படுக்கை அறைகளாக மாற்றவும், வதிவிட உரிமையில்லாதவர்கள் குடியிருக்கவும் காரணமாகிறது. சனல் 5 இல் இதை வைத்து Nightmare Tenants and Slum Landlords என்று நிகழ்ச்சி வேறு தொடராக போய்கொண்டுள்ளது. துர்அதிஸ்டவசமாக அதன் அத்தியாயம் 6 இல் லூசியம் பகுதியில் வசிக்கும் ஈழத்தமிழர் ஒருவரும், இரக்கமே இல்லாத வீட்டு முகவராக சித்தரிக்கப்படுகின்றார்.

http://www.channel5.com/shows/nightmare-tenants-slum-landlords/episodes/episode-6-572

## சட்டத்திற்கு புறம்பாக எதுவித வதிவித உரிமையும் இன்றி இன்றும் ஆயிரக்கணக்காணவர்கள் பிரித்தானியாவில் உள்ளார்கள்.

வறுமை கோட்டிற்கு கீழ் வாழும் குடியிருப்போர், வானை மூட்டும் காஸ், மின்சார கட்டணத்திற்கு பயந்து, அதன் பயன்பாட்டைக் குறைப்பதால் ஈரபற்று கூடி வீடு பழுதாகக் காரணமாகிறது. மற்றும் குளிருக்கு பயந்து ஜன்னல்களை திறக்காமல் இருப்பதாலும், கொஞ்ச நாட்களில் கறுப்பு படிவுகள் தோன்றுகின்றன. மற்றும் சரியான துப்பரவாக்கிகளை பாவிக்காததால் சமையல் அறை, குளியல் அறை என்பன காலப்போக்கில் கேவலமான நிலைக்கு உள்ளாகின்றன. இதற்கு அவர்களின் அசட்டைதனமும், வறுமையும், அறியாமையும் காரணமாகிறது. இதனால் ஈனதனமான குடியிருப்போராக மாறுகின்றனர்.

கருத்துக்களுக்கு - facebook.com/orupaper @orupaper








# கஜேந்திரகுமாரின் தோல்வி கொள்கை நிலைப்பாட்டின் தோல்வியா ?



**கலாநிதி சர்வேந்திரா தர்மலிங்கம்**
*(ஒரு பேப்பருக்காக)*

நடைபெற்று முடிவடைந்த நாடாளுமன்றத் தேர்தல் தொடர்பாக கடந்த இதழில் வெளியாகியிருந்த எனது கட்டுரையில் தேர்தலின் பின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தடம்புரளாமல் பாதுகாப்பதற்கு கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கு மக்கள் பிரதிநிதித்துவம் கிடைப்பது துணை புரியும் என்ற கருத்தினை வெளிப்படுத்தியிருந்தேன்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் ஒரு ஆசனத்தை வெற்றிகொள்ளும் எனப் பொதுவாக எதிர்பார்க்கப்பட்ட போதும் அது நடைபெறவில்லை. இதனை கஜேந்திரகுமார் முன்வைக்கும் கொள்கையின் தோல்வியாக வியாக்கியானப்படுத்துவோரும் உள்ளனர். தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கு மக்கள் பிரதிநிதித்துவம் கிடைக்காது போனமையை நாம் எவ்வாறு விளங்கிக் கொள்வது ? இத் தோல்வி உண்மையில் ஈழத் தமிழர் ஒரு தேசம் என்பதற்கு அங்கீகாரம் கோரும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் கொள்கையின் தோல்வியா? அல்லது இக் கொள்கைசார் நிலைப்பாட்டை மக்கள் மத்தியில் கொண்டு சென்று அதற்கான ஆதரவை வென்றெடுப்பதற்கான செயற்பாட்டில் ஏற்பட்ட தோல்வியா?

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கு மக்கள் பிரதிநிதித்துவம் கிடைப்பது நன்மையானது என்ற கருத்து என்னிடம் இருந்த போதும் இத் தேர்தலிலும் முன்னணிக்கு மக்கள் பிரதிநித்துவம் கிடைக்காது போகலாம் என்ற அச்சமும் எனக்கு இருந்தது. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி இத் தடவையும் ஒரு ஆசனத்தையும் பெற முடியாது போயினும் அது குறித்து நான் ஆச்சரியப்படமாட்டேன் எனத் தேர்தலின் முன்னர் சில நண்பர்களிடம் கூறியிருந்தேன். தேர்தலின் அன்று வாக்குப்பதிவு முடிவடைந்தவுடன் (முடிவுகள் வெளியாகும் முன்பு) 'தேர்தல் நாள் குறிப்புகள்' என்ற தலைப்பில் இட்ட எனது முகநூல் பதிவில் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தேன்.

'தேர்தல் வெற்றிகளை நாம் இரண்டு முறைகளில் மதிப்பீடு செய்யலாம். கிடைக்கும் பிரதிநிதிகளின் எண்ணிக்கையை வைத்து கணிப்பீடு செய்வது ஒரு முறை. கடந்த தேர்தலை விட இத் தேர்தலில் கிடைத்த மக்களின் வாக்குகளின் எண்ணிக்கையை வைத்து மக்கள் ஆதரவு அதிகரித்திருக்கிறதா அல்லது குறைந்திருக்கிறதா என்பதனை கணிப்பீடு செய்வது இன்னொரு முறை. எதிர்பார்த்த ஆசனங்கள் கிடைக்காவிடினும் மக்கள் வாக்குகளில் ஏற்படும் அதிகரிப்பை வளர்ந்து வரும் அங்கீகாரமாக எடுத்து மக்கள் மத்தியில் தொடர்ச்சியாக செயற்படுதலே மக்கள்மீது நம்பிக்கை கொண்ட அரசியற் தலைமையின் பணியாக இருக்க முடியும். தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கு இது கூடுதலாகப் பொருந்தும் !'

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கு மக்கள் பிரதிநிதித்துவம் கிடைக்காமலும் போகலாம் என நான் நினைத்தமைக்கு பின்வருவன காரணமாக இருந்தன.

1. தமிழ்த்தேசியநிலைப்பாட்டினைக்கொண்டு தமது வாக்குகளை வழங்கும் மிகப் பெரும்பான்மையான தமிழ் மக்கள் ஒரு பிரதான கட்சிக்கு வாக்களிக்கும் பாரம்பரியத்தைக் கொண்டிருக்கின்றமை.

2. சிறிலங்கா அரசுக்கு எதிராக ஒரு கட்சியினை அல்லது அமைப்பை நிறுத்துவதே பலம் என்ற மக்களின் ஆழமான நம்பிக்கையை இலகுவில் மாற்ற முடியாமை.

3. உரிமை சார்ந்து உயரிய கொள்கை நிலைப்பாடு மட்டும் மக்கள் ஆதரவை வென்றெடுக்கப்போதுமானதாக இருப்பதில்லை. தந்தை செல்வநாயகத்துக்கு முன்னரே தமிழீழக் கொள்கையினை முன் வைத்த சுயாட்சிக் கழக நவரட்ணம் போன்றோரால் போதிய மக்கள் ஆதரவைப் பெறமுடியவில்லை.

4. புலம் பெயர் நாடுகளில் இருந்து தெரிவிக்கப்படும் ஆதரவோ அல்லது சமூக ஊடகப்பரப்புரைகளோ அதில் ஈடுபடும் எமது உணர்வுகளுக்கு வடிகாலாக அமையும் அளவுக்கு அவை வாக்களிக்கும் மக்களை சென்றடைவது குறைவு. மக்களின் முடிவுகளில் தாக்கங்களை ஏற்படுத்துவதும் குறைவு.

5. விதைப்புக்கும் விளைச்சலுக்கும் உள்ள தொடர்பு. விடுதலைப்புலிகள் தமது உயிர் ஈகம் மூலம் விதைத்ததை கூட்டமைப்பே அறுவடை செய்கிறது. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தனது தனித்துவமான அரசியல் குறித்து கருத்து நிலையில் விவாதித்தளவுக்கு மக்கள் மத்தியில் செயற்பட்டிருக்காத நிலை.

6. 2016 ஆம் ஆண்டுகள் சமஸ்டி தீர்வு எடுத்துத் தருவதாகக் கூட்டமைப்புத் தலைவர் கொடுத்த வாக்குறுதிக்கு ஒரு சந்தர்ப்பம் கொடுக்கலாம் என மக்கள் நினைக்கக்கூடிய நிலைமை.

7. கூட்டமைப்புக்கு இருக்கின்ற ஊடக ஆதரவும் தேர்தலின் இறுதி நேரத்தில் இவ் ஊடகங்கள் ஊடாக தேர்தல் முடிவில் தாக்கம் ஏற்படுத்தக்கூடிய வகையிலான பரப்புரைகளும்.

8. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கு வாக்களித்தால் மீண்டும் பிரச்சினை வந்து விடும் என மக்களில் ஒரு சாராருக்கு இருக்கும் அச்சம்.

நான் இங்கு குறிப்பிடட்டுள்ள விடயங்கள் தேர்தலில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கு பாதகமாக அமைந்துள்ளன என்பதனைத் தேர்தல் முடிவுகள் காட்டுகின்றன. இவற்றை விட தேர்தல் களச் சூழலை நன்கு புரிந்து அதற்கமைய வியூகங்களையும் உத்திகளையும் வகுத்து தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி இயங்குதிறன் மிக்க வகையில் செயற்பட்டிருக்கறதா என்ற கேள்வியும் இங்கு எழுகிறது. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் கடந்த கால தேர்தல் பகிஸ்கரிப்பு நிலைப்பாடுகளும் இத் தேர்தலில் அவர்களுக்கு எதிராக இயங்கியிருப்பதாகவும் ஒரு கருத்து உண்டு. மேலும் கூட்டமைப்பினரை முன்னணி கூடுதலாக விமர்சித்தமையினையும் மக்கள் விரும்பவில்லை எனவும் கூறப்படுகிறது. இதேவேளை முன்னணி கடைப்பிடித்த சிறு எண்ணிக்கையினைக் கொண்ட மக்கள் சந்திப்புகளில் மக்களோடு நெருங்கி ஆழமாக உரையாடுதல் எனும் அணுகுமுறை சந்திப்புகளில் பங்குபற்றியோரிடம் தாக்கத்தை ஏற்படுத்தியதாக அறிய முடிகிறது. ஆனால் இத்தகைய சந்திப்புகளில் முன்னணியினர் சந்தித்த மக்களின் எண்ணிக்கை மிகவும் குறைவு. முன்னணிக்கு கிடைத்த வாக்குகளில் கணிசமானவை இத்தகைய சந்திப்புகளின் மூலம் பெறப்பட்டவை என்றே தெரிகிறது.

இங்கு இன்னொரு விடயத்தையும் குறிப்பிட வேண்டும். இம் முறை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியாலும் ஆதரவாளர்களாலும் முன்வைக்கப்பட்ட 'மாற்றம்' என்ற நிலைப்பாடு காலத்துக்கு சற்று முந்தியதாகத் தெரிகிறது. இயங்கிக் கொண்டிருக்கிற பிரதான கட்சி தான் மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாமல் தடுமாறித் தோல்வியினைத் தழுவும் போதே 'மாற்றம்' என்ற அணுகுமுறை மக்கள் மத்தியில் எடுபடும். தாயக மக்களைப் பொறுத்தவரை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளில் தோல்வியடைந்துவிட்டதாக அவர்கள் இன்னும் கருதவில்லை. மகிந்த இராஜபக்சவிடம் இருந்து உரிமைகளைப் பெறமுடியவில்லை என்பதனை கூட்டமைப்பின் குறைபாடாக மக்கள் பார்க்கவில்லை. மகிந்த இராஜபக்சவை ஆட்சியதிகாரத்தில் இருந்து அகற்றுவதற்கு கூட்டமைப்பு வழங்கிய ஆதரவை மக்கள் ஏற்றுக் கொள்கிறார்கள். உண்மையில் தமிழத் தேசியக் கூட்டமைப்பின் சோதனைக்காலம் இப்போதுதான் ஆரம்பிக்கிறது. கூட்டமைப்பு ஆதரித்துவர்கள்தான் இப்போது ஆட்சியதிகாரத்தில் இருக்கிறாரகள். 2016 ஆம் ஆண்டுக்குள் தீர்வு எடுத்துத் தருவதாக சம்பந்தன் ஐயா வாக்குறுதி அளித்திருக்கிறார். சமஸ்டித்தீர்வினைக் கூட்டமைப்பு தீர்வாக முன்வைத்திருக்கிறது. சிங்களக் கட்சிகள் எவையும் ஒற்றைாட்சியினை விட்டு வெளிவரத் தயாராக இல்லை. இவற்றையெல்லாம் கூட்டமைப்பு எவ்வாறு கையாளப் போகிறது என்பதில்தான் கூட்டமைப்பின் அரசியல் எதிர்காலம் உண்டு. எனது பார்வையில் மாற்றம் என்பது அடுத்த நாடாளுமன்றத் தேர்தலின்போதே காலப்பொருத்தமான கோசமாக இருக்கும்.

கஜேந்திரகுமார் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தேர்தலில் தோல்வியடைந்தமையினை தமிழ் மக்கள் ஒரு தனியான தேசம் என்ற அங்கீகாரத்தைக் கோரும் நிலைப்பாடு தோல்வியடைந்து விட்டதாக சிலர் அர்த்தப்படுத்துகிறார்கள். எனது பார்வையில் இது தவறானது. தமிழ் மக்கள் ஒரு தேசம் (Nation) என முன்னணி கூறுவதற்கும் தமிழ் மக்கள் ஒரு தேசிய இனம் (nationality) என்று தமிழத் தேசியக் கூட்டமைப்பு கூறுவதற்கும் மக்களின் பார்வையில் பெரிய வேறுபாடுகள் இல்லை. அரசியல்ரீதியாக நோக்கினும்கூட இவற்றுக்கிடையிலான வேறுபாடுகள் மிகப் பாரியதானதல்ல. எனது புரிதலின்படி தேசம் என்பது மக்களின் அரசியல் ஒருமைப்பாட்டை வலியுறுத்தி மக்களின் அரசமைக்கும் உரிமையையும் விருப்பத்தையும் தேசிய இனம் என்பதனை விடக் கூடுதலாகச் சுட்டி நிற்கும். தேசம் என்ற பதத்தை பயன்படுத்த விரும்பாதவர்கள் கூட்டமைப்பு கூறும் தமிழ் மக்கள் ஒரு தனித்துவமான தேசிய இனம் என்பதற்கு அங்கீகாரம் பெறுவதற்காகத் தமிழ் மக்கள் போராடுகிறார்கள் என்று இதனை அர்த்தப்படுத்தலாம். எனது பார்வையில் கஜேந்திரகுமாரின் பிரதான அக்கறை தேசம் அல்லது தேசிய இனம் என்ற பதங்கள் தொடர்பானதாகத் தெரியவில்லை. தேசிய இனம் என்பதுவும் சர்வதேசச் சட்டங்களில் கூறப்படும் மக்கள் என்ற வரையறைக்குள் உள்ளடங்கி சுயநிர்ணய உரிமைக்கு உரித்துடையதுதான்.

கஜேந்திரகுமாரைப் பொறுத்தவரை கூட்டமைப்புத் தலைமை தாம் மக்களுக்குக் கூறுவது போல தமிழ் மக்கள் ஒரு தேசிய இனம் என்பதற்கான அங்கீகாரத்தை நோக்கி உண்மையில் செயற்படாமல் தமிழ் மக்கள் ஒரு சிறுபான்மையினர் என்ற வகையில் அணுகி தீர்வு நோக்கிச் செயற்படுகிறது என அவர் நம்புகிறார். இவர் இந்த முடிவுக்கு வந்தமைக்கு கூட்டமைப்புத் தலைவர் சம்பந்தன் ஐயாவுக்கு மிக அருகாமையில் நின்று செயற்பட்டமையால் கிடைத்த பட்டறிவு காரணமாக இருந்திருக்கிறது. தமிழ் மக்கள் ஒரு தேசிய இனம் என்று தேர்தல் விஞ்ஞாபனத்திலும் தேர்தல் மேடைகளிலும் கூட்டமைப்பு கூறுவதனை விசுவாசித்து இதற்கான அரசியல் அங்கீகாரம் தேடும் செயற்பாடுகளில் கூட்டமைப்புத் தலைமை உண்மையாகவே செயற்படுமானால் இவர்களுக்கிடையிலா இடைவெளி குறைவதற்கு வாய்ப்பு உண்டு.

இதனால் நாம் இங்கு கேட்க வேண்டிய கேள்வி தமிழ் மக்கள் ஒரு தனித்துவமான தேசம் அல்லது தேசிய இனம் என்பதற்கான அங்கீகாரம் கோரும் கொள்கை நிலைப்பாடு இத்தேர்ததிலில் தோல்விடைந்துள்ளதா என்பதுதான். தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு மக்கள் அளித்த ஆணையையும் இக் கொள்கை நிலைப் பாட்டுக்கு மக்கள் வழங்கிய ஆதரவாகவே நாம் நோக்க வேண்டும். இங்கு உண்மையான பிரச்சினை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மக்களுக்கு தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூறியதை வெறும் 'தேர்தல் காலப் பேச்சாகப்' பார்க்கிறதா என்பது தான் !

Immigration | Asylum | Family | Criminal Defence | Civil Litigation

**Expert in Criminal Defence Services.**
24 Hour Police Station Attendance
Magistrates' & Crown Court Representation

**Contractual Disputes**
Matrimonial - Divorce ancillary relief matters
Emergency Injunction

**Immigration Law Specialists**
Asylum & Immigration
Bail Application (Immigration Detention)
Removals, Deportation
Judicial Review & Emergency Injunction

**Civil Litigation**

We offer Legal Aid (FREE) in Crime, Immigration and Asylum matter

**அகதி விண்ணப்பம், குடிவரவு, குற்றச்சாட்டு போன்றவற்றுக்கு இலவசமான சட்ட உதவிக் கொடை கொடுக்கப்படும்**

Criminal Defence Service | Community Legal Service | The Law Society Accredited Immigration & Asylum

RAJ LAW SOLICITORS
169, Tooting High Street, London, SW17 0SY | Tooting Broadway
Tel: 0203 133 0000 | Fax: 0203 133 0092 | www.rajlaw.co.uk
We are authorised and regulated by the Solicitors Regulation Authority (No. 421 980) Mail : info@rajlaw.co.uk

Emergency
079 4764 1876
079 1225 3418

# ஈரானின் வல்லரசுக் கனவு



## வேல் தர்மா

*(ஒரு பேப்பருக்காக)*

இதுவரை பொருளாதாரத் தடையால் மேற்காசியப் பிரதேசத்தில் சற்று அடக்கி வாசித்துக் கொண்டிருந்த ஈரான் இனி மேல் உச்சதொனியில் வாசிக்குமா என்ற கேள்வி உலக அரங்கில் ஒலித்துக் கொண்டிருக்கின்றது. ஈரானின் உச்சத் தலைவர் அயத்துல்லா அலி கொமெய்னி அமெரிக்காவுடன் யுரேனியப் பதப்படுத்தல் உடன்படிக்கையின் பின்னர் அமெரிக்கா தொடர்பான ஈரானின் நிலைப்பாட்டில் மாற்ற மில்லை என்றார். ஈராக்கில் சதாம் ஹுசேயினின் ஆட்சியை ஒழித்ததன் மூலம் அமெரிக்கா ஈரானை வலுவடையச் செய்து விட்டது என்பது சுனி முஸ்லிம்களின் குற்றச்சாட்டாக இருக்கின்றது. எகிப்து, அல்ஜீரியா, லிபியா, ஈராக், சவுதி அரேபியாவின் ஒரு பகுதி ஆகியவற்றைக் கொண்ட ஒரு வல்லரசாக தாம் உருவாக வேண்டும் என தற்போதைய ஈரானின் மதவாத ஆட்சியாளர்கள் கருதுகின்றனர். இப்பிரதேசங்களைத் தமது ஆட்சிக்குள் கொண்டு வந்து அங்கு சியா முறைமையிலான இஸ்லாமைப் பரப்ப வேண்டும் என்பது அவர்களது கனவு.

### ◆ ஈரானின் பிராந்திய ஆதிக்கக் கனவு

2015 மார்ச் மாதம் ஈரானின் அதிபர் ஹஸன் ரௌஹானியின் ஆலோசகர் அலி யூனிசி ஈரான் ஒரு பேரரசு, ஈராக் அந்தப் பேரரசின் ஒரு பகுதி என்றார். அதற்கு ஒரு மாதத்திற்கு முன்னர் ஈரானிய புரட்சிப் படையான கட்ஸ் படையின் வெளிநாட்டுப் பிரிவின் தளபதி காசிம் சுலைமான் இன்று ஈரான் தனது மதப் புரட்சியை பாஹ்ரேன் முதல் ஈராக் வரைக்கும், சிரியா முதல் யேமன் உள்ளிட்ட வட ஆபிரிக்கா வரைக்கும் ஏற்றுமதி செய்யக் கூடிய நிலை உருவாகியுள்ளது என்றார். இவை மட்டுமல்ல 2014-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் ஈரானிய உச்சத் தலைவர் அலி கொமெய்னிக்கு நெருக்கமான பாராளமன்ற உறுப்பினர் அல் ரெஜா ஜக்கானி தற்போது பாக்தாத், பெய்ரூட், டமஸ்கஸ், சனா ஆகிய நான்கு அரபுத் தலை நகரங்கள் ஈரானின் கட்டுப்பாட்டில் உள்ளது என்றார். இன்னும் சற்றுப் பின் சென்றால் 2013-ம் ஆண்டு அஜர்பைஜானை ஈரானுடன் மீளிணைக்க வேண்டும் என்ற தீர்மானம் ஈரானியப் பாராளமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. அஜர் பைஜானை சோவியத் ஒன்றியம் ஓர் உடன்படிக்கை மூலம் ஈரானிடமிருந்து 1828-ம் ஆண்டு பிரித்து தன்னுடன் இணைத்துக் கொண்டது.

### ◆ ஈராக் சியா ஆனால் அரபு

ஈராக்கில் சுனி இஸ்லாமிய அமைப்பான ஐ.எஸ்.ஐ.எஸ் என்றும் ஐ.எஸ்.ஐ.எல் என்றும் ஐ.எஸ் என்றும் அழைக்கப்படும் இஸ்லாமிய அரசுக்கு எதிராக ஈரானே முன்னணியில் நின்று செயற்படுகின்றது. சியா முஸ்லிம்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட ஈராக்கில் சுனி முஸ்லிம் ஆன சதாம் ஹுசேய்ன் நீண்டகாலம் ஆட்சியில் இருந்தார். அவர் ஈரானுக்கு எதிராக நீண்ட போரையும் 1980இல் இருந்து 1988 வரை நடாத்தினார். அவரது பிராந்திய ஆதிக்கக் கனவால் அவர் அமெரிக்க ஆக்கிரமிப்பால் ஆட்சியில் இருந்து விரட்டப்பட்டுக் கொல்லப்பட்டார். பின்னர் அமெரிக்க ஆதரவுடன் தேர்தல் மூலம் ஈராக்கில் சியா முஸ்லிம்கள் ஆட்சியைக் கைப்பற்றினர். இதைத் தொடர்ந்து ஈராக்கில் உள்ள சுனி முஸ்லிம்ளின் அமைப்பான ஈராக்கிற்கான அல் கெய்தா ஐ எஸ் என்னும் போராளி அமைப்பாக மாறியது. சுனிப் போராளிகளும், சதாமின் படையில் இருந்த பாத் கட்சி வீரர்களும் ஐ எஸ்ஸுடன் இணைந்து கொண்டனர். ஐ எஸ் அமைப்பு சுனி முஸ்லிம்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட சிரியாவில் சியா முஸ்லிம்களின் ஒரு பிரிவினரான அலவைற் இனக்குழுமத்தினரின் ஆட்சிக்கு எதிராகப் போராடுவதாகச் சொல்லி சவுதி அரேபியா, காடார் ஆகிய நாட்டுச் செல்வந்தர்களிடமிருந்து பெரும் நிதியைப் பெற்றுக் கொண்டு ஈராக்கிலும் சிரியாவிலும் பெரு நிலப்பரப்பைக் கைப்பற்றிக் கொண்டது. அமெரிக்காவின் முதலாம் எதிரியாக ஐ எஸ் அமைப்பு வளர்ந்து வருகின்றது. இந்த ஐ எஸ் அமைப்பை ஒழித்துக் கட்ட அமெரிக்காவும் விரும்புகின்றது ஈரானும் விரும்புகின்றது. இதனால் அமெரிக்காவும் ஈரானும் ஈராக்கில் இணைந்துசெயற்படுகின்றன.

### ◆ சவுதி அரேபியா

ஈரானின் பிராந்திய ஆதிக்கத்திற்கு பெரும் சவால் விடும் நாடாக சவுதி அரேபியா இருக்கின்றது. சவுதியில் சியா முஸ்லிம்கள் வாழும் பிரதேசங்களை தன்னுடைன் இணைக்க வேண்டும் எனவும் ஈரான் கருதுகின்றது. ஈரானின் நிகராளிகளில் (Proxies) ஒன்றான ஹமாஸ் அமைப்பை சவுதி அரேபியா தனது பக்கம் இழுத்துக் கொண்டிருக்கின்றது. ஹாமாஸ் அரசியற் துறைப் பொறுப்பாளர் கலீட் மேஷாலும் மற்றும் பல உயர் மட்டத்தினரும் 2015 ஜுலை மாதம் சவுதி அரேபியாவிற்குப் பயணம் மேற்கொண்டது ஈரானை உலுப்பியதுடன் அதிர்ச்சியடைய வைத்துள்ளது. இது வரை காலமும் ஹமாஸ் அமைப்பிற்குத் தேவையான படைக்கலன்களும் நிதியும் ஈரானிடமிருந்தே கிடைத்தன. சவுதி அரேபியாவுடன் உறவை வளர்த்தால் அதன் மூலம் எகிப்திய அரசு மூடி வைத்திருக்கும் ரஃபாக் கடவையைத் திறக்க வைக்கலாம் எனக் கமாஸ் அமைப்பு நம்புகின்றது. ஈரான் அணுக்குண்டு தயாரித்தால் பாக்கிஸ்தனிடமிருந்து அணுக்குண்டை வாங்கும் திட்டத்துடன் சவுதி அரேபியா இருக்கின்றது.

### ◆ லெபனான் - சிரியா - அமீரகம்

பலஸ்த்தீனத்தில் இருந்து இடம்பெயர்ந்தோராலும் அவர்கள் மீது தாக்குதல் நடத்தும் இஸ்ரேலாலும் லெபனான் குழப்பம் மிக்க நாடாக இருக்கின்றது. லெபனானில் இருந்து யஸீர் அரபாத் தலைமையிலான பலஸ்த்தீன விடுதலை இயக்கத்தை சிரியா படையெடுத்து விரட்டியதன் பின்னர் அங்குள்ள எஞ்சிய பலஸ்த்தீனியர்களால் இஸ்ரேலின் அட்டூழியத்திற்கு எதிராக உருவாக்கப் பட்ட ஹிஸ்புல்லா அமைப்பு மத்திய தரைக் கடலில் உள்ள ஈரானின் விமானம் தாங்கிக் கப்பல் என விமர்சிக்கப்படுகின்றது. ஹ்ஸ்புல்லா அமைப்பிற்கு படைக்கலன்களும் நிதியும் வழங்கும் ஈரான் தனது பிராந்திய ஆதிக்கத்தை லெபனானில் உள்ள ஹ்ஸ்புல்லா மூலம் முன்னெடுத்து வருகின்றது. சிரியாவில் சுனி ஐ எஸ் அமைப்பும் சிரிய அதிபர் அல் பஷார் அசாத்திற்கு எதிரான சுனிக் கிளர்ச்சிக்காரர்களும் ஒரு தரப்பினருடன் மற்றத் தரப்பினர் போராடி அழிந்து கொள்வது ஈரானிற்கு மகிழ்ச்சியூட்டும் ஒன்று. லெபனானின் செயற்படும் சியா முஸ்லிம் தீவிரவாத அமைப்பான ஹிஸ்புல்லாவிற்கான விநியோகம் ஈரானில் இருந்து சிரிய விமான நிலையங்களுடாக நடை பெறுகின்றது. இதனால் சிரியா ஈரானைப் பொறுத்த வரை முக்கியமான ஒரு நாடாகும். அதிபர் பஷாத்தைப் பாதுகாக்க ஈரான் பணம், படைக்கலன் ஆகியவற்றை வழங்குவதுடன் லெபனானில் உள்ள ஹிஸ்புல்லாப் போராளிகளை அசாத்தின் படைகளுடன் இணைந்து கிளர்ச்சிக்காரர்களுக்கு எதிராகப் போராட வைக்கின்றது. ஈராக்கும் சிரியாவும் ஈரானின் ஆதிக்கத்திற்குள் வந்தால் அடுத்ததாக லெபனான் இலகுவாக ஈரானின் கட்டுப்பாட்டிற்குள் வந்துவிடும்.

ஈரானும் சிரியாவும் லெபனானுடனான எல்லையை தமது கட்டுப்பாட்டிற்குள் வைத்திருப்பதில் அதிக அக்கறை காட்டுகின்றன. ஈரானுக்கும் ஐக்கிய அமீரகத்திற்கும் இடையில் ஹோமஸ் நீரிணையில் உள்ள மூன்று தீவுகளும் யாருக்குச் சொந்தம் என்பது தொடர்பாக முறுகல் நிலை உண்டு. அரபு லீக் நாடுகள் ஐக்கிய அமீரகம் தமக்கு கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த நாடு எனக் கருதுகின்றனர்.

### ◆ ஈரானின் நிகராளிப் போர்கள்

ஈரான் தற்போது சிரிய அரசினூடாகவும் ஹ்ஸ்புல்லாவின் உதவியுடனும் சிரிய அரசுக்கு எதிரான ஒரு நிகராளிப் போரையும், ஈராக்கில் அதன் அரசினூடாக ஐ எஸ் அமைப்பிற்கு எதிரான ஒரு நிகராளிப் போரையும், யேமனில் சவுதி அரேபியாவிற்கு ஆதரவான அரசுக்கு எதிராக ஹதி இனக்குழுமப் போராளிகளூடாக ஒரு நிகராளிப் பேரையும் நடாத்தி வருகின்றது. நிகராளிப் போர் நேரடிப் போரிலும் பாக்கச் செலவு மிக்கது. அரபு சுனி முஸ்லிம்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட சிரியாவை ஈரானின் ஆதிக்க நாடாக மாற்றுவது இயலாத ஒன்று. அப்பிராந்தியத்தில் ஆதிக்கம் செலுத்த விரும்பும் துருக்கியையும் சவுதி அரேபியாவையும் மிஞ்சி இதைச் சாதிக்க வேண்டும்.

அமெரிக்கா சிரியாவில் சுனி முஸ்லிம்களின் ஆட்சியை விரும்புகின்றது. ஈராக்கில் ஐ எஸ் அமைப்பு ஈரான், ஈராக்கிய அரசு, ஐக்கிய அமெரிக்கா ஆகியவற்றின் தக்குதலை எதிர் கொள்கின்றது. ஐ எஸ் அமைப்பை அங்கு ஒழித்துக் கட்டினாலும் மொழியாலும் இனத்தாலும் வேறுபட்ட ஈராக்கை ஈரான் தனது ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வருவதும் கடினம். யேமனைப் பொறுத்தவரை அது சவுதி அரேபியாவின் கொல்லைப் புறம். ஈரானுக்கு ஆதரவான ஹூதி இனக்குழுமம் எண்ணிக்கை அளவின் குறைவானது.

### ◆ ஈரானிற்கு ‘சூழ்’நிலை சரியில்லை

ஈரானைச் சுற்றவர சுனி முஸ்லிம்களின் நாடுகளே இருக்கின்றன. தென் கிழக்கில் ஒரு நீண்ட எல்லையுடன் சவுதி அரேபியாவும் வடகிழக்கில் அமெரிக்காவின் நட்பு நாடான துருக்கியும் கிழக்கில் உறுதியற்ற ஆட்சியையும் பெரும்பானமை சுனி முஸ்லிம்களையும் கொண்ட சவுதியின் நட்பு நாடான பாக்கிஸ்த்தானும் மேற்கில் ஈரானுடன் எட்டு ஆண்டுகள் போர் புரிந்த ஈராக்கும் ஈரானுக்கு நட்பு நாடுகள் என்பது குறைவு சீனாவும் இரசியாவும் அவ்வப்போது அரசுறவியலில் (இராசதந்திரத்தில்) ஈரானுக்குச் சார்ப்பாக நடந்து கொண்டாலும் அவை ஈரானின் கேந்திரோபாய நட்பு நாடுகள் அல்ல. இந்த இரு வல்லரசுகளும் ஈரானுக்குத் தேவையான நேரங்களில் ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையில் தமது இரத்து(வீட்டோ) அதிகாரங்களைப் பாவித்தது இல்லை. உலக அரங்கில் ஈரான் ஒரு தனித்து நிற்கும் நாடாகும்.

ஈரானின் பாது காப்புச் செலவீனத்திலும் பார்க்க சவுதியின் பாதுகாப்புச் செலவீனம் நான்கு மடங்கானது. ஈரான் தனது படைக்கலன்களில் பெரும் பகுதியைத் தானே உற்பத்தி செய்கின்றது. அவற்றை அவ்வப்போது லெபனானிலும் காசா நிலப்பரப்பிலும் பரீட்சித்துவருகின்றது. சவுதி அரேபியா, ஐக்கிய அமீரகம், காட்டார் போன்ற செல்வம் மிகுந்த அரபு நாடுகள் அரபு நாடல்லாத ஈரான் அரபு நாட்டில் ஆதிக்கம் செலுத்த அனுமதிக்காது.

ஈரானின் பிராந்திய ஆதிகக் கனவை உணர்ந்த ஐக்கிய அமெரிக்கா அதைச் சுற்றி தனது பல படைத்தளங்களை வைத்துள்ளது.

கருத்துக்களுக்கு -
facebook.com/orupaper @orupaper

**கடன் சுமையால் கஸ்டப்படுகிறீர்களா?**

**தனிநபரோ... வியாபாரமோ...**

- கடன்/Credit Cardக்கு மாதாந்தம் கட்டும் பணத்தை குறைக்க...
- Bankruptcy யை தழுவ அல்லது தவிர்க்க...
- வியாபாரத்தை பலப்படுத்த...
- TAX / VAT / PAYE போன்றவற்றில் தகுந்த ஆலோசனையைப் பெற...

இலவச ஆலோசனைகளுக்கு இன்றே அழையுங்கள்

உங்களுக்கு உதவி செய்யக் காத்திருக்கிறோம்



BARNET-LONDON 020 8216 2520 MR. BRIAN
CROYDON 020 8150 9950 MR SIVA RANJAN
CAMBRIDGESHIRE 01354 707 911 MR. VAHEESAN

BBK PARTNERSHIP
www.bbkca.com
Email: admin@bbkca.com

R3
THE INSTITUTE OF CHARTERED ACCOUNTANTS IN ENGLAND AND WALES

Chartered Accountants and Business Recovery Professionals

- Accountancy / Audit
- Tax Solutions
- Company Formation
- Confidential Tax Consultancy
- Investigations / Tax Mitigation
- Bankruptcy / IVA
- Liquidations
- Business Startup & Consultancy
- Solicitors Rules Audit
- Payroll / VAT / Book keeping

# Pro-US United National Party to form government in Sri Lanka



By Saman Gunadasa

In Monday's general election in Sri Lanka, the United National Party (UNP) and its allies won 106 seats in the bitterly fought campaign but fell short by seven seats of an absolute majority in the 225-seat parliament. The rival grouping, the United People's Freedom Alliance (UPFA), led by the Sri Lanka Freedom Party (SLFP), obtained 95 seats.

While the UNP is likely to form government with the support of other smaller parties, the political turmoil in Colombo will continue. Former President Mahinda Rajapakse, who was ousted in the presidential election in January by Maithripala Sirisena, now has a seat in parliament and commands significant support within the SLFP and UPFA.

At the heart of the sharp divisions in ruling circles are differences over the orientation of foreign policy. Sirisena, who had been a member of the Rajapakse cabinet, won the January election with the backing of the UNP in a regime-change operation engineered by Washington, as part of its "pivot to Asia" against China. The US was hostile to Rajapakse's close ties with Beijing.

The Sri Lankan election was followed closely in the international press amid fears in Washington and New Delhi that Rajapakse would make a comeback as prime minister. Even before a government is formed, Indian Prime Minister Narendra Modi phoned UNP leader Ranil Wickremesinghe to congratulate him on the result.

The New York Times welcomed the outcome emphasising that it had "significant geopolitical ramifications," explaining: "As president, Mr. Rajapakse aggressively courted China, building economic and military ties that alarmed India and the United States. Neither country wants China to gain a larger presence on an island so strategically located along the maritime trade routes between the Bay of Bengal and the Arabian Sea. Mr. Sirisena and Mr. Wickremesinghe have put the courtship on pause, saying the relationship with China needs to be 'rebalanced.'"

The vote on Monday was far closer than the UNP, Sirisena and Washington had hoped for. The UNP-led United National Front for Good Governance (UNFGG) received just over 5 million or 45.7 percent of the total compared to 4.7 million votes or 42 percent for the UPFA.

UNP leader Wickremesinghe, who was appointed prime minister by Sirisena in January, claimed "a mandate for good governance and consensus-based politics." He has begun discussions with the president over the formation of a government and is expected to be sworn in as the next prime minister today.

The UNP will seek Sirisena's assistance in obtaining the backing of his loyalists within the SLFP. While he stood against Rajapakse in January, Sirisena remains a member of the SLFP and holds the powerful posts of chairman of the SLFP and UPFA. He has been carrying out a purge of Rajapakse supporters, sacking the general secretaries of the SLFP and UPFA last Friday and dismissing 13 members of the SLFP central committee on Monday.

Wickremesinghe will also be compelled to turn to the Tamil National Alliance (TNA) which won 16 seats. In a brief comment yesterday, TNA leader R. Sambandan said he would like to support the government to carry forward the "mandate" for President Sirisena.

Following the defeat of the separatist Liberation Tigers of Tamil Eelam (LTTE) in 2009, the TNA has been pressing for a "political solution" to the island's long-running civil war in the form of a power-sharing arrangement with Colombo. Its election manifesto called for a "federal Sri Lanka" and a greater devolution of powers to provincial councils.

In his "victory" statement yesterday, Wickremesinghe declared: "We need to unite as one family to create a new political culture in this country... The majority of this country has voted to consolidate the gains of the January 8 revolution and take forward the policies of good governance and consensus."

However, a deal with the TNA will create tensions in the UNFGG, which includes the Sinhala-extremist Jathika Hela Urumaya (JHU) that is deeply hostile to a federal constitution and any concessions to the Tamil and Muslim elites. The UNFGG also includes the communally-based Sri Lanka Muslim Congress (SLMC) and Tamil Progressive Alliance (TPA), compounding the potential for instability.

Rajapakse has conceded defeat and indicated that he would seek to lead the parliamentary opposition and "support the good policies and oppose the bad things [of the government]." His campaign was based on whipping up Sinhala communalism to "save the motherland" from the alleged resurgence of the "terrorist" LTTE.

Rajapakse will undoubtedly seize on any deal between the UNP and the TNA to denounce the government for splitting the country and undermining national security, and seek to divert rising social tensions into reactionary communal channels.

Like the TNA, the Janatha Vimukthi Peramuna (JVP) has also indicated that it will support the UNP-led government. Both the TNA and the JVP had representatives on the National Executive Council appointed in January as a government advisory body and to shore up support for the previous minority UNP-led government.

The JVP obtained 544,000 votes nationally and six seats, two more than in the previous parliament. At a press conference yesterday, JVP leader Anura Kumara Dissanayake said the party would remain in opposition and would not support the majority party. At the same time, he insisted that the JVP would not back attempts by others to "topple the government"—a veiled declaration of support for the UNP on no-confidence votes.

In his "victory" statement yesterday, Wickremesinghe declared: "We need to unite as one family to create a new political culture in this country... The majority of this country has voted to consolidate the gains of the January 8 revolution and take forward the policies of good governance and consensus."

The reference to the January "revolution" is a sham. In the presidential election, the UNP relied on a host of upper-middle class academic and professional groups, trade unions, non-government organisations and, above all, pseudo-left groups such as the Nava Sama Samaja Party and United Socialist Party to paint Sirisena in bright "democratic" colours. Both Sirisena and Wickremesinghe are right-wing bourgeois politicians with a long history of involvement in crimes against working people.

Rajapakse has conceded defeat and indicated that he would seek to lead the parliamentary opposition and "support the good policies and oppose the bad things [of the government]." His campaign was based on whipping up Sinhala communalism to "save the motherland" from the alleged resurgence of the "terrorist" LTTE.

The new UNP government will be just as ruthless in dealing with its rivals, and with the working class, as the autocratic Rajapakse regime. It has already instigated a series of fraud cases against former ministers and top state officials aimed at dealing further blows to Rajapakse and his supporters. In the final week of the election campaign, the police stepped up their investigations into allegations that members of Rajapakse's family were involved in the 2012 murder of Wasim Thajudeen, a member of the national rugby team.

The government will deepen Sri Lanka's ties with the US and its allies and step up the austerity onslaught on the working class being demanded by international finance capital. The UNP's pro-business credentials are well known as indicated by the fact that the share market hit its highest level in seven months on election day. At the same time, a slump in the rupee against the US dollar points to a looming balance of payments crisis and a new round of attacks on jobs and living conditions.

MGS MASS GLOBAL SHIPPING
Mass Global Shipping
Reliable, Dependable and honourable







Special Offer
Freight + Wooden Box
£65.00




உங்கள் பொருட்களை ஆகாய தரை கடல் மார்க்கமாக பாதுகாப்பாகவும் துரிதமாகவும் குறைந்த செலவிலும் அனுப்புவதற்கு நம்பிக்கையுடன் நாட வேண்டிய ஒரே நிறுவனம்.

CITY WAREHOUSE
Located at BIG YELLOW STORAGE, Wandsworth
Mass Global Shipping – 100 Garratt Lane, London SE18 4DJ
T: 020 8864 4244 M: 07940108177

Special Offer
Within London Collection
£10/-*
* Within London Postcode Only
Door 2 Door Island-wide within Colombo £40*
* T carton

VEHICLES SHIPMENT
From £725 all inclusive*
Conditions Apply
No Hidden Charges
No 3rd Party Agents
Fully Gated Yard Facility 24X7 CCTV Monitoring

No. 58, THE ARCHES, HARROW, HA2 8AA
Tel : 0208 422 1232, 0208 864 4244
Opening Times - Monday to Friday 9am – 6pm | Saturday 9am-6pm
E-Mail: info@massshipping.com Web : www.massshipping.com
4 Collection Points :
Harrow, Watford, Knightsbridge, Croydon

# China's Cash Proves Too Irresistible for Sri Lanka to Ignore

By : Daniel Ten Kate
Anusha Ondaatjie

Most central bankers would relish an office with an unobstructed view of the Indian Ocean's sparkling waters. Sri Lanka Governor Arjuna Mahendran finds it dull.

He would rather see skyscrapers dotting the horizon as cargo vessels deposit containers into Colombo's ports. Right now, piles of sand and stones remind him daily of a stalled China-backed $1.4 billion plan to build a city on reclaimed land that may attract even more investment dollars.

"I'm hopeful that they will actually recommence this project," Mahendran said from the 15th floor of the central bank on the eve of parliamentary elections. "It will be transformative in many ways for the Sri Lankan economy."

The comments reflect a change in tone since President Maithripala Sirisena vowed to pivot away from China when he ended Mahinda Rajapaksa's 10-year rule in January. Even though Rajapaksa failed in a bid to become prime minister in parliamentary elections on Monday, China appears resurgent -- mostly because Sirisena needs its cash to jump start growth.

Results showed Prime Minister Ranil Wickremesinghe's United National Party, which backed Sirisena, winning 106 seats in the 225-person parliament -- just short of a majority. Rajapaksa's party came in second. Sirisena is expected to appoint Wickremesinghe for another term as early as Wednesday.

The Colombo port city is now likely to go ahead even as Sri Lanka boosts ties with Western nations and India, according to Razeen Sally, an associate professor at the National University of Singapore. The project has a "pretty strong commercial logic" and China has ample funds, he said.

In this 2014 handout photo, construction continues on reclaimed land for the Colombo Port City project near Colombo Port in Sri Lanka. Source: Lanka Ports Authority via Bloomberg

## Rice for Rubber

"There was hostility among those in government now to the Chinese because they were so identified with the Rajapaksa regime," Sally said. "Realism has set in."

Strong ties between the nations date back to the 1950s, when Sri Lanka traded rubber to China in exchange for rice. The move in the wake of the Korean War prompted the U.S. government to sanction Sri Lanka for selling strategic materials to a Communist nation.

Decades later under Rajapaksa, China became Sri Lanka's top investor, biggest government lender and second-largest trade partner. Security ties also grew: A Chinese submarine docked twice in Colombo last year, raising alarm bells in India.

After taking power, Sirisena moved to meet a campaign pledge to reduce Sri Lanka's dependence on China. He opened an investigation into the Colombo port city project, prompting sea reclamation and other activities to stop.

## Different Tone

Now his administration is changing its approach. With an economy more than 100 times smaller than China's, Sri Lanka has little choice but to play nice.

Last month, the chairman of Sri Lanka's Board of Investment said the port city project was "definitely not off" and work will soon be restarted after environmental issues are addressed.

For its part, China is also mending fences. Beijing's leaders want to complete a free-trade deal with Sri Lanka by year's end, Chinese Ambassador Yi Xianliang said in Colombo on July 29 as he announced more than $350 million in aid money.

Perhaps more damaging than Rajapaksa's close ties with China was his antagonism toward the West. The U.S., Europe and India accounted for about 60 percent of Sri Lanka's exports in 2014, compared with about 2 percent for China, according to data compiled by Bloomberg.

Sri Lanka's shipments of textiles and garments floundered after 2010, when the European Union denied preferential trade access for exports because the country failed to improve its human rights record. Wickremesinghe last week assured Sri Lankan garment exporters that his government would work toward regaining those concessions by next year.

## Friends Needed

Mahendran, Sri Lanka's central bank governor, said the shift in foreign policy was one of the main differences between Sirisena and Rajapaksa. Even as the government improves relations with the U.S. and Europe, the notion that Sri Lanka is moving away from China was "really overblown," he said.

"This is a pretty small economy and foreign policy has a big impact on how the economy works," he said. "We can't afford not to have friendly relations with our largest markets."

In his office, he looked out over a stretch of coastline that ran from Colombo's harbor to the international airport about 35 kilometers (22 miles) away. In between, he said, the government would push for industrial parks, housing developments and other infrastructure that would transform Colombo into the most liveable city in South Asia.

The Colombo port city is now likely to go ahead even as Sri Lanka boosts ties with Western nations and India, according to Razeen Sally, an associate professor at the National University of Singapore. The project has a "pretty strong commercial logic" and China has ample funds, he said.

China's ability to attract capital is crucial for Sri Lanka to take advantage of its geographical position near the world's fastest growing populations in Asia and Africa, Mahendran said - even if it means losing his peaceful ocean view.

"We need a little bit of busyness in Sri Lanka to be honest," Mahendran said. "It's not busy enough."

*Courtesy: Bloomberg*

## மரண அறிவித்தல்

மலர்வு
03
12
1940



உதிர்வு
03
08
2015

### திருமதி கிருஷ்ணவேணி இராஜேஸ்வரன்

(ஓய்வு பெற்ற அரச தாதி – ஆதார வைத்தியசாலை, மந்திகை)

யாழ். பருத்தித்துறை தும்பளை நீலர்வளவைப் பிறப்பிடமாகவும், லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட கிருஷ்ணவேணி இராஜேஸ்வரன் அவர்கள் 03-08-2015 திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய சொந்தங்கள் அனைவரும் பிரார்த்திக்கின்றோம்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்.

Meera Arnold & Co.




45, Chandos Ave, N14 7ES. Tel: 0208 882 2333

ஒரு பேப்பர் ORU PAPER

உங்கள் வாசல் தேடி வர,
ஒரு வருடத்திற்கு £35 மட்டுமே!

SUBSCRIPTION FORM

Name:

Address :

Postcode:

Telephone:

மேலுள்ள விண்ணப்ப படிவத்துடன், £35 க்கு "Oru Paper Ltd."" ன் பெயரில் காசோலை யினையும், G11, Lombard House, PURLEY WAY, CROYDON, CR0 3JP என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

# KIDS சுப்பர்

## Name:

## Colors

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| m | r | x | b | l | f | u | g | b | c | b | d |
| z | i | x | f | m | o | u | h | q | n | b | w |
| k | o | r | a | n | g | e | a | t | o | d | z |
| p | r | s | r | e | q | b | r | o | w | n | i |
| r | c | p | e | c | o | q | n | k | t | h | b |
| v | t | i | d | w | d | m | c | g | q | t | l |
| h | t | n | n | z | w | h | i | t | e | o | a |
| g | d | k | q | z | u | q | k | b | s | n | c |
| g | r | e | e | n | o | f | f | b | m | l | k |
| c | i | q | e | n | y | e | l | l | o | w | v |
| j | p | z | d | g | y | d | i | k | d | y | z |
| x | b | l | u | e | w | y | q | q | j | r | v |

Green | Yellow | Black | Brown | Pink | White

Red | Blue | Orange | Blue

## Transportation Vacation


We went on vacation,
my family and I.
We got on an airplane
and flew through the sky.

We got off the airplane
and boarded a bus
that went to where taxis
were waiting for us.

We hopped in a taxi
and drove to the shore,
then rode in a boat
for an hour or more.

The boat dropped us off
and we climbed on a train
that went to the airport.
We got on a plane.

The plane took us home.
What a boring vacation!
We didn't see anything;
just transportation.



## draw the way

## Sudoku for Kids


| | | | |
|---|---|---|---|
| 4 | | | 2 |
| | 3 | 4 | |
| 1 | | 2 | |
| | 2 | | 4 |

## Word of the week

Spooky is another word for scary.
"I really like spooky stories."
"Me too. Especially ones with witches and ghosties in them."

spooky

## Why have they done this guide mum?



Kids' endless questions can drive parents nuts, but are great learning tools

***Q: Why is the sky blue?***

*A: Light from the Sun looks white but is actually made up of all the colours of the rainbow. As it travels through the atmosphere to Earth, the reds, oranges and yellows pass straight through the air. But the blues bounce off water droplets and bits of dust and scatter around. So when we look up into the sky, it looks blue.*

## Colouring - 248





Jucitha Sivachelvam



Jushan Sivachelvam





பெயர் குறிப்பிட மறந்த சிறுவன் / சிறுமி ??

Jisutha Sivachelvam



## EARTH

EARTH IS THE THIRD PLANET FROM THE SUN.

EARTH IS MAINLY MADE OF ROCK AND IS COVERED BY OCEANS.

THE TEMPERATURE ON EARTH CAN RANGE FROM -130F TO 136F. THESE TEMPERATURES MAY SEEM EXTREME, BUT THE AVERAGE TEMPERATURE SUPPORTS MANY FORMS OF LIFE.



CELEBRATIONS by
SHREE VENILALS UK
மங்கையர் மனங்கவர்
ஆடைகளின் சங்கமம்!
SPECIAL OFFER
EXCLUSIVE
SAREES
DESIGNER
LEHNGA
SUITS
DESIGNER
PAVADAI & HALF
SAREES
DESIGNER
SALWAR
SUITS
DESIGNER
COSTUME
JEWELLERY
EXCLUSIVE
KANCHEEPURAM
SAREES
ராசியான
கூறைப்புடவைகள்
அனைத்து வகையான
சாறிகள் மற்றும்
சிறுவர்களுக்கான
உடைகளைத் தரமாக
பெற்றுக்கொள்ள
இன்றே நாடுங்கள்
Introducing For The First Time..
Shree Venilal's
115/117 Ealing Road
Wembley.
HA0 4BP
Tel: 020 8903 3144
Celebrations
by Shree Venilal's
99/103 Ealing Road
Wembley, HA0 4BP
Tel: 020 8795 3051
Warehouse by
Shree Venilal's & Celebrations
95/97 Ealing Road
First Floor
Behind Bus Stop / On Top Of Jalaram Sweets Wembley.
விலைச் சலுகைகளைத் தவற விடாதீர்கள் இன்றே நாடுங்கள்!!!
உங்கள் அன்புக்கும், ஆதரவுக்கும் நன்றிகள்...


MERLYN M
KUDOS
hansgrohe
Hudson Reed
JSN HEAT SUPPLIES LTD
Ideal Standard
GROHE
Armitage Shanks
WIDE RANGE OF BATHROOMS, SHOWERS & KITCHENS
COMPACT RADIATOR PANELS
Genuine 80% discount to trade customers
BEST PRICES AROUND ON VARIOUS DIFFERENT BOILERS AND MEGAFLOW
LIMITED STOCK
MIRA 1200X800 SLIDING DOOR AND PANEL. INCLUDING TRAY
ORIGINAL PRICE £890 inc VAT
CLEARANCE £368 inc VAT
FREE
BATHROOM SET WITH 550 CABINET WITH BASIN + FREE TAP & MIXER
£260 inc. VAT
SPECIAL OFFER Thermostatic 2 way outlet
LIMITED OFFER £169 inc. VAT
£149 inc. VAT
GROHE
G1000 COSMO BSM WITH NEW TEMPESTA
£201.00 inc. VAT
LED LAMP BULB WITH FITTING FIRE-RATE DOWN LIGHT
Starts from £10 inc. VAT
2 YEAR GUARANTEE
550 CABINET WITH BASIN + FREE TAP
£85 inc. VAT
450 CABINET WITH BASIN + FREE TAP
£75 inc. VAT
FREE
• BATHROOMS • SHOWERS • GRANITE TILES • MARBLE TILES • PORCELAIN TILES ALL AT DISCOUNT PRICES
162 PINNER ROAD, HARROW HA1 4JJ TEL: 020 8427 0553


Bethany Church Presents
3 DAYS CONFERENCE
27/08/15 7.00 PM - 10.00 PM
28/08/15 7.00 PM - 10.00 PM
29/08/15 10.30 AM - 5.00 PM
KNOW YOUR DESTINY AND CROSS OVER
உன் இலக்கை அறிந்து அக்கரைக்கு போ.
Venue:
Kenton Baptist Church
Streatfield Road
Kenton, Harrow
HA3 9BS
BfM BETHANY CHURCHES The family U need
www.bethanychurches.org
07950735417
02085712156


Sunday Services
With
Rev. Nelson Narayanan
Senior Pastor of Grace City Church, Kuala Lumpur, Malaysia.
On August 30th Sunday - 2015
Morning 10.30 am At Bethany House, 12 Park Avenue, Southall (UB1 3AJ) Sinhala/English Service
Evening 2.00 pm At Baptist Church, Western Road, Southall (UB2 5DS) Tamil/English Service
Evening 5.30 pm At Methodist church hall Woodgrange Avenue, Kenton (HA3 0XF) Tamil/English Service
For more Information
Web :
www.bethanychurches.org
Telephone :
+44 (0) 787 266 5157
+44 (0) 208 571 2156
+44 (0) 783 726 0678
BfM BETHANY CHURCHES The family U need
/bethanychurchuk
/sinhalabethany

# துன்பத்திற் கிடங்கொடேல்

துன்பம் ஏதாவதொரு வகையில் மனிதரை நாடிவரும், அதை அண்ட விடாமல் தவிர்ப்பது தான் புத்திசாலித்தனம். ஏனெனில், அதன் விளைவு உடலையும் உள்ளத்தையும் பாதிக்கச் செய்யும். துன்பத்துக்கு இடம் கொடுத்தால் இன்பம் விலகிவிடும். அதனால்தான் ஔவையார் துன்பத்திற்கிடங் கொடேல் என ஆத்திசூடியில் எச்சரிக்கிறார்.

மிக இலகுவாகச் சொல்லிவிட்ட இந்த அறிவுரையை எப்படி முகம் கொடுப்பது என்பது சற்று கடினம் தான். ஆனாலும், இன்பம் வேண்டுமாயின் துன்பத்தை துரத்தியே ஆகவேண்டும். ஒவ்வொருவர் வாழ்விலும், அவரவர் சூழ்நிலைக்கு அமைய அதிகபட்ச இன்பத்தை அடையவே ஆசைப்படுவர். எனினும், அவர்களை அறியாமலே உடல் ரீதியாகவும், உள ரீதியாகவும் துன்பம் நெருங்கி விடுவது இயல்பு.

உடல் ரீதியாக ஆராய்ந்தால், துர்அதிஷ்டவசமாக சிலர் பிறவியில் அங்கவீனர்களாகப் பிறந்து விட்டாலும், இயற்கையின் படைப்பில் அதிகபட்சமானோர் ஆரோக்கியமாக இருப்பதை மறுக்க முடியாது. அத்தகைய வரப்பிரசாதம் கிடைத்தவர்கள் கூட தமது அத்து மீறிய கெட்ட பழக்கங்களால் தத்தம் சக வாழ்வை கெடுத்துவிடுகிறார்கள். உதாரணமாக, புகைப்பிடித்தல் உடலுக்கு தீங்கு எனத் தெரிந்தும் அப்பழக்கத்தை தவிர்க்கத் தவறிவிடுகிறார்கள். மது அருந்தினால் உடலுக்கு கேடு எனத் தெரிந்தும் அப்பழக்கத்தை விட முடியவில்லை. இவைகள் யாவும், உடலுக்குத் துன்பம் தருபவை எனத் தெரிந்தும் இடம்கொடுத்து விடுகிறார்கள்.

உளரீதியாக சிந்தித்தால், மனதில் உண்டாகும் சஞ்சலங்கள் தான் துன்பத்தை உண்டாக்குகிறது. பேராசை பெருந் தரித்திரம் என்பது முதியோர் வாக்கு. ஆசை அளவுக்கு மீறினால் அது பேராசை. இயற்கையின் படைப்பில், மனிதருக்கு மட்டும் உண்டாகும் இப்பேராசையினால் மணி முடி இழந்த மன்னர்களும், போரினால் அழிந்த சாம்ராஜ்யங்களும் உலக சரித்திரத்தில் உண்டு. இதன் விளைவாக துன்பத்துக்கு ஆளாகிய மக்கள் இலட்சக் கணக்கானவர்கள்.

துன்பத்துக்கு முக்கிய காரணமான துர்ப் பழக்கங்கள், கெட்ட எண்ணங்கள், பேராசை, பொறாமை, பகை ஆகிய துர்க்குணங்களை எவ்வளவு தூரம் தவிர்க்க முடியுமோ, அவையே ஒரு நல்ல சமுதாயத்தை உருவாக்கும். அதனை முன்கூட்டியே ஆழ்ந்து சிந்தித்த ஔவையார் துன்பத்திற் கிடங்கொடேல் என உலகத்தினரையே உணர வைக்கிறார்.

# பயோனிக் கண் கிடைத்த முதல் பிரித்தானியர்

ஒவ்வொரு வருடமும் சுமார் 14000 பிரித்தானியர்களைப் பாதிக்கும் கண் வருத்தங்களில் ஒன்றான ஏ.எம்.டி (AMD) அனேகமாக வயது முதிர்ந்தவர்களைத் தாக்குவது கண் மருத்துவர்களின் ஆராய்ச்சியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இத்தகைய கண் வருத்தத்தால் இழக்கும் பார்வையை ஈடு செய்ய மேற்கொண்ட ஆராய்ச்சியில், ஆர்கஸ் (Argus II) எனப் பெயரிடப்பட்டுள்ள பயோனிக் கண் (bionic eye) என அழைக்கப்படும் கமராவை மருத்துவ விஞ்ஞானிகள் அறிமுகப்படுத்தியுள்ளனர். இந்தக் கமரா, முகக் கண்ணாடியில் பொருத்தப்பட்டு, அதனூடாக கிடைக்கும் நேரடிக் காட்சிகளை, சமிக்ஞைகள் ஊடாக விழித்திரைகளின் உள்வாங்கிகளுக்கு, மின்துடிப்புகள் மூலம் செலுத்தப்படுவதாக அறிகிறோம். இயற்கையாகக் கிடைக்கும் பார்க்கும் சக்தியுடன் செயற்கையான பயோனிக் கண்ணின் உந்துதலாலும், நேரடியான பார்வை இழந்தவர்கள், மிகத் தெளிவாகப் பார்க்க முடிவதாக, மஞ்செஸ்ரர் றோயல் கண் மருத்துவ நிலையத்தைச் சேர்ந்த பேராசிரியர் போலோ ஸ்ரங்க (paulo stanga) தெரிவிக்கிறார்.

இவ்வாராய்ச்சியாளர்கள் மேற்கொண்ட பரிசோதனையில் 80 வயது நிரம்பிய ரேய்பிளின் என்பருக்கு இந்தப் புதிய பயோனிக் கண் பொருத்தப்பட்டு மிக நேர்த்தியா அவரால் பார்க்க முடிவதாகவும், விழிகளை மூடிக் கொண்டே அவரால் நேரினில் இருக்கும் காட்சிகளைக் காணக் கூடியதாக இருப்பதாகவும் பேராசிரியர் போலோ அவர்கள் கூறுகிறார்.

இப்புதிய கண்டுபிடிப்பான பயோனிக் கண் மூலம் உலகில் பார்வை இழந்து தவிக்கும் 25 கோடி பார்வை இழந்தவர்களுக்கு இப்புதிய சிகிச்சை முறை அளப்பரிய நன்மையைத் தரப் போவது நிச்சயமென நம்பிக்கையுடன் பேராசிரியர் போலோ தெரிவிக்கிறார்.

## தகவல் களஞ்சியம்

வைத்திருப்பவர் : உமா மகாலிங்கம்

# கனக துர்க்கை அம்மன் ஆலய தேர்ப்பவனி

ஆண்டுதோறும் நடைபெறும் இரதோற்சவம், இவ்வருடம் 09.08.2015இல், ஈலிங் ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் ஆலயத்தில் மிகுந்த பக்தி பிரவாகத்துடன் அருள்கூடியது, கண்கொள்ளாக் காட்சி, உத்தேசமாக, 5000க்கும் அதிகமான பக்தர்கள் கூட்டம் கூட்டமாக அலைமோதியதை பார்த்தவர்கள் அம்மன் ஆலயத்தில் வருடாவருடம் வலம்வரும் தேர்த்திருவிழாவில் கூட இத்தகைய கூட்டத்தை கண்டிருக்க முடியுமோ என்பது மிகையல்ல.

அன்னை துர்க்காதேவி, தேருக்கு வரும் காட்சி, குறித்த நேரம் தவறாமல் ஒழுங்குபடுத்திய ஆலய நிர்வாகத்தினருக்கு ஒரு 'ஓம்' போடலாம். ஆண்கள், பெண்கள், முதியவர்கள், சிறியவர்கள் என்ற வேறுபாடின்றி, பக்திப் பிரவாகத்துடன் அம்மனை தரிசித்தது ஊர் நினைவுகளை மீட்டியது.

ஆனைமுகன், ஆறுமுகன் சமேதராக வீதி உலாவந்த துர்க்கா அம்மனின் தேர் பவனி, புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்களுக்கு மட்டுமல்ல, லண்டன் வாழ் ஏனைய சமூகத்தினருக்கும் கிடைத்த வியப்பான அருங்காட்சியாக அமைந்தது.

தேரின் வடம் பிடிக்கும் உரிமையை ஆண்களுக்கு சரி சமமாக பெண்களுக்கும் கை கொடுத்து அம்மன் சந்நிதானத்தில் ஆண்களும், பெண்களும் சரிசமம் என் நிரூபித்த சைவ சித்தாந்தம் பெருமைக்குரியது. அம்மன் வீதிவலம் வந்த சுமார் முக்கால் மைல் தூரத்தை மேளதாளம், நாதஸ்வரம் ஒலிக்கவும், தோத்திரப் பாடல்கள் பின் தொடரவும், அங்கப் பிரதிஷ்டை, அடி அழித்தல், பால்குடம் ஏந்துதல், கற்பூரச்சட்டி எரித்தல் தொடரவும், தேங்காய் உடைத்தல், காவடி எடுத்தல், கரகாட்டம் முன் செல்லவும், அம்மனின் அலங்காரப் பவனி பார்ப்பவர்களை மெய் மறக்கச் செய்தது.

அலத்துக் களைத்துப் போன அடியார்களை எல்லாம் ஆற அமர வைத்து, தாக சாந்தி, அன்னதானம் போன்ற உணவுத் தேவைகளையும், பிரத்தியேகமாக ஒழுங்கு செய்யப்பட்ட அருகிலிருக்கும் ஒரு பூங்காவில் மிக நேர்த்தியாக வழங்கிய சேவைக்கு, தொண்டர்களுக்கும், உள்ளூர் கட்சி மன்றத்தினருக்கும் நன்றி கூறுதல் பொருந்தும். அந்நிய தேசமொன்றுக்கு அகதிகளாக வந்த எம்மக்களை, கலை, கலாசாரம், மொழி, மதமென்ற வேறுபாடுகளை மறந்து, அவரவர் உரிமைகளை கிஞ்சித்தேனும் முகம் சுழிக்காமல் பரஸ்பர அன்புடன் பார்த்து மகிழ்ந்து அரவணைக்கும் பிரித்தானிய மக்களுக்கும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம்.

கருத்துக்களுக்கு - facebook.com/orupaper @orupaper


உ
ஸ்ரீ ராமஜெயம்



ஸ்ரீ ஜெய வீர ஆஞ்சநேயர் ஆலயம் - கொலின்டேல்

15ம் வருட அலங்கார உற்சவப் பெருவிழா விஞ்ஞாபனம்

காலம் : ஜய வருஷம் 19/8/15 முதல் 30/08/15 வரை

ஸ்ரீ ஆஞ்சநேயப் பெருமான் அடியார்களே,

சுகலவளங்களும்நிறைந்துவிளங்கும்இலண்டன்மாநகர்கொலின்டேல்பகுதியில்வீற்றிருந்துஅடியவர்களுக்குஅருளைவாரிவழங்கிகொண்டிருக்கும்ராமதுாதன்ஸ்ரீஜெயவீரஆஞ்சநேயபெருமானுக்கு எதிர்வரும் ஆவணி மாதம் 2ம் நாள் 18-08-2015 செவ்வாய்க்கிழமை மாலை 5 மணிக்கு விநாயகர் பூஜையுடன் ஆரம்பிக்கப்பட்டு அதனை தொடர்ந்து 12 நாட்கள் ஆஞ்சநேய பெருமானின் ஜய வருட அலங்கார உற்சவம் நடைபெற திருவருள் கூடியுள்ளது. அத்தருணம் அடியார்கள் அனைவரும் ஆசார சீலர்களாக விரதம் இருந்து திரளாக வருகை தந்து இறைவனின் திருக்காட்சியை கண்டு திருவருளைப் பெற்றுய்யும் வண்ணம் கேட்டுக்கொள்கிறோம்.

உற்சபகால நீகழ்ச்சிகள்

| காலை | மாலை |
|---|---|
| 09:00 – விநாயகர் பூசை | 05:30 – விசேட அபிடேகம் |
| 10:00 – விசேட அபிஷேகம் | 07:00 – விசேட கலை நிகழ்ச்சி |
| 12:00 – பூஜை | 08:00 – அலங்கார பூஜை |
| 12:45 – மங்கள ஆராத்தி | 08:45 – மங்கள ஆராத்தி |
| 01:00 – அன்னதானம் | 09:00 – பிரசாதம் |

விழா இறுதி நாளான 30-08-2015 ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 9.00 மணிக்கு விசேட அஷ்டோத்திர (108) சங்காபிஷேகமும் மதியம் 12 மணிக்கு விசேட அலங்கார பூஜையும் நடைபெறும். மாலை 5.30 மணிக்கு சீதாதேவி சமேத ராமசந்திரஸ்வாமிக்கு **திருக்கல்யான உற்சவம்** நடைபெறும். விழாக்காலங்களில் பூஜைக்கு தேவையான பால் பழங்கள் தயிர் பூக்கள் மற்றும் அன்னதானத்துக்கு தேவையான அரிசி பருப்பு மரக்கறி போன்றவற்றை அளித்து ஆண்டவன் அருள் பெற்றுக்கொள்ளுமாறு அன்புடன் வேண்டிக்கொள்கிறோம்.

ஸ்ரீ ராமஜெயம்

இங்கனம்

**அறங்காவலர்கள் மற்றும் ஆலயகுருக்கள்**

அனைவரும் வருக ஆஞ்சநேயர் அருள் பெறுக !

ஆலய முகவரி : Sri Jeya Veera Anjaneyar Alayam, Hanuman Community Center, (Marquin Center), Marsh Drive, West Hendon, NW9 7QE

Tel : 020 3609 4313, www.anjaneyar.co.uk, Emai : info@anjaneyar.co.uk

# உக்ரேனில் அமெரிக்கப் படைகள் அதிர்ச்சியில் இரசியா




**வேல் தர்மா**
**(ஒரு பேப்பருக்காக)**

உக்ரேனியப் படைகளுக்கு பயிற்சி அளிக்க அங்கு சென்றுள்ள ஐக்கிய அமெரிக்கப்படைகளால் இரசியா அதிர்ச்சியடைந்துள்ளது. உக்ரேனின் கிறிமியாவை தன்னுடன் இணைத்த இரசியா உக்ரேனின் இரசியர்கள் பெரும்பான்மையினராக வாழும் அதன் கிழக்குப் பிராந்தியத்தில் பெரும் கிளர்ச்சியைத் தூண்டியுள்ளது. அவர்கள் தமக்கு தனிநாடு கோரிப் போராடுகின்றார்கள். உக்ரேனுக்குள் இரசியா தனது படையினர் பலரை இரகசியமாக அனுப்பி உக்ரேனியப் படைகளுடன் சண்டை செய்ய வைத்துள்ளது.

### ◆ மூலம் சிரியா

சிரிய விவகாரத்தில் ஐக்கிய அமெரிக்காவுடன் இரசியா ஒத்துழைக்காததால் அமெரிக்கா உக்ரேனில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தி உக்ரேனை இரசியாவிற்கு எதிராகத் திருப்பியது. அதனால் உக்ரேன் இரசியாவின் யூரோ ஏசியன் பொருளாதாரக் கூட்டமைப்பில் இணையாமல் ஐரோப்பிய ஒன்றியத்தில் இணைய முனைந்தது. இதனால் ஆத்திரமடைந்த இரசியா உக்ரேனில் வாழும் இரசியர்களை உக்ரேனிய அரசுக்கு எதிராகக் கிளர்ந்து எழச் செய்தது. முன்பு இரசியாவின் ஒரு பகுதியாக இருந்ததும் இரசியாவிற்கு கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த கடற்படைத் தளத்தைக் கொண்டதுமான கிறிமியாவில் குழப்பம் உருவானது. கிறிமியாவில் ஒரு கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பு நடாத்தி அது இரசியாவுடன் இணைக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து இரசியாவிற்கு எதிராக நேட்டோ நாடுகள் பொருளாதாரத் தடைகளை விதித்தன.

### ◆ இரசியாவின் தளரும் பொருளாதாரம்

இரசியாவிற்கு எதிரான பொருளாதாரத் தடையும் உலகச் சந்தையில் வீழ்ச்சியுறும் எரிபொருள் விலை வீழ்ச்சியும் அதன் பொருளாதாரத்தைப் பெரிதும் பாதித்துள்ளது. தொடர்ந்து இரண்டு காலாண்டுகள் இரசியாவின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்த படியால் இரசியப் பொருளாதாரம் கோட்பாட்டு ரீதியாக மந்த நிலையை அடைந்துள்ளது என்பது உறுதியாகிவிட்டது. 2015-ம் ஆண்டிற்கான முதலாம் காலாண்டில் 2.2விழுக்காடு வீழ்ச்சியைக் கண்டிருந்தது. இரண்டாம் காலாண்டில் இரசியப் பொருளாதாரம் 4.6 விழுக்காடு வீழ்ச்சியை அடைந்ததுடன் அங்குவிலைவாசி 15.6விழுக்காடாக இருக்கின்றது. இரண்டாம் காலாண்டிற்கான வீழ்ச்சி எதிர்பார்த்த 4.5 விழுக்காட்டிலும் அதிகமாகும். 2015 ஜூலை வரையிலான 12 மாதங்களில் இரசிய நாணயம் அமெரிக்க டொலர்களுக்கு எதிராக 43 விழுக்காடு வீழ்ச்சியடைந்தது.

### ◆ இரசியாவின் படை இரகசியம் கை மாறுமா?

உக்ரேனில் கிளர்ச்சி செய்பவர்களுக்கும் உக்ரேனுக்குள் இரகசியமாக நுழைந்த இரசியப் படையினருக்கும் எதிராகப் போர் புரிய உக்ரேனியப் படைகளுக்கு ஐக்கிய அமெரிக்கப் படைகள் போர்ப்பயிற்சிகள் வழங்குகின்றன. முன்னாள் சோவியத் ஒன்றியத்தின் ஒரு உறுப்பு நாடாக இருந்த படியால் உக்ரேனியப் படையினர் இரசியாவின் போர் முறைகளைப் பற்றி நன்கு அறிந்தவர்கள். அத்துடன் இரசியப் படைகள் எப்படிப் போர் புரிகின்றன என்பது பற்றி தற்போது உக்ரேனியப்படைகள் அறிந்து கொள்கின்றன. உக்ரேனியப் படைகளிடமிருந்து அமெரிக்கப் படைகள் இத் தகவல்களைப் பெற்றுக் கொள்வது பற்றி இரசியா கலவரமடைந்துள்ளது.

### ◆ ஆளுளுக்கு போர் ஒத்திகை

ஐக்கிய அமெரிக்கா, பிரித்தானியா, கனடா, போலாந்து ஆகிய நாட்டுப் படைகள் உட்படப் பல நேட்டோப் படையினர் உக்ரேனியப் படைகளுடன் இணைந்து 2015-ம் ஆண்டின் நடுப்பகுதியில் போர்ப்பயிற்சிகளில் ஈடுபட்டதும் இரசியாவைக் கரிசனை கொள்ள வைத்துள்ளது. இந்தப் போர்ப்பயிற்சி தேவை ஏற்படின் அவர்கள் இரசியாவுடன் மோதலுக்குத் தயார் என்பதை உணர்த்துவதாக அமைந்திருந்தது. இப்பயிற்ச்சியில் 19 நாடுகளில் இருந்து 15,000 படையினர் ஈடுபட்டனர். ஒரு பயிற்ச்சியில் ஈருடகத் தரையிறக்கம் செய்யப்பட்டது. இன்னும் ஒரு பயிற்ச்சியில் போல்ரிக் நாடுகளிலும் போலாந்திலும் தாங்கிகள் தாழப் பறக்கும் விமானங்களுடன் பயிற்ச்சிகள் நடந்தன.

மூன்றவது பயிற்ச்சியில் நேட்டோ புதிதாக உருவாக்கிய Very High Readiness Joint Task Force எனப்படும் அதி துரித தயார் நிலை அதிரடிப் படையினர் போலாந்தில் பயிற்ச்சியில் ஈடுபட்டனர். பதிலுக்கு இரசியப் படையினர் லத்வியாவை ஆக்கிரமிப்பது போன்ற ஒரு பயிற்ச்சியில் ஈடுபட்டனர். இரசியாவின் பயிற்ச்சியில் எண்பதினாயிரம் படையினர் ஈடுபட்டனர். நேட்டோப் படைகள் தேவை ஏற்படின் உக்ரேனின் படை நிலைகளையும் படைத்துறைக் களஞ்சியங்களையும் பாவிக்க உக்ரேன் அனுமதி வழங்கியுள்ளது.

### ◆ பாதுகாப்புச்சபையில் தனித்த புட்டீன்

2015 ஜூலை மாதம் 3-ம் திகதி இரசியாவின் பாதுகாப்புச் சபைக் கூட்டம் நடை பெற்றது. பத்துப் பேரைக் கொண்ட இரசியப் பாதுகாப்புச் சபையில் இரசிய அதிபர் விளடிமீர் புட்டின் மட்டுமே தனது நாட்டுப் படைகள் தனது ஆணையை ஏற்றுப் நேட்டோப் படைகளுடன் போர் புரியும் என நம்புகின்றனர். ஐக்கிய அமெரிக்கா இரசியாவை ஆக்கிரமிக்க முயல்கின்றது என புட்டீன் உறுதியாக நம்புகின்றார்.

நேட்ட்ப்படைகளுடன் ஒரு போருக்கு அவர் தாயார் என்கின்றார். இரசியாவின் பாதுகாப்புச் சபைக்கூட்டத்தின் பின்னர் மாஸ்கோவின் எதிரொலி என்ற வானொலி எடுத்த கருத்துக் கணிப்பில் இரசியாவிற்கும் நேட்டோவிற்கும் இடையில் நேரடி மோதல் நடக்கும் என 43 விழுக்காட்டினர் பதிலளித்துள்ளனர். இதுவரை வட அமெரிக்க மற்றும் மேற்கு ஐரோப்பிய நாடுகளை எமது மேற்கத்தையப் பங்காளிகள் என குறிப்பிட்டு வந்த புட்டீன் இப்போது அவர்களை எமது புவிசார் அரசியல் எதிரிகள் எனக் குறிப்பிடத் தொடங்கியிருக்கின்றார் என்பதை அரசியல் நோக்குனர்கள் கவனமாகக் கருத்தில் கொண்டுள்ளனர்.

### ◆ பெருகும் போர் அபாயம்

இரசிய எதிர்க்கட்சித் தலைவரும் முன்னாள் கே.ஜீ.பி அதிகாரியுமான கென்னடி குட்கோவ் உக்ரேனில் நிலைமைகள் மோசமடைந்து இரசியப் படைகளுக்கும் நேட்டோ ஆதரவுப் படைகளுக்கும் இடையிலான ஒரு மோதல் சாத்தியமான ஒன்று என்றார்.

பிரித்தானியாவில் உள்ள European Leadership Network என அழைக்கப்படும் போர் தொடர்பான சிந்தனையாளர் குழு நடக்கும் ஒத்திகைகள் போர் அபாயத்தை அதிகரித்துள்ளது என்கின்றது.

கருத்துக்களுக்கு - facebook.com/orupaper @orupaper

## காலம் கடந்து விடவில்லை...

ஏன் இப்படி ஏமாந்து போகின்றீர்கள்?
இப்படி எம்மை ஏசுகின்றார்கள்.
எமக்கும் எதுவும் புரியவில்லை
நாம் செய்தது சரியா தவறா?
இவற்றையெல்லாம் சிந்திக்கவும்
அவர் சரி இவர் பிழை என தெரியவும்
எமக்கு வல்லமை இல்லையா?
எமது உயிரைப்பிடித்து வைக்க
போராடுவதிலேயே எங்கள் நாட்கள்
எரிந்து கொண்டிருக்கின்றன.
யார் வந்தால் எமக்கென்ன என்ற
அலட்சிய மனோபாவமும்,
எமக்குள்ள தேர்ந்தெடுக்கும்
உரிமையை வீணாக்கவேண்டாமே என்ற
எங்கள் தீர்மானமும் தான்
எம்மை இவ்வாறு செய்யவைத்தது
தெரிவுகளை யோசிக்க முடியவில்லை
அதனால் காலம் காலமாக
எதனை தெரிவுசெய்து வந்தோமோ
அதனையே தேர்ந்தெடுத்தோம்
எங்கள் வாழ்வில் தொடரும் துயரம்
எமக்கு சிந்திக்க அவகாசம் தருவதில்லை
எப்படியாவது கருகும் உயிரை
காக்கவேண்டும்
இதற்காகத்தான் போராடுகின்றோம்.
அதனால் எம்மைச்சுற்றி
என்ன நடக்கின்றது என்பதனை
அறிய எம்மால் முடியவில்லை
முதலில் நாங்கள் உயிர்வாழவேண்டும்
அச்சமில்லாமல் எங்கும் செல்லவேண்டும்
வாழ்வதற்கு வாழிடம் வேண்டும்
குடிப்பதற்கு முதலில் தண்ணீர் வேண்டும்
எங்கள் குழந்தைகளின்
பசியைத் தீர்க்கவேண்டும்
அவர்களின் கல்விக்கு வழிசெய்யவேண்டும்
எங்கள் பெண்களை
காமுகக் கூட்டத்திடமிருந்து
எப்படியும் காப்பாற்றவேண்டும்.
இப்படி எண்ணிலாத துயரங்களுக்குள்
புதைந்து புதைந்து எழுந்திட
முடியாமல் தவித்து தத்தளிக்கும்
எங்கள் முனகலை செவிமடுங்கள்
உயிர்காக்கும் இந்த போராட்டத்துள்
சிக்கி திணறித்திண்டாடும் எங்களால்
சரியானவர்களை எப்படி
இனங்காணமுடியும்?
காலம் கடந்து விடவில்லை.
அரசியலுக்கு அப்பால் சென்று
மானிட அன்போடு எங்களை அணுகி
எங்களுக்குள் நின்று எமக்காக
உழைக்கும் போது
எவர் சரி எவர் பிழை என அறிவோம்
உண்மை எது பொய் எது என
இனங்கண்டு கொள்வோம்
ஒன்றுபட்டு நிற்போம் உறுதியோடு
செயற்படுவோம்

- மாதினி

herbal Aid




- உங்கள் தாம்பத்திய வாழ்க்கையில் சிக்கலா?
காலத்தை வீணடிக்காமல் தொடர்பு கொள்ளவும்.

For Further Information visit
www.herbalaid.co.uk
or Call Us
Don't Waste an other day




Ayurvedic - Unani Herbal Suppliment - Natural way to healthier life....

ஆண்களுக்கான மசாஜ் எண்ணெய்
பல மூலிகைகளால் 100% இயற்கை முறையில் தயாரிக்கப்பட்டது.
எந்த வித பக்கவிளைவுகளுமற்ற எண்ணெய்.

100% natural no preservatives
Always Stunning
feel excitement you never before
You can buy online from
www.herbalaid.co.uk
or
Buy from your local shop

Call Us 02088430330

Herbal Aid Limited 10, Park Avenue, Southall, Middlesex, UB1 3AQ
Email ID : herbalaid@hotmail.co.uk Contact Number : 02088430330 Skype ID : herbalaidhealthcenter
Online Health Blog : health.herbalaidc.co.uk Online Store : www.herbalaidc.co.uk

# The TNA is a social failure



By : Sinthujan Varatharajah

The Tamil National Alliance (TNA) rose to become the third largest party in Monday's national election in Sri Lanka. The cross party's success is in many ways driven by the fact that there are few significant alternatives available for Tamil voters but the TNA. Though the party is socially, economically and politically regressive (as is much of the Tamil mainstream), Sinhalese hegemony creates the need for effective and undivided leadership to challenge the erosion of Tamil presence in the country. This creates a void and power monopoly that TNA leaders have misused over and over again.

Similar as to the Tamil people's relationship to India, their relationship to the main Tamil party is that of an abductee suffering from Stockholm syndrome. The TNA's old boys club may betray 'their' people over and over again, but left with little choices, the betrayed will sooner or later return. This enables the TNA to freely practice a politics of treachery without being forced to face actual accountability for their (in)actions. Upper caste cis-men are thereby given relentless power to dictate the terms of how a Tamil polity needs to be structured and respond to Sinhalese racism. What they then practice often boils down to respectability politics.

In Sri Lanka, a Tamil franchise can never be an equal franchise while their lands are occupied, people detained, disappeared and murdered. As long as Tamil people vote to safeguard their future as a people while Sinhalese people vote against corruption, there will neither be equality or freedom. As long as Tamil people need to calculate and hierarchise their struggles to survive as communities, there will not be peace or reconciliaton. As long as the former President is threatened to face the call of justice for corruption charges, but not the slaughter of more than 100,000 Tamils, so-called fellow citizens, there won't be justice.

> While many Tamils come to celebrate the landslide victory of the TNA, let's consider the tragedy of being bound to such a socially, economically and politically regressive force by state violence. External violence doesn't stop in front of our house doors. It projects to the inside.

A Tamil franchise will remain a force of resistance, a protest, that aims to consolidate power at the expenses of its most marginalised who may find racial representation, but rarely caste, class, gender and/or sexual representation. Their struggles are forced to hibernate, awaiting national liberation to be able to even consider individual liberation. While many Tamils come to celebrate the landslide victory of the TNA, let's consider the tragedy of being bound to such a socially, economically and politically regressive force by state violence. External violence doesn't stop in front of our house doors. It projects to the inside.

The TNA is as much of a political success as it is a social failure.

# நடக்க இருக்கும் நிகழ்வுகள்

**AUGUST 22 SATURDAY**

*அரசறிவியல் மற்றும் இராசரீக ஆய்வரங்கம்*

தமிழின அழிப்பிற்கு நீதிதேடி பிரித்தானிய தமிழர் ஒருங்கிணைப்புக் குழு நடாத்தும் அரசியல் மற்றும் இராசரீக ஆய்வரங்கம்.

தொடர்புகளுக்கு : 074 0166 4266
020 371 9313

**AUGUST 23 SUNDAY**

*Tamil Community Barbecue*

Networking Opportunity for youth, women, Business, charities and others..

நேரம்: மதியம் 12:00 மணி முதல்

இடம்: Lavender Park, Mitcham, CR4 3RSE

தொடர்புகளுக்கு : admin@tamilsforum.com

**AUGUST 28 FRIDAY**

*வருடாந்த மஹோற்சவ நிகழ்வுகள்*

இலண்டன் அருள்மிகு சிவன் திருக்கோயில் வருடாந்த மஹோற்சவ நிகழ்வுகள். 28ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும் மஹோற்சவம் 18.09.15 அன்று வைரவர் பொங்கல் விழாவுடன் நிறைவு பெறும்.

நேரம்: காலை 06:00 மணி முதல்

இடம்: 4A, Clarendon Rise,
Lewisham,
London, SE13 5ES

**AUGUST 31 MONDAY**

*Summer Sports Festival 2015*

தமிழ் பாடசாலைகள் விளையாட்டுச் சங்கம் (ஐ.இ) நடாத்தும் மாபெரும் விளையாட்டு நிகழ்வுகள்.

நேரம்: காலை 09.00 மணி முதல்

இடம்: Raynes Park Sports Ground,
Tauton Avenue
SW20 0BHE




# வன்னியில் ஒரு காலத்தில் தன்னிறைவு கொண்டு விளங்கிய மூன்று கிராமங்களின் கதை




மகாலிங்கம் பத்மநாபன்

*பெரிய பரந்தன், குஞ்சுப்பரந்தன். செருக்கன் கிராமங்களின் பொற்காலமும் நீலனாறு, கொல்லனாறுகளால் சூழப்பட்டு பொறிக் கடவை அம்பாளின் அனுக்கிரகத்தால் வாழ்ந்த மக்களின் வரலாறும்.*

**கலை**

பெரிய பரந்தன், குஞ்சுப்பரந்தனில் காத்தான் சிந்து நடைக் கூத்து, கண்ணகி கோவலன் கூத்து என்பன சிறந்து விளங்கின. கிளி/பரந்தன் அ.த.க பாடசாலை மாணவர்கள் பலமுறை கோட்ட மட்ட, மாவட்ட மட்டப் போட்டிகளில் முதலாவதாக வந்து தமது பாரம்பரியத்தை நிலை நாட்டினர்.

**சமய நம்பிக்கை**

பொறிக்கடவை அம்மன் கோவிலைத் தவிர பெரிய பரந்தனில் பள்ளமோட்டைப் பிள்ளையார், குழந்தையன் மோட்டைப் பிள்ளையார், பாடசாலையடிப் பிள்ளையார் என மூன்று பிள்ளையார் கோவில்கள் சிறிய அளவில் கட்டப்பட்டுக் கும்பாபிஷேகம் செய்யப்பட்டு வழிபடப்படுகின்றன. குஞ்சுப்பரந்தனில் ஒன்று, செருக்கனில் ஒன்று எனப் பிள்ளையார் கோவில்கள் உண்டு. இவை தவிர காட்டுக் கரைகளில் காளி கோவில், வைரவர், வீரபத்திரர், ஐயன் கோவில்கள் அமைக்கப்பட்டு பாரம்பரிய முறைப்படி வழிபாடும் பொங்கலும் மடையும் இடம்பெறுகின்றன. இக்கோவில்களில் பறைமேளம் அடித்தலும், கலை ஆடுதலும் இடம்பெறுகின்றன. நோய்களுக்கு கலையாடி திருநீறு போடும் வழக்கம் இன்றும் வழக்கில் உள்ளன.

ஒரு காலத்தில் சுய நிறைவு பெற்று செல்வத்தில் கொழித்த பெரியபரந்தன், குஞ்சுப்பரந்தன், செருக்கன் கிராமம் இன்று கவனிப்பாரற்று கிளிநொச்சி மாவட்டத்தில் ஓர் மூலையில் உள்ளன. இக்கிராமங்கள் மீது அரசு கூடிய கவனம் செலுத்த வேண்டும். நீலனாறு, கொல்லனாறு ஆழப்படுத்தப்பட வேண்டும். காஞ்சிபுரத்திற்கும் பெரிய பரந்தனுக்குமிடையே நீலனாற்றின் குறுக்கே பாலம் அமைக்கப்பட வேண்டும். இதுவரை எவ்வித உதவியும் இன்றி வாழும் செருக்கன் கிராம மக்கள் மீது அரசு கூடுதல் கரிசனை காட்ட வேண்டும்.

பெரிய பரந்தன், குஞ்சுப்பரந்தன், செருக்கன் மக்களின் வேறு வருமானங்கள்

1. சித்திரை மாதம் காட்டில் ஈச்சம்பழம் பறித்தல்.
2. வைகாசி மாதம் காட்டில் பாலப்பழம் பறித்தல். பாலப்பழம் சாவகச்சேரி, யாழ்ப்பாணம், சுன்னாகம் சந்தை வரை சந்தைப் படுத்தப்படும். பாலப்பழப் பாணி காய்ச்சுதல் உபதொழிலாகும்.
3. தாராளமான விறகு
4. விளாங்காய், புளியங்காய்களையும், பழங்களையும் வனத்திலிருந்து பெறல்.
5. தூதுவளை முதலிய பலவகைக் கீரைகளையும், மூலிகைகளையும் வனத்திலிருந்து பெறல்.

கிளி/பரந்தன் அ.த.க பாடசாலையில் கற்று அரச உத்தியோகம் பார்த்தோர் விபரம்

1. திரு.த.க.மகாலிங்கம் - பரந்தன் கிராம விதானையாகவும், பரந்தன் கிராம சேவையாளராகவும் கடமை புரிந்தவர். கிளிநொச்சி நகர கிராம சேவையாளராகக் கடமை புரியும் போது உயிர் துறந்தவர்.
2. திரு.வே.பாலசுந்தரம் - கிளி/உருத்திரபுரம் ம.வி யின் வளர்ச்சியில் உறுதுணையாக இருந்த ஆசிரியர். இலங்கைத் தமிழாசிரியர் சங்க நீண்டநாள் உறுப்பினர். பொறிக் கடவை அம்மன் அறங்காவல் குழு முன்நாள் பொருளாளர்.

3. திரு.க.ம.பத்மநாதன் - ஓய்வுநிலை பிரதிக் கல்விப்பணிப்பாளர். கிளிநொச்சி கல்வி அறக் கட்டளை தலைவர். பொறிக்கடவை அம்மன் அறங்காவல் குழுத்தலைவர்.

4. திரு. பேரம்பலம் சச்சிதானந்த சுந்தரம் - ஓய்வுநிலை அதிபர். ஓய்வு பெறும் போது கிளி/ புன்னை நீராவி அ.த.க.பாடசாலை அதிபர். சமாதான நீதவான்.

5. திரு.ம.பத்மநாபன்- ஓய்வுநிலை அதிபர். கடைசியாகக் கடமையாற்றிய பாடசாலை கிளி/ பரந்தன் இந்து ம.வி.

**தங்குவேட்டை:**

காலபோகம் முடிவுற்றுச் சிறுபோகம் ஆரம்பிக்க முதல் உள்ள இடைக்காலத்தில் வயல்களில் நீர் வற்றி மீன்கள் கூட்டம் கூட்டமாகச் செத்து மணக்கும். எருமை மாடுகளுக்காக ஒதுக்கப்பட்ட குளங்கள், மோட்டைகள் தவிர ஏனைய நீர் நிலைகள் வற்றத் தொடங்கும்.

அதே காலத்தில் காட்டிலும் நீர்ப்பஞ்சம் ஏற்படும். வெகுதூர இடைவெளிகளில் சில மோட்டைகளில் மட்டும் நீர் இருக்கும். யானைகள், குழுவன் மாடுகள், மரைகள், மான்கள், கரடிகள், சிறுத்தைகள், பன்றிகள், மந்திகள் யாவும் இம்மோட்டைகளை நாடி வரும். இக்காலமே தங்குவேட்டைக்கு உகந்த காலம் ஆகும்.

வேட்டையில் ஆர்வமுள்ள யாவரும் ஒன்று கூடித்திட்டமிடுவர். துப்பாக்கிகளுடன் வருபவர்களும் உண்டு. துப்பாக்கியை மட்டும் வழங்குபவர்களும் உண்டு. காட்டை நன்கு தெரிந்தவர், குறிபார்த்துச் சுடவல்லவர், துப்பாக்கிக்கு தோட்டா, ஐந்து பற்றி ரோச் லைற்களும், பற்றிகளும் வழங்குபவர்கள், வேட்டையாடிய மிருகங்களை உரித்து இறைச்சியை வார் வாராக வெட்டி வத்தலில் வல்லவர், சமையல் வேலை செய்பவர், தொட்டாட்டு வேலைகள் செய்பவர் என்று தங்குவேட்டைக்குச் செல்பவர் யார் யாரென முடிவு செய்வர். சமையல் பாத்திரம், பண்டங்கள், வேட்டை உபகரணம், கத்தி, கோடரி, மண்வெட்டி முதலியவற்றைத் தோளில் காவி எடுத்துச் செல்வர்.

நீர் நிலைகளிலிருந்து ஒரு மைல் தொலைவில் தற்காலிக தங்குமிடம் ஏற்படுத்தப்படும். அவ்விடம் காற்றுவீசும் திசைக்கு எதிர்த்திசையில் அமைந்திருக்கும். காற்று வீசும் திசையில் இருந்தால் விலங்குகள் மோப்பம் பிடித்துவிட்டால் நீர் நிலைகளுக்கு வராது தவிர்த்துவிடும்.

தங்குவேட்டை இரண்டுவிதமாக இடம் பெறும். நீர் நிலைக்கருகே காற்று வீசும் திசைக்கு எதிர்த்திசையில் உயரமான மரங்கள் இருந்தால், அம்மரங்களில் பரண்கள் அமைத்து அவ்வுயரமான பரண்களில் 12ம் நம்பர், 16ம் நம்பர் துப்பாக்கிகளுடன் காத்திருந்து பொருத்தமான மிருகங்கள் வரும் போது வேட்டையாடுவர். யானைகள், கரடிகள், மந்திகள், சிறுத்தைகள், குழுவன் மாடுகளைத் தவிர்த்து விடுவர். மரை, மான், பன்றி என்பவையே வேட்டையாடுபவர்களின் விருப்பத் தெரிவாகும். மரை, மான் பெட்டைகளையும் குட்டிகளையும் தவிர்த்து விடுவர். கலைகளையே (ஆண்) தெரிவு செய்து வேட்டையாடுவர். வேட்டையில் அகப்படும் மிருகங்கள் பதப்படுத்தப்படுவதற்காக உடனுக்குடன் தற்காலிக தங்குமிடத்திற்குக் கொண்டு செல்லப்படும். மிருகங்களின் ஈரல் முதலிய நீண்டகாலம் பாதுகாக்கப்பட முடியாத உள்ளுறுப்புக்கள் நெருப்புத் தணல்களில் சுடப்பட்டு வேட்டையாடுபவர்களுக்கிடையே பங்கிடப்படும். உடனுக்குடன் சுடப்பட்ட ஈரல்களுக்கிணையான சுவையான வேறு உணவு இந்த ஈரேழு உலகத்திலும் கிடைக்காது.

12ம் நம்பர், 16ம் நம்பர் என்பது துப்பாக்கியின் சுடுகுழலின் விட்டங்களின் அளவீடுகள் ஆகும். துப்பாக்கிப் பெட்டியில் ஒரு குண்டுத் தோட்டா, நான்கு நடுத்தரக் குண்டுகள் உள்ள தோட்டாக்கள், பதினாறு சிறிய குண்டுகள் உள்ள 4ம் நம்பர் தோட்டா என்பன இருக்கும். ஒரு பெரிய குண்டு உள்ள குண்டுத் தோட்டா யானை, முரட்டுக் குழுவன் மாடு என்பவற்றைச் சுடப்பயன்படும். 4ம் நம்பர் தோட்டாக்கள் முயல், உக்கிழான், காட்டுக்கோழி, மயில், கௌதாரி என்பவற்றைச் சுடப் பயன்படுத்தப்படும். மான், மரை, பன்றிகளுக்கு SG தோட்டாவே பொருத்தமானதாகும்.

நீர் நிலைகளுக்கருகே பொருத்தமான, உயரமான மரம் இல்லாதவிடத்து தங்குவேட்டை சிரமம் வாய்ந்ததாகிவிடும். நீர் நிலையிலிருந்து சுமார் 75 அடி தூரத்தில் காற்று வீசும் திசைக்கு எதிர்த் திசையில் 8 அடி நீளம், 8 அடி அகலம், 8 அடி ஆழமுள்ள கிடங்கு வெட்டப்படும். பலமான 10 அடி நீளமரங்கள் குழியின் வாயை மூடி அடுக்கப்படும். அதன்மேல் இலைகுழைகள் பரப்பப்படும். அவற்றை மூடி மண் போட்டுச் சமன்படுத்துவர். அதில் ஒரு பதுங்குகுழி அமைக்கப்பட்டிருப்பது தெரியாதவாறு மண் முன்போலப் பரவப்பட்டுவிடும். ஒரு மனிதர் இறங்கி, ஏறுவதற்குரிய படியமைப்புகள் ஒரு மூலையில் இருக்கும். உள்ளிருந்தவாறே துப்பாக்கியை நீட்டிச் சுடத்தக்க இரு துவாரங்கள் நீர் நிலைப்பக்கமாக அமைக்கப் பட்டிருக்கும். இந்த இரண்டாவது முறையில் சில சாதக, பாதகங்கள் உண்டு.

பதுங்கு குழியிலிருந்து வேட்டையாடிய ஓர் வேட்டைக்காரரால் கூறப்பட்ட ஓர் உண்மைச் சம்பவம் மிகவும் சுவாரஸ்சியமானது. ஒரு முறை ஒரு அனுபவம் குறைந்த வேட்டைக்காரர் பன்றி என்று நினைத்து ஒரு கரடியைச் சுட்டு விட்டார். அது கரடியைக் காயப்படுத்தியதே தவிரக் கொல்லவில்லை. கரடி ஓங்கிக் குரலெடுத்துக் கத்தத் தொடங்கிவிட்டது. அதன் அபயக் குரல் கேட்டு ஒரு கரடிக் கூட்டமே நீர் நிலையில் கூடி விட்டன.

நரிகள் ஏதாவது வேட்டையின் மிச்சம் மீதி கிடைக்காதா எனச் சூழ நின்றன. ஆவேசமுற்ற கரடிகள் பதுங்குகுழியை நோக்கி உறுமியபடி வருவதும் போவதுமாயிருந்தன. தூரத்தில் ஓர் சிறுத்தை உறுமிய சத்தம் கேட்டது. வேட்டைக்காரர்கள் செய்வதறியாது திகைத்துப் போயினர். பயந்து நடுங்கினர். அனுபவசாலியான வேட்டைக்காரர் மற்றவரை இறக்கிவிட்டுத் தாம் துப்பாக்கியை ஏந்தி நிதானமாகக் குறிபார்த்துக் காயப்பட்ட கரடியை நோக்கிச் சுட்டார். கரடியும் இறந்தது. சத்தமும் நின்றது. விலங்குகள் யாவும் நீர் நிலையை விட்டு விலகிச் சென்றன. விடியும் வரை காத்திருந்தே யாவரும் வெளியில் வந்தனர். செய்தி காடு முழுவதும் பரவியது போல அடுத்த இரு நாட்களும் விலங்குகள் எதுவும் அந்நீர்நிலையை நோக்கி வரவில்லை. பின்னர் ஒன்றிரண்டாக வரத் தொடங்கின.

ஒவ்வொரு உறுப்பினரும் மூன்று மாதங்களுக்கான இறைச்சி வத்தல்களுடனும் கடைசி நாள் வேட்டையாடிய உடன் இறைச்சியுடனும் தம் தம் வீடு போய்ச்சேர்வர்.

*தொடரும்..*

பிரித்தானியா
TEL: 020 7043 4315 FAX : 020 7043 4312
உங்கள் வாழ்க்கைத் துணையை
தேர்ந்தெடுக்க வேண்டுமா?
TEL: 647 724 4188 FAX : 416 438 7855
கனடா



# ரணிலின் கிராம ராஜ்ஜியத்தில் கோழி மேய்க்கப்போகிறதா கூட்டமைப்பு



தேர்தல் சந்தடியில் இரண்டு சில்லு ஒரு சைக்கிளா? ஒரே வீடு தனித்தனி அறையா? என தமிழர்கள் அதிகாரப் பகிர்வு குறித்த கனவில் தேர்தல் பட்டிமன்றம் நடாத்திக் கொண்டிருக்க, அனைத்தையும் தவிடுபொடியாக்கும் தனது நரித்திட்டத்தை திருவாய் மலர்ந்தருளியிருந்தார் பிரதமர் ரணில் அவர்கள்.

தேர்தல் விஞ்ஞாபனத்தில் தமிழ்க் கட்சிகள் முன்வைத்த சமஷ்டி தீர்வு, சுயநிர்ணய உரிமை என்பன கடைசியில் அவரது வாயை திறந்து விட்டிருந்தது. விழுந்தாலும் தன் மீசையில் இன்னமும் மண் பிரளவில்லை என்கின்ற மகிந்த மீண்டும் இனவாதத்தை கையிலெடுத்து தான் கொடுக்காததை ரணில் தமிழர்களுக்கு கொடுத்து விடப் போகிறார் என்றும் அதனால் நாடு பிளவுபடப் போகிறது என்றும் சிங்கள மக்கள் முன் முதலைக் கண்ணீர் வடித்துத் தீர்த்தார்.

அதற்கு சற்றும் சளைக்காத ரணிலோ தான் ஒன்றும் இனவாதத்தில் குறைந்துவிடவில்லை என்பதுபோல 'தமிழர்களுக்கு சமஷ்டி தீர்வை வழங்கப் போவதில்லை' என்றும் தமிழர் சக்திகளின் ஆதரவு இன்றியே தாம் வெல்லும் வாய்ப்பு இருப்பதால் தான் ஏன் அவர்கள் சொல்வதை கேட்கவேண்டும் என்றும் கிராமிய மட்டத்திலேயே அதிகாரங்கள் பகிரப்படுமெனவும் சூசகமாக தனது 'நரித்திட்டத்தை' வெளிப்படுத்தியிருக்கிறார். பின்னர் இந்து பத்திரிகைக்கு அளித்த நேர்காணலில் அதை உறுதிப்படுத்தியிருக்கிறார்.

ரணிலின் 'கிராம ராஜ்யம்' ஒன்றும் புதிதாக வெளியில் வந்த பூனைக்குட்டியல்ல. ஏற்கனவே மகிந்தவின் ஆட்சியில் 'பஞ்சாயத்து ராஜ்' என்ற பெயரில் இந்திய காங்கிரஸ் கட்சியின் மணிசங்கர் அய்யர் மட்டத்தில் விவாதிக்கப்பட்டு தமிழர் தரப்பால் நிராகரிக்கப்பட்ட புளித்துப் போன பழைய கள்ளு.

தமிழ் மக்கள் அறுபதாண்டுகள் பார்த்து சலித்த அதே தேர்தல் நாடகமே மீண்டும் மீண்டும் இலங்கையில் மேடையேறுகிறது. நடிகர்கள் மட்டும் மாறியுள்ளார்கள்.

தமிழர்களுக்கு எந்தக் கட்சி கூடுதல் கெடுதல் செய்தால் ஆட்சியை பிடிக்கலாம் என்ற போக்கோ இப்போ தமிழர்களுக்கு எந்தக் கட்சி குறைவாக குடுத்தால் அல்லது குடுக்காமல் விட்டால் ஆட்சியை பிடிக்கலாம் என்று சற்று மாறியிருக்கிறது. அதுவும் சர்வதேச போர்க்குற்றத்திலிருந்து தப்பும் ஒரு உபாயமாகவே சிங்களத்தால் கையாளப்படுகிறது.

ராஜபக்ச என்ற ராவணனை வீழ்த்தினால் ராம ராஜ்ஜியம் தான் என்ற எதிர்பார்ப்பிலிருந்த கூட்டமைப்புக்கு அது ராமராஜ்ஜியம் அல்ல கிராம ராஜ்ஜியம் என்று தெளிவுபடுத்தியிருக்கிறார் ரணில். தான் ஆட்சிக்கு வந்தால் அரசியல் அமைப்பிலுள்ள 13ஆம் திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்தி அதிகாரங்களை தரப்போவதாக லண்டனிலும், உயர்பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் இராணுவம் ஆக்கிரமித்த காணிகளில் முழுமையாகி மீள் குடியேற்றுவோம் என்று தெல்லிப்பளையிலும் தமிழர்களிடம் ஆதரவு பிச்சை எடுத்தவர் இப்போ ஏழுமாத கால 'நல்லாட்சியில்' ஏன் எதையும் முழுமையாக நடைமுறைப்படுத்தவில்லை?

மாறாக தன்னை பலப்படுத்தி அரசாங்கத்தை கைப்பற்றி சிறிலங்காவை 'சர்வதேச போர்க் குற்றத்திலிருந்து' காப்பாற்றவும் தமிழர்களின் அகிம்சை போராட்ட காலத்திலிருந்து ஆயுத போராட்ட காலம் வரை மாவட்ட சபை, மாகாண சபை என வலுவடைந்த குறைந்தபட்ச அதிகார அமைப்பைகூட 'கிராமராஜ்ஜியம்' என்ற பெயரில் கிராம மட்டத்திற்கு சுக்குநூறாகி உடைப்பதற்கும் திட்டமிட்டுள்ளார் ரணில்.

அதன் வெளிப்பாடே தேர்தலுக்கு சிலதினங்களுக்கு முந்திய இந்த அறிவிப்பு. இனி மாகாணசபைக்கும் அப்பால் 2016இல் 'பிராந்திய அரசாங்கம்' என்றும் 'சமஷ்டி தீர்வு' என்றும் உறுதி மொழிகளை வழங்கிய கூட்டமைப்பு ரணிலின் கிராம ராஜ்ஜியத்தில் கோழி மேய்க்கப் போகிறதா என்ன?

காணி, பொலிஸ் அதிகாரங்களை வழங்குவதில் தமக்கு நெருடலாகி இருக்கும் 13ஆம் திருத்தச் சட்டத்தையும் நீக்கிவிட்டு 'புதிய அரசியலமைப்பில்' பெரும்பான்மையின ஒற்றையாட்சியையே வேறுவடிவத்தில் சிங்களம் வலியுறுத்தும் அதை தடுக்கக் கூடிய நாடாளுமன்ற பெரும்பான்மை பலம் கூட தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கு கிடையாது. இந்தி 'உட்குத்தை' அறிந்தும் அறியாமல் ஐ.நா.வும் தென்னாபிரிக்காவை ஏத்த மன்னித்துவிடும் நல்லிணக்க தீர்வை சிறிலங்காவில் வலியுறுத்தினால் காலங்காலமாகி தமிழர்கள் ஏமாற்றப்படுவதைப்போல சர்வதேச ரீதியாக தமிழர்கள் மீண்டும் ஏமாற்றப்படுவார்கள்.

தமிழர்களிடம் இருக்கும் ஒரேயொரு அஸ்திரமான 'சர்வதேச குற்றவியல் விசாரணையையும்' கைவிட்டால் சிங்கள இனவாதம் மிக இலகுவாக தமிழர்களின் அரசியல் பேரம் பேசும் பலத்தை இல்லாமல் செய்துவிடும். அது வருங்கால தமிழ் சந்ததிகளுக்கு பாதுகாப்பற்ற எதிர்காலத்தையும், முடிவெடுக்கக்கூடிய அரசியல் உரிமையையும் சுனியமாக்கிவிடும்.

மீண்டும் பேரழிவுகளை சந்திக்க திரணியற்ற தமிழ் இனம் சிறுபான்மையிலும் சிறுபான்மையாக குடாநாட்டுக்குள்ளேயே முடக்கப்படுமா? யாழ்ப்பாண மக்களை மட்டும் திருப்தியாக வைத்திருந்தால் நாட்டின் பிரச்சினை தீர்ந்துவிடும் என்ற ரணிலின் கருத்தின் எதிர்மறை அர்த்தம் அதனைத்தான் கூறுகிறது. போதாதற்கு வடகிழக்கு இணைப்புக்கு அனுமதிக்கப்போவதில்லை என்றும் பிரதான முஸ்லிம் கட்சி ஒன்றினூடாக ஓதப்பட்டிருக்கிறது.

மக்கள் மயப்படுத்தப்பட்ட ஒரு அரசியல் இயக்கம் மூலமே இதை தடுக்க முடியும். நிலத்திலும் புலத்திலும் அதை செய்யக்கூடியவர்கள் இன்னமும் இருக்கிறார்கள். அரசியல் யாப்பே மீண்டும் தமிழர்களுக்கு ஆப்பாக மாற அனுமதிக்கக்கூடாது.

டொனமூர் அரசியல் யாப்பில் சேர்.பொன். இராமநாதனின் கோரிக்கை நிராகரிக்கப்பட்ட போது 'donough more proposals tamil no more' தமிழர்களுக்கு ஒன்றுமேயில்லை என்று அவர் மனமுடைந்து விரைவில் இறந்து போனார்.

சோல்பெரி அரசியல் யாப்பில் ஜி.ஜி.பொன்னம்பலத்தின் கோரிக்கைக்கும் அதுவே நடந்தது. ஒற்றைக் கண்ணன் சோல்பெரி பிரபுவின் துரதிஷ்யற்ற அரசியல் பார்வையாலேயே குட்டிமணியின் இரண்டு கண்களும் தோண்டப்பட்டது என பின்னர் கவலைப்பட்டார்கள் தமிழர்கள். அதை நிறைவேற்றிய சோல்பெரி பிரபுவும் கூட.

அதன்பின் வந்த சிங்கள அரசியல் கட்சிகளின் புதிய அரசியல் யாப்புகளிலும் பெயரளவிலாவது இருந்த சோல்பெரியின் சிறுபான்மை இனத்திற்கான 29ஆவது சரத்தும் நீக்கப்பட்டு பௌத்த மதமும், சிங்கள மொழியுமே முன்னிறுத்திப்பட்டன. இதனால் தான் என்னவோ தந்தை செல்வா கூட 'தமிழர்களை கடவுள் தான் இனி காப்பாற்ற வேண்டும்' என வேதனைப்பட்டார். அரசியல் தீர்வும் 'மாயமான்' போலாகிவிட்டது.

மீண்டும் ஒரு 'அரசியல் யாப்பு' வகுக்கப்படும் போது தமிழர்கள் ஒட்டுமொத்த விழிப்பு நிலையில் இருக்க வேண்டும். முதலில் 'சர்வதேச சட்டத்தின்படி' தமிழினம் நீதியை பெற்றுக் கொள்வதே சிறந்த தீர்வுக்கு வழிவகுக்கும்.

*— சாணக்கியன்.*

## அதில்..தோய்ந்து கிடப்பது.. எம் இனத்தின் இரத்தம் என்பதை மறக்காதீர்கள் இளைஞர்களே!..

வண்ணநிலவு.. மண்ணுக்கு
தானமாய் வழங்கிய
ஒளியை வானம் உமிழ்கிறது..
வின் மீன்களின்
கண் சிமிட்டலுக்கு மத்தியில்
என் நெஞ்சின் கனவுகள்
ஊர்வலம் போகின்றன..
மின் மினிகள்..
தண்ணிலவுக்கு குடை
பிடிப்பதுபோல்..
வயல் வெளி எங்கும் – தம்
மெழுகு வர்த்திகளை கொழுத்தி
வைத்துள்ளன..
கடல் அலைகளின் கதறல்
இன்னுமா ஓயவில்லை...
நந்திக் கடல் அல்லவா..
எம்மினம் சிந்திய குருதியை
கங்கையைப் போல்
உள்வாங்கிய அந்த கடல் ..
உலகம் அழியும் வரை
ஓயப் போவதில்லை..
என்பது உண்மை...
வீரம்..தியாகம்.. அர்ப்பணிப்பு..
எல்லாமே.. இந்த மண்ணில்தானா
கொட்டிக் கிடக்க வேண்டும்?
கிடக்கின்றனவே!
அதில் இன்று பயிர்
வளர்க்கிறார்கள்..
சில சாக்கடைகள்.. என்ன பயிர்?
தியாகப் பயிரை வளர்த்தவர்கள்
அதை அறுவடை செய்யுமுன்பே
எங்கோ சென்று விட்டதால்..
அதில் இன்று ஊழல் பயிரை
வளர்க்கிறார்கள்..
தமிழரின் பாரம்பரியம்
குழி தோண்டி புதைக்கப்படுகிறது.
அதை எப்படி மீண்டும்
தோண்டி எடுப்பது?– என்று
இளைய சமுதாயம் சிந்திக்கும்
வேளை வந்து விட்டது..
எதிரி போடும் எலும்புத்
துண்டுகளை இன்னும்..
தேர்தல் என்னும் பெயரில்..
எத்தனை நாள் நாம் கடித்துக்
கொண்டு இருக்கப் போகிறோம்?
தேர்தலின் பின்னர்..
யாராவது.. எம் மண்ணில்
அமைதி என்னும் தென்றல் வீசும்
என்று கனவு கண்டால் – அவர்கள்
ஏமாறப் போகிறார்கள்
என்பது அர்த்தம்..
மீண்டும் எங்கள் தேசியக்கொடியாம்
புலிக் கொடியை எங்கள்
இளைஞர்கள்தான் தூக்கிப் பிடிக்க
வேண்டும் – அதில் தோய்ந்து
கிடப்பது.. எம் இனத்தின்
இரத்தம் என்பதை மறக்காதீர்கள்
இளைஞர்களே !

*- மு.வே.யோ*


**SRI KANTH & CO SOLICITORS**



We practise in the following areas of law:

- Immigration
- Wills & Probate
- Conveyancing - Residential
- Conveyancing – Commercial
- Landlord & Tenant
- Property Sale & Letting
- Liquor Licensing
- Matrimonial / Family
- Employment Matter
- Consumer Problems
- Civil Litigation
- Housing Matters
- Welfare Matters

557 High Road, Wembley, Middlesex, HA0 2DW
www.srikanthsolicitors.co.uk
Tel: 020 8795 0648 Mob: 07831 195 979
Fax: 020 8795 0649

**ENGINE TEC MOTORS**



We offer Facilities For:

- Serving
- Clutches
- Brakes
- Overhauls
- Car Electricals
- Pre - MOT Checks
- All types of Repair & Body Work
- Insurance Work Undertaken



உங்கள் கார் திருத்த வேலைகளுக்கு நம்பிக்கையான நிறுவனம்.

Ask for Vel or Rajan
Tel: 02086408000 / 02086401230
Mob:07860226476 / 07860770945
Unit 5, 339 London Road, Mitcham, Surrey CR4 4BE
e mail: vel@etmluk.com Web:www.etmluk.com

வெகுவிரைவில் தரணியெங்கும்...

# தமிழ்

வணக்கம் தமிழ் | ஞாபகம் வருதே | விம்பம் | உப்பு புளி காரம் |

| வெள்ளித் திரை | ஒளித்தடம் | மயக்கும் மாலைப் பொழுது | அரும்புகள் |

| நான் நீ ! | மருத்துவம் | நாம் யார் ? | நடந்து வந்த பாதை |

| வேங்கைகள் | பாட்டுக்குப் பாட்டு | யாதும் ஊரே | உண்மையின் வெளிச்சம் |

| தரிசனம் | நிகழ்வுகள் | இன்றைய பார்வை |

மற்றும் பல சுவையான நிகழ்ச்சிகள்...

**மேலதிக விபரங்களுக்கு**

Tel : **020 7043 4316**

Web : www.tamil.com

Facebook.com/tamiltelevisionnetwork | @tamiltvnetwork

# என்ர பிள்ளைக்காக ஒரு கல்லறை வேணும் மகன்



இன்று, செஞ்சோலை நினைவு பிரபலமான ஒன்று. நாளை வேறொன்று வரும். வன்னியில் வாழ்ந்த தமிழர்களால் மறக்கமுடியாததாக இருக்கும் பேரவலங்களுள் செஞ்சோலை வளாகம் மீதான விமானத் தாக்குதலும் முதன்மையானது. அதுபோலவே வருடந்தோறும் நினைவுகூர்வதிலும் செஞ்சோலை படுகொலைக்குத் தனியிடம் கொடுக்கப்படும். ஆனால் செஞ்சோலை படுகொலையில் தன் மகளை இழந்த யாராவது ஒரு தாய் இப்போது எப்படியிருப்பார் என்று சிந்தித்துப் பார்த்ததுண்டா?

அப்படியான ஒருவர்தான், சாரதா அம்மா. புதுக்குடியிருப்பின், புதியகுடியிருப்பு என அறியப்படும் பகுதியில் இப்போது வாழ்கிறார் அவர். குறுக்குமறுக்கு சந்துகள், நாயுண்ணிப் பற்றைகளுக்குள்ளால் நுழைந்து போனால், புதுக்குடியிருப்பின் தென் எல்லையில் அமைந்திருக்கிறது அவரின் வீடு. ஆனால் இது அவரின் சொந்த இடமல்ல.

“என்ர சொந்த இடம் நெல்லியடி தம்பி. பாதை (A9) பூட்டுறத்துக்கு முதல் வன்னிக்கு சொந்தக்காரரர் வீட்ட வந்தனாங்கள். வந்து ஒரு கிழமையால பாதையப் பூட்டிப்போட்டினம். திருப்பி ஊருக்குப் போக முடியேல்ல. இங்கயே இருந்திட்டம். இங்க இருந்ததாலதான் என்ர பிள்ளையளப் பறிகொடுத்தன்” அவர் அழக்கூடாது என எனக்குத் தெரிந்த கடவுளர்களிடம் வேண்டிக்கொள்கிறேன்.

பிறகு எப்பிடியம்மா, பிள்ளையள் புதுக்குடியிருப்பிலயோ படிச்சவயள்.

ஓம். எனக்கு 6 பிள்ளையள். என்ர மூத்த மகள் துதர்சினி நல்ல கெட்டிக்காரி. ஏ.எல் படிக்கிறத்துக்காக புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியில சேர்த்துவிட்டனான். கெம்பசுக்குப் போய் படிச்சி அம்மாவ பாக்கிறதுதான் தன்ர லட்சியம் எண்டு சொல்லி படிச்சவள். காலுக்க தண்ணி வாளிய வச்சிற்று, அதுக்கால வச்சிக்கொண்டிருந்து இரவிரவா படிக்கிறவள். நானும் கொஞ்சம் நித்திர கொள்ளு பிள்ள எண்டால் கேட்கமாட்டாள். இப்பிடி படிக்கேக்கத்தான், மருத்துவ பயிற்சிக்கு கூப்பிடுகினம். எல்லா பிள்ளையளும் போகினம். நானும் போகவோ எண்டு என்னட்ட கேட்டாள். முதல் மறுத்திற்றன். பிறகு அழுவாரப் போல கேட்டாள். நானும் என்ர பிள்ளையரூருக்கு எங்கயும் கூட்டிக்கொண்டு போனதில்ல. சரி போய் வரட்டும் எண்டு ஒத்துக்கொண்டன். புதுசா உடுப்பு, சோப் கேஸ், சோப்பு, ப்ரஸ், கிறீம் எல்லாம் வாங்கிக் குடுத்து என்ர பிள்ளையையும் அனுப்பினன்.

இந்தா இந்த பாலமரத்துக்குக் கீழதான் கடைசியா நிண்டு கதைச்சது என்று சொல்லியபடி அந்த மரத்தைக் காட்டுகிறார். அது பல வருடங்களுக்கு முன்னர் முறிந்து விழுந்து அழிந்திருக்க வேண்டும். மரத்தின் அடி மட்டும் இருக்கிறது.

மகள் மருத்துவ பயிற்சிக்குப் போய் 5 ஆம் நாள் எண்டு நினைக்கிறன். நான் அஞ்சரைக்கு எழும்பீடுவன். அண்டைக்கு இரவிரவா வண்டு சுத்தினம். மகள் பற்றின பயம் வந்தது. ஆனாலும் பள்ளிக்கூட பிள்ளையள் தானே, பாதுகாப்பா இருப்பினம் என்று யோசிச்சிக்கொண்டு எழும்பினன். தேத்தண்ணி வச்சிற்று வெளியில வந்தால் 2 கிபீர் இந்தப் பக்கத்துக்கு நேர வானத்தில நிண்டபடி குண்டுகள கொட்டுது. அவர் இருக்கும் இடத்திலிருந்து வள்ளிபுனம் பக்கத்தைக் காட்டுகிறார்.

“நானும் அவரும் என்ன காரணத்துக்காக எண்டு தெரியேல்ல, கிபீர் குண்டுபோட்ட பக்கத்தபாத்து ஓடத் தொடங்கீற்றம். புதுக்குடியிருப்பு சந்தி கடந்து, பரந்தன் றோட்டால, கைவேலிக்குக் கிட்ட போகேக்க, ஒரே வாகனங்கள் பறந்து வருகுது. காயப்பட்ட பிள்ளையயும், செத்த பிள்ளையளையும் அள்ளிக்கொண்டு ஓடி வருகினம். அப்பதான் தெரியும், மகள் பயிற்சிக்குப் போன இடத்துக்குத்தான் குண்டு போட்டது எண்டு.

புதுக்குடியிருப்பு ஆஸ்பத்திரிக்கு ஓடினன். மகள ஒருபக்கம் கிடத்தி வச்சிருக்கினம். தலையில ஒரு பக்கம் குண்டு பீஸ் பட்டு மற்ற பக்கத்தால வந்திட்டு. தலைக்காயம் தங்களால பாக்கேலாது, பொன்னம்பலம் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போங்கோ எண்டுட்டினம். அங்க தூக்கிக்கொண்டு ஓடினம். மத்தியானம் வரைக்கும் வச்சிருந்திற்று, முடியாதெண்டு முல்லைத்தீவு ஆஸ்பத்திரிக்கு கொண்டு போகச் சொல்லிச்சினம். தலையில காயம், காப்பாத்த முடியதம்மா எண்டு, அங்க கையவிரிச்சிற்றினம். 4 மணிபோல என்ர மகள் இறந்திற்றா”. கண்ணீர் ததும்பவும் கதைத்துக்கொண்டேயிருந்தார் சாரதா அம்மா.

பிறகு பொடிய கொண்டு வந்து இந்தப் பால மரத்துக்குக் கீழ தான் வச்சவ. இயக்கம், பள்ளிக்கூட பிள்ளையள், ரீச்சர்மார் எல்லாரும் வந்தவ. பள்ளிக்கூடத்தில பொடிய வச்சி அஞ்சலி செய்தவ.

பொடிய புதுக்குடியிருப்பு மயானத்திலதான் தாட்டம். என்ர மகள தாட்ட கல்லரையின்ர தலைமாட்டில ஒரு தேமா கெட்ட நட்டிட்டு வந்தன். அது இண்டைக்கு வளர்ந்து பெரிசா ஆக்கி நிக்குது. தம்பி, யாரிட்டயும் சொல்லி, என்ர மகளுக்காக ஒரு கல்லறை கட்டித் தரச் சொல்லுவியாடா மகன்? திடுக்கிட்டேன். என் அம்மா ஏதோ ஓர் உதவியைக் கெஞ்சிக் கேட்டதுபோல இருந்தது.

துதர்சினியின் அம்மாவுக்காக, செஞ்சோலையில் படுகொலைசெய்யப்பட்ட பிள்ளைகளுக்காக யாராவது கல்லறை கட்டிக் கொடுக்க முடியுமா? என்று எழுதலாம் என்ற முடிவோடு அவரைப் பிரிய எழும்பினேன்.

புகைப்படம் தேவையே, போரில் அனைத்தும் கைவிடப்பட்டிருக்கும், ஆயினும் கேட்டுப் பார்க்கலாம் என்ற முடிவோடு, படம் ஏதும் இருக்கோ என்றேன். அல்பத்தைத் தூக்கி வந்தார். அல்பம் முழுவதும் துதரிசினியின் பாடசாலைக்கால புகைப்படங்கள். சண்டையில் இது எப்பிடி மிஞ்சியது என்றேன்.

நான் சண்ட நேரம் எதையும் எடுத்துப் போகேல்ல தம்பி, என்ர பிள்ளை பொடியா வரேக்க கடைசியா போட்டிருந்த சட்டை, சோப் கேஸ், சோப், ப்ரஸ் மற்றது இந்த அல்பம் இவ்வளத்தையும்தான் கொண்டு போனன். வவுனியா முகாமுக்கு கொண்டு போய், அங்கயிருந்து திருப்பி நெல்லியடிக்குப் போகேக்க, அங்க சொல்லிச்சினம் செத்த ஆக்களின்ர உடுப்புகள கொண்டு திரயக் கூடாதெண்டு. மற்றப் பிள்ளையளுக்குக் கூடாதாம். ஏரிக்கோணும் எண்டிச்சினம். வேற வழி தெரியேல்ல, எரிச்சிற்றன்.

பிறகு நெல்லியடியில இருக்கப் பிடிக்கேல்ல. என்ர பிள்ளையள பறிகொடுத்த இடத்திலேயே வாழும்வரைக்கும் வாழ்ந்திற்று இங்கேயே செத்துப்போக வேணும் எண்டு வந்திற்றன். அவரும், பிள்ளையளும் வரமாட்டம் எண்டுட்டினம். நான் தனிய சின்ன மகளக் கூட்டிக் கொண்டு இங்க வந்திருந்தன். பிறகு அவையளும் வந்திற்றினம்.

சரி அம்மா மகளின்ர படம் ஒன்றை எடுத்துப் பிடியுங்கோ போட்டோ எடுப்பம் என்றேன். தட்டுத்தடுமாறி இரண்டு படங்களை எடுத்துப் பிடித்தார். ஒன்றைப் பிடியுங்கோ என்றேன். இல்ல தம்பி இது என்ர மகன். இவனும் இப்பிடித்தான்....

இயக்கத்தில வேலை செய்தவன். கடைசி நேரத்தில சுதந்திர புரத்தில அவன் வீட்ட விட்டுப் பிரிஞ்சிற்றான். பிள்ளைய நாங்களும், எங்கள மகனும் தேடித் திரிஞ்சிருக்கிறம். நாங்கள் தேவிபுரத்தில இருந்தம். அது அவனுக்கு தெரியாமல் போயிற்று. சுதந்திரபுரத்தில எங்கள எங்கை எண்டு விசாரிக்க, நாங்கள் இருட்டுமடுவுக்குள்ளால ஆமிற்ற போயிற்றம் எண்டு சனம் சொல்லியிருக்கு. அதைக் கேட்டிற்று, அங்கால போன மகன் கொத்துக்குண்டு விழுந்து இறந்திற்றார்.

எட்டு நாள் கழிச்சி, பெரிய ஒரு பொடிய கொண்டு வந்து தந்தவ. சீல் பண்ணீற்றினம். திறக்க வேணும் எண்டு கேட்டம். சண்ட பிடிச்சம். அந்த நேரம் பாத்து மல்ரிபரல் அடிச்சிற்றாங்கள். கூடியிருந்த சனம் எல்லாம் ஓடிற்று. பொடியோட நான் மட்டும்தான் நிண்டன். உடன அந்த இடத்திலயே தாட்டிற்று ஓடிற்றம்.

ஆனா எனக்குத் தெரியும் என்ர மகன் சாகேல்ல. எங்கயோ இருக்கிறான். கனவில நெடுகலும் வாறான். ஏன்ர கால்மாட்டில இருந்துகொண்டு, தன்னை ஏன் பாக்க வறேல்ல எண்டு கேட்கிறான். எல்லாற்ற அப்பா அம்மாவும் வருகினம். எனக்கு இடியப்பம் அவிச்சி எடுத்துக்கொண்டு வாங்கோ எண்டு கனவில கேட்கிறான். வெள்ளை ரீசேட்டும், ஒரு பழைய காற்சட்டையும், மொட்டை தலையுமாயும் இருக்கிறான். பக்கத்த இருக்கிற ஆக்கள் சொல்லுகினம் அவனுக்கு மனநிலை பாதிக்கப்பட்டிருக்கு எண்டு. இப்பிடியேதான் நெடுகலும் கனவு வருதடா மகன். என்ர மகன் சாகேல்ல. எங்கயோ இருக்கிறான். வாழ்க்கைய எப்படி சமாளிக்கிறீங்கள் அம்மா?

ஒரு உதவியும் இல்ல. பெடியள் கலியாணங்கட்டி போயிற்றாங்கள். நானும் சின்ன மகளும், மகனும் இருக்கிறம். படிக்கினம். அவரும் பிள்ளையள் செத்ததில இருந்து ஒரே குடி. ஆவர வேணாம் எண்டு விட்டிட்டன். ஒரு உதவியும் இல்ல. இந்த வீட்டுத்திட்டம் மட்டும் தந்தவ. அதுவும் அறையுங்குறையுமா நிக்குது. எல்லாருக்கும் கோழி, ஆடு எண்டு குடுத்தவ. எனக்கு எதுவுமில்ல. சரியம்மா நான் வெளிக்கிடுறன்,

புறப்பட்டேன், “என்ர மகன் போல இருக்கிறாய் தம்பி, உனக்கு சொல்லனும் போல இருக்கு, இண்டைக்கு மத்தியானம் சமைக்கேல்ல. வீட்டில ஒண்டுமில்லடா. குறைநினைக்காத உனக்கு ஒரு தேத்தண்ணி கூட தர முடியேல்ல”

* * * * * * * *

செஞ்சோலை படுகொலையில் மரணித்த பிள்ளைகளின் குடும்பங்களுக்கு எந்தவித நட்டஈடுகளோ, ஆறுதல் கொடுப்பனவுகளோ வழங்கப்படவில்லை. மரணித்த அனேக பிள்ளைகளின் குடும்பங்களின் வாழ்க்கை இப்படித்தான் இருக்கிறது. ஏதாவது வழியில் அவர்களுக்கு நிவாரணம் வழங்குவதும், செஞ்சோலையில் படுகொலை செய்யப்பட்ட மாணவர்களுக்கான பொதுத் தூபி ஒன்றை அமைத்தலும், என்பது குறித்து எழுத வேண்டும் என்ற முடிவோடு அறைவந்து சேர்ந்தேன். இரவு. 10 மணி.

*நன்றி - www.colombomirror.com*

அரங்கேற்ற மலர்கள் | விழா மலர்கள் |
அழைப்பிதழ்கள் | நினைவு மலர்கள்
விளம்பர பிரசுரங்கள் | தமிழ் தட்டச்சு மற்றும்
அனைத்து அச்சு வேலைகளுக்கும்....

seven | zero
graphic designers
020 7043 4310
G11, LOMBARD HOUSE | 2, PURLEY WAY | CROYDON | CR0 3JP



creative artwork from concept to design

# அந்த உரல் - அம்மிக்கல் உறவு

அண்மையில் இங்கே வாழும் ஒரு பெரியவர் பழம் சோற்றை இங்கு மகளிடம் கேட்டு தயார் செய்து உண்டு பார்த்ததாக சொன்னார். ஆனால் ஊரில் வாழும் தன் பேரன் பழம் சோறு என்றால், என்னவென்று தெரியாது என்கிறான் என்று சொல்லி அங்கலாய்த்தார். அந்த நாள் பழம் சோற்று நிகழ்வுகளை நினைவிற்கு கொண்டு வந்தார். உரையாடல் பழைய ஞாபகங்களை நோக்கி நகர்ந்தது. எண்ணிப் பார்க்கின்றபோது விஞ்ஞான வளர்ச்சி எவ்வளவு தூரம் வசதியானவர்களாகவும், வருத்தக்காரர் களாகவும் எம்மை ஆக்கி விட்டது என்பதை புலப்படுத்தி விட்டது.

தாயகத்தில் எங்கள் சிறுவயதில் எளிமையும் சிக்க னமும் நிறைந்த உழைப்பை மூலதனமாக்கி திடகாத் திரமாக வளர்ந்து உறவுக்கு கை கொடுத்து ஒருவர் துன்பத்தில் ஒருவர் பகிர்ந்து வாழ்ந்த அந்த கிராமிய வாழ்க்கை நிம்மதியானதென்று வாழ்ந்து அனுபவித்தவர் கள் சொல்கிறார்கள். உரல் என்பதை பாலர் வகுப்புப் பிள் ளைகளுக்கு புரிய வைக்க உரல் படத்தைப் போட்ட தாயகப் புத்தகத்தை காட்டி படிப்பிக்க முடியுமா என்பது இங்கு ஒரு தமிழ்ப் பள்ளியின் ஆசிரியை ஒருவரின் கேள்வி. உண்மை தான் பாவனைப் பொருட்கள் மாறி விட்டன. உரலுக்கு உதாரணம் தேடினால் ஆங்கிலத்தின் பெயர் தான் மூளையில் எழுகிறது. ஜிம்முக்கு பணம் கொடுக்காமல் உடலை திடமாக வைத்திருக்க அம்மம்மா, அம்மா வீட்டுக்காரிகளாக வாழ்ந்த முறையும் துலா மிதித்து மண்வெட்டியால் கொத்தி தோட்டம் செய்து கோடரியால் விறகு வெட்டி அப்பன் பாட்டன் வாழ்ந்த திடகாத்திரமான வாழ்வும் நினைவில் நிழலாடியது.

வாராந்தம் இரண்டு மூன்று தடவையேனும் பயன் படுத்தப்படும் உரல் மற்றும் உலக்கை ஊரில் எங்கள் வீட்டு முற்றத்தில் ஒரு புறமாகக் கிடக்கும். மதிய உண வுக்குப் பின் அயல்வீட்டு உறவுக்காரர் உரலில் நனைய விட்ட அரிசி மாவை இடிக்க, ஒரு கை கொடுப்பார்கள். ஒவ்வொரு புறமாக நின்று இருவர் மாறி மாறி உலக்கை போடும் அழகே தனி அழகு தான். இடித்த மாவை சுளகில் அரிக்கன் தட்டால் அரிப்பதும் கப்பி என்று அரிக்கன் தட்டில் தேங்குவதை மீண்டும் உரலில் இட்டு இடிப்பதும் வீணாக்கலை தவிர்க்கும் செயற்பாடாக இருந்தது. பெரிய இரும்புச் சட்டியில் வெளி அடுப்பில் இடித்த அரிசி மாவை வறுத்து சுளகில் ஆறவிட்டு பக்குவப்படுத்தி வைப்பதும் தேவைக்கு எடுத்து பிட்டு, இடியப்பம் என்று செய்ய வசதியாக அந்தக் காலத்தில் இருந்த வழக்கம்.

செத்தல் மிளகாயை இரும்புச்சட்டியில் சூடாக்கி இதே போல வறுத்து ஆழத்துக்கு நீளம் கொண்ட இன்னொரு உரலில் இடித்து கறித்தூள் அரித்து எடுக்கப்படுவதும், அந்த நாட்களில் எங்கள் வீட்டில் மாதம் இருமுறை நடக்கும் நிகழ்வு. இது மிளகாய்த் தூள் கறிக்கு சேர்க்கும் முறையாக வீட்டில் இருந்தது. இதே உரலில் பனங் கிழங்கு கிண்டி எடுக்கப்படும் பருவத்தில் அதை அவித்து துண்டுகளாக்கி போட்டு மிளகாய்த்தூள் போட்டு அம் மம்மா சின்னச் சின்ன உருண்டைகளாக பிடித்து தரும் பனங்கிழங்கு துவையல் இன்றும் மனதில் இனிக்கும் ஒரு பண்டம்.

அடுத்த நாள் தோசை அல்லது இட்டலி என்றால் பொங்கல், தீபாவளி, துவசம் என்றால் வடை சுடு வதற்கு பயன்படுத்தப்படும் உழுந்து ஆட்ட மாவாக்கப் பயன்படுத்தப்படும் ஆட்டுக்கல், உள் வீட்டு விறாந் தையை அலங்கரித்திருந்தது. அவ்வப்போது பலகையில் இருந்து நாங்கள் ஆட்டிக் கொடுக்க அம்மா கையால் உருட்டி உருட்டி ஆட்டுக்கல்லுக்குள் தள்ள உழுத்தம் மாவை அடுத்த நாளைய தேவைக்கு தயாராக்கி வைப் பது எங்கள் வீட்டு வழக்கமாக இருந்தது. இதற்குப் பயன் பட்டது அந்த ஆட்டுக்கல் தான். அடுத்த நாள் அப்பம் என்றால் அந்த மாவுக்குள் கள்ளு ஊற்றி நொதிக்க விடப்படும். அப்படி இல்லையென்றால் அது தோசை. அப்பம் என்றால் குசினி புகட்டு அடுப்பில் கீழே பொச்சு மட்டைகள் தனலாகி எரிந்து சூடு கொடுக்க மேல் சட்டியில் அப்பத்திற்கு மாவை ஊற்றி வட்டமாக அது பரவ சட்டியை சுற்றி அடுப்பில் வைத்து சுடும் வழக்கம், அந்தக் காலத்தில் இருந்தது. சுற்றி வர பொன்னிறத்தில் கருகி நடுவில் தேங்காய்ப் பால் பொங்கி அந்த அம்மாவின் கையால் உருவாகி உண்டு கழித்த அப்பத்தை இன்று கனடாவில் அண்ணரோடு சேர்ந்து தேடியும் எங்கும் காணவில்லை.

தோசை என்றால் அதில் ஒரு அளவான கருகல் சுவை இருக்கும். அவ்வப்போது எங்கள் ஆசைக்கு எண் ணெய்த் தோசையும் அம்மம்மா சுட்டுத்தருவா. இட்டலி என்றால் தொட்டுச் சுவைக்க கடுகு, கருவேப்பிலை வதக் கிப் போட்டு மிதக்கும் சுவையான சட்டினி, தோசை, குண்டுத்தோசை என்றால் அம்மியில் செத்தல் மிளகாய், வெங்காயம், உப்புப் போட்டு ஆட்டி ஆட்டி செய்த சம்பல் இல்லையென்றால் அவ்வப்போது தாளித்து எடுத்த சம்பல், பிட்டுக்கோ இடியப்பத்துக்கோ இதே சம்பல் தான் தொட்டுச் சுவைக்க விரும்புவோம்.

## ஊரின் வாசம்

சுவாசிப்பவர்: **ப.வை. ஜெயபாலன்**

ஆளுக்கொரு அலுமினியக் கோப்பை, மச்சக் கோப்பை என்று ஒரு பீங்கான் கோப்பை என்று அந்தக் காலத்தில் குசினி மூலையில் அடுக்கி வைக்கப்பட்டிருக்கும். மச்ச உணவுக்கு பூப்போட்ட பீங்கான் கோப்பையும் பின்னர் பயன்படுத்தப்பட்டது. புளிபோட்டு மினுக்கி அன்றாடம் மினுமினுக்கும் செப்பு மூக்குப் பேணி தான் காலை, மாலை கோப்பி, தேனீருக்கு பயன்படுத்திய பாத்திரம். கோப்பி என்றால் அம்மம்மா வளர்த்த செவியன் ஆடுகள் குட்டி போட்டிருந்தால், ஆட்டுப் பால் கோப்பி. அம்மம்மா தளர்ந்து போகும் வரை மாடும் வளர்த்தார். இரவு படுக்கப் போகும் முன்னர் குடிக்க கோப்பி, தேனீருக்கு அந்த மாட்டுப் பால் பயன்பட்டது.

பிற்காலத்தில் மாலை அல்லது காலை சுப்பர் வீட்டில் பால் வாங்கி வருவோம். இடையே ஏகாம்பரம் வீட்டுக்கு பால் கொண்டு வந்து தந்ததும் நினைவு. எங்கள் வீட்டு விறாந்தையில் இருந்த பெரிய வெற்றிலைச் சட்டம், பாக்கு உரல் இன்றும் நினைவில் வருகிறது. வீட்டுக்கு வரு வோருக்கு முதலில் நீட்டப்படுவது இந்த வெற்றிலைத் தட்டுத் தான். பெரிய வட்டவடிவான உட்புறம் பூபோட்ட அலங்காரம் கொண்ட செப்புத் தட்டம். அதில் வெற்றி லைப் பாக்கு, நுங்குப் பாக்கு, துண்டுப் புகையிலை, சுண் ணாம்பு என்று எல்லாம் இருக்கும். வெற்றிலை வாடாமல் இருக்க ஈரத்துணியில் சுற்றி வைப்பார்கள். அன்றாடம் கோப்பி கொடுக்கப் பயன்பட்டதும் இதே மூக்குப் பேணி கள் தான்.

வேலிக்கதியாலில் தகரப் பேணி அல்லது கிளாஸ் ஒரு சிலருக்கு வைக்கப்பட்டிருந்ததும் நினைவிற்கு வருகிறது. ஒரு சமூகமாக, உறவாக, கூட்டுக்குடும்பமாக, சமுதா யமாக ஒரே ஊர்க்காரராக, கூக்குரலுக்கு ஓடி வரும் அந்த உறவு, பழக்கவழக்கங்கள் எல்லாமே ஊரை விட்டு ஓடிவிட்டனவா?

அது உண்மையா? ?

வாருங்கள் தேடிப்பார்ப்போம்.

# கோர்த்து விடும் செய்திகள்

■ **அதிகம் விரும்பப்பட்டோர்**

நடந்து முடிந்த இலங்கைப் பாராளமன்றத் தேர்தலில் அதிக விருப்பு வாக்கு கள் பெற்றவர்களில் முதலாமிடம் ரணில் விகிரமசிங்கவிற்கு. அவருக்குக் கிடைத்த வாக்குள் 500,566. மஹிந்த ராஜபக்ச 423, 529 விருப்பு வாக்குகளைப் பெற்றார். யாழ் மாவட்டத்தில் சிறீதரன் அதிக விருப்பு வாக்குகள் பெற்றார். சுமந்திரனுக்கு என்ன நடந்தது ? ஜேவிபியின் அனுரகுமார திசநாயக்காவிற்கு ஆகக் குறைந்த விருப்பு வாக்குகள் கிடைத்தனவாம்.

■ **கண்காட்டும் மாயமானே**

தமிழ்த்தேசியப் போராட்டத்தை ஒழித்துக் கட்ட மேற்கு நாடுகள் அனுப்பிய நோர்வேயின் மாயமான் இலங்கையில் நடந்த பாராளமன்றத் தேர்தல் முடிவுகளையிட்டு மகிழ்ச்சி தெரிவித்துள்ளது. மகிழ்ச்சியுடன் கொண்டாட வேண்டுமாம். ஒரு நாட்டு இராசதந்திரி இன்னொரு நாட்டுக் கட்சி அரசிய லுக்குள் புகுந்து விளையாடுகிறார். அத்துடன் நிற்கவில்லை வெளிநாடுகளில் வாழும் தமிழர்கள் வெற்றி பெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பின்னால் திரள வேண்டிய நேரம் இதுவல்லவா எனக் கேள்வியையும் எழுப்பியுள்ளது.

எல்லாம் ஒரு குரூப்பாய்த்தான் அலையுறாங்கள். எஞ்சி உள்ளதையும் ஒழிச்சுக் கட்டுற பிளானோடை.

■ **யார் பொதுச் செயலாளர் – பெரும் பிரச்சனை**


சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் பொதுசன ஐக்கிய முன்னணியும் மஹிந்த விற்கா மைத்திரிக்கா சொந்தம் என்ற பிரச்சனை ஒரு புறம் இருக்க இவற்றிற்கு யார் பொதுச் செயலாளர் என்பது பெரிய பிரச்சனையாக இப்போது எழுந்துள்ளது. தேர்தல் ஒரு புறம் அமளியாக நடந்து கொண்டிருக்க மைத்திரி மறுபுறம் சிறிலங்கா சுதந்திரக் கட்சியினதும் பொது சன ஐக்கிய முன்னணியி னதும் பொதுச் செயலாளர்களைப் பதவி நீக்கி விட்டு தனக்கு ஆதரவான இரு வரை அப்பதவிகளுக்கு நியமித்தார்.

பொதுசன ஐக்கிய முன்னணியின் பொதுச் செயலாளர்தான் தேர்தல் ஆணை யாளருக்கு தேசியப் பட்டியலைக் கொடுக்க வேண்டும் மைத்திரி பதவி நீக்கிய சுசில் பிரேமஜயந்த தானே பொதுச்செயலாலர் எனச் சொல்லி ஒரு பட்டியலை யும் மைத்திரி பதவிக்கமர்த்திய பேராசிரியர் விஸ்வ வர்ணபால தானே பொதுச் செயலாளர் எனச் சொல்லி இன்னும் ஒரு பட்டியலையும் தேர்தல் ஆணையா ளரிடம் சமர்ப்பித்துள்ளனர். இதனால் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தலை முடியைப் பிய்த்துக் கொண்டிருக்கின்றார்.

ஏற்கனவே சுசில் பிரேமஜயந்த பொதுச் செயலாளராகச் செயற்படக்கூடாது என நீதி மன்ற ஆணையும் பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதனால் முழுமையான தேர்தல் முடிவுகள் இன்னும் அறிவிக்கப்படவில்லை. பிரச்சனை நீதிமன்றத் தில் இழுபடும் போல் இருக்கின்றது.

இதனால் ரணில் தலைமை அமைச்சராகப் பதவி ஏற்பது இழுபடப் போகின்றது.

*- ஊருளவாளி*




**எமது சேவைகள்: களஞ்சியம் - காப்புறுதி - திறந்த வெளி இட வசதி - பொறுப்பேற்றல் மற்றும் விநியோகம்**

தனிநபர் கவனிப்பு - இடமாற்றம் - அதிகப்படியான பொதி



- இலவச பெட்டிகள்
- தொழில்முறை ஆலோசனை
- பொறுப்பேற்றல் - விநியோகித்தல்

கப்பல் மூலம் வாகனம் அனுப்புதல்

- பணியக உதவிகள்
- கடன் கடிதங்கள்
- சுமை அகற்றல் - ஏற்றல்



from £1.90*

வீட்டுக்கு வீடு சேவை

இலங்கையிலுள்ள உடன்பாட்டாளர் பெறுபவர் வீட்டிற்கே விநியோகம் செய்வோம்

இயந்திரங்கள் - உபகரணங்கள் - உதிரிப்பாகங்கள்



- விசேட விலைகள்
- தகர்த்தல் மற்றும் தயாரித்தல்

வாணிப சரக்கு நிலையம்

- சுங்க ஏற்றுமதி
- ஆவணங்கள் - செயலாக்கம்
- இறுதி வரை கையாளுதல்

**Office: 46, Mead Court, Buck Lane, Kingsbury, London, NW9 0XN Tel: 020 3371 1272 Mob: 07913842265**

**Warehouse & Yard, Unit1 & 2, Renwick Industrial Estate, Renwick Road, Barking, IG110SD. Tel: 020 3371 1272**

# நேற்றைப்போல ஒரு இன்றும் ஒரு மாற்றமுமில்லாத நாளையும்...



**ச.ச.முத்து**

இந்த ஆக்கம் வெளிவரும்போது ஒருவேளை வாக்குஎண்ணிக்கை தொடங்கிவிட்டிருக்கலாம். முடிவுகளில் சிலகூட வெளியாகி இருக்கவும் கூடும். புலத்தின் ஊடகங்கள் தமது நேரலை நிகழ்வுகளில் ஆய்வுகளை நடாத்தி மாற்றத்துக்கான ஒரு தேர்தல்போல ஒரு மாயையை உருவாக்கி கொண்டும் இருக்கலாம்.

ஆனால் நிஜத்தில் இந்த தேர்தல் முன்னைய தேர்தல்போலவே ஒன்றுதான். எந்தவொரு மாற்றமும் இதன்மூலம் நிகழ்ந்துவிடப்போவதில்லை என்பதுதான் கடந்தகாலங்களின் பாடங்கள் தரும் மிகப்பெரும் வரலாற்று படிப்பினை.

இன்றைய வரையிலான தமிழ்மக்கள்மீதான அனைத்து அடக்குமுறைகளையும் சட்டரீதியாக தயாரித்த ஒரு நிறுவனமாகவே இலங்கை பாராளுமன்றம் விளங்குகின்றது. தமிழ்மக்கள் மீதான கொடூரமான இனஅழிப்புகளையும், இனச்சுத்திகரிப்புகளையும், நில அபகரிப்புகளையும் நியாயப்படுத்தும் சட்டமூலங்களின் பிறப்பிடமாகவே இன்றைவரை இலங்கை பாராளுமன்றம் இயங்கிவருகின்றது. இனியும் அதன் போக்கில் எந்தவொரு மாற்றமும் நிகழ்ந்துவிடப்போவதில்லை என்பதுதான் சத்தியமான உண்மை.

இன்றைய உலகில் ஜனநாயக ஆட்சி முறையே அதி உன்னதமான ஒன்றாக உருவகிக்கப்படுகின்றது. உண்மையும் அதுதான். இதற்கு மாற்றாக இதனைவிட சிறப்பான ஒன்று உருவாகும் வரை இதுவே நீடிக்கும் என்பதிலும் சந்தேகமேயில்லை. உலகம் ஏற்றுக்கொண்டுள்ள ஆட்சிமுறையாக அதுவே விளங்கியும் வருகின்றது. இங்குதான் சிங்களத்தின் நரித்தனமும், சமயோசிதமும் வெளிப்படுகின்றது. உலகம் ஏற்றுக்கொண்ட ஒரு ஆட்சி முறை ஒன்றின் ஊடாக நடாத்தப்படும் ஆட்சி இது என்ற தோற்றத்தை உருவாக்கி கொண்டு மறுபுறத்தே அதே ஆட்சியின் சட்டங்கள், மற்றும் அரச இயந்திரங்கள் அனைத்தின் மூலமும் தமிழ்மக்கள்மீது உலகத்தின் சட்டங்களுக்கு முரணாண ஒரு இனஅழிப்பு அடக்கு முறை ஆட்சியை கடந்த அறுபதுவருடங்களாக நடாத்தி வருகின்றது. இனியும் அதுவே எந்தவொரு மாற்றமும் இல்லாமல் தொடரும். அதிசயம் ஏதேனும் நிகழ்வதற்கான வால்நட்சத்திரம் எதுவுமே வானத்தில் இல்லை. சிங்கள மனங்களிலும் கூட.

இந்த பாராளுமன்றத்துக்கான தேர்தலே இப்போது நடக்கின்றது. ஆனால் இந்த பாராமன்ற தேர்தல் முடிவுகளின் பின்னர் சிறகுவிரித்தெழுந்து பறந்திடும் விடுதலைவாழ்வும், ராணுவ சந்தடியற்ற தமிழர்கள் தெருக்களும் வந்துவிடும் என்பதைப்போன்ற பசப்புகளே எமது மக்களின் மனங்களில் விதைக்கப்பட்டு வருகின்றன. இலங்கையின் சுதந்திரத்துக்கு பின்னர் ஏறத்தாள 1977 வரை இத்தகையை ஒரு மாயையே தமிழர் தேர்தல் மேடைகளில் இரண்டுகட்சிகளாலும் ஏற்படுத்தப்பட்டு வந்தது. ஆனால் தமிழர்களின் விடுதலைப் போராட்டம் இளைஞர்களின் கரங்களுக்கு வந்து அர்ப்பணிப்பும், உலக அரசியலின் மாற்றங்களை உள்வாங்கிய ஒரு தெளிவும் ஏற்பட்டபோது இலங்கை பாராளுமன்றத்துக்கான தேர்தல் தமிழர்களின் வாழ்வினுள் எந்தவொரு சலசலப்பையும் ஏற்படுத்தாத ஒன்றாகவே வந்து போனது தெரிந்ததே. ஆனாலும் இந்த தேர்தலை எமது விடுதலைக்கான குரலை ஓங்கி வெளிப்படுத்தும் ஒரு களமாகவும், இந்த பாராளுமன்றத்தை உலக நடைமுறையுடன் ஒன்றித்து எமது விடுதலையை வெளிப்படுத்தும் முறைமையாகவும் வரலாற்றின் போக்கு மாற்றியது. 77ல் இலங்கைப்பாராளுமன்றத்துக்கான தேர்தலை தமிழீழத்துக்கான ஒரு வாக்கு எண்ணிக்கையாகவே இளைஞர்களின் அமைப்புகள் பார்த்தன. ஏறத்தாள அனைத்து அமைப்புகளும் அந்த தேர்தலில் இறங்கி வேலையும் செய்தன என்றே சொல்லலாம்.

அதன் பின்னர் 82 ஆகஸ்ட் 1ம்திகதி அப்போதைய வட்டுக்கோட்டை பா.உ திருநாவுக்கரசு மரணமடைந்தபோது இலங்கை பாராளுமன்றத்தினை இன்னொரு முறையில் பயன்படுத்தும் ஒரு முறைமை உருவாகியது. வட்டுக்கோட்டை பா.உ திருநாவுக்கரசின் இடத்துக்கு இளைஞர்களின் அழுத்தம் காரணமாக தமிழர் விடுதலைக்கூட்டணி, அப்போது வெலிக்கடை சிறையில் மரணதண்டனையை (1982 ஓகஸ்ட மாதம் குட்டிமணி, ஜெகனுக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டது) எதிர்நோக்கி இருந்த குட்டிமணியை பா.உ வாக நியமித்தனர். இந்த வரலாறு நிகழ்வதற்கு ஒரு சில மாதங்களுக்கு முன்னர்தான் ஜரிஸ் விடுதலை அமைப்பை சேர்ந்த பொபி சாண்டஸ் பிரித்தானிய பாராளுமன்ற தேர்தலில் வெற்றி பெற்று அயர்லாந்து விடுதலைக்கு ஒரு சர்வதேச அங்கீகாரத்தை ஏற்படுத்தி இருந்தமை குட்டிமணியின் நியமனத்துக்கு இளைஞர்களின் ஆதரவை பெற்றது.

ஆனால் சிங்கள பேரினவாதம் தனது அரச இயந்திரத்தின் இன்னொரு கட்டமைப்பான சிறைச்சாலை திணைக்களத்தின் ஆணையர் பிரியதெல்கொட மூலம் இந்த நகர்வை தடுத்தது சிங்களத்தின் ஜனநாயம் மீதான இன்னொரு அடியாகும்.

இதன்மூலம் இன்னொரு படிப்பினையையும் தமிழ்தேசியம் பெற்றுகொண்டது. உலகம் வாய்கிழிய கத்தி கூப்பாடு போடும் ஜனநாயத்தின் ஓட்டைகளை பயன்படுத்தி சிங்களம் எப்போதும் தமிழர் மீது அடக்குமுறையை இன அழிப்பை தொடரும் என்பதே அது.

தமிழர்களின் போராட்ட பாதையில் அர்ப்பணங்களும், தியாகங்களும், பெருவீரமும் நிறைந்த ஒரு போர் வான்வரை எழுந்தாடிய போது தமிழர்களின் போராட்டம் சர்வதேச வாசல்படியின் வெகு கொதிநிலையான ஒன்றாக உருமாறிய பொழுதினில் இலங்கை பாராமன்றத்தை தமிழர்களின் விடுதலைக்கான ஒரு பரப்புரை மேடையாக பயன்படுத்தும் ராஜ தந்திரம் எழுந்தது. அத்தகைய ஒரு வரலாற்று தேவையும் எழுந்து இருந்தது.

மானுட வரலாறு கண்டு கேட்டறிந்திராத ஒப்பற்ற ஒரு விடுதலைப்போராட்ட களத்தினில் நின்றிருந்த தமிழர் தேசியதலைமை இலங்கை பாராமன்றத்தின் இனவெறி முகத்தினை தமிழர்களுக்கு புரிய வைத்து அதனை பொருட்படுத்தாத ஒரு அரசியலை உருவாக்கிவைத்திருந்த அதே நேரம் அந்த பாராமன்றத்தின் மேடையை தமிழர்களின் உரிமை வேட்கையை வெளிப்படுத்தும் ஒரு மேடையாகவும் மிகவும் ஆழமான வழிநடாத்தலில் செய்துவந்தது.

தமிழீழவிடுதலைப்புலிகளின் தலைமையின் இந்த பொறிமுறையால் வெகுண்டெழுந்த சிங்களம் தமிழர்களின் பாராளுமன்ற பிரதிநிதிகள் மீதே கொலை வெறியை கட்டவிழ்த்து விட்டது. தன் ஜனநாயக நடிப்பு முகமூடியை கழற்றி வீசிய சிங்களத்தை அம்பலம் செய்தது தமிழ் தேசியம்.

ஆனால் 2009 மே மாதத்துக்கு பின்னர் எல்லாமே தலைகீழானது. இலங்கை பாராமன்றம் தமிழர்களின் தாயகவிடுதலைப் போராட்ட பாதையில் ஒரு மேடையாக பயன்படுத்திய தன்மை கொஞ்சம் கொஞ்சமாக மாறி ஏதோ இலங்கை பாராமன்றத்தின் மூலம் மட்டுமே தமிழர்களின் உரிமை வென்றெடுக்க முடியும் என்ற பெரும் மாயத்தோற்றம் உருவாக்கப்பட்டது.

துரதிஸ்ட வசமாக இந்த 2015 தேர்தலில் எவருமே மறந்துபோய்க்கூட ‘ இலங்கை பாராளுமன்ற தேர்தல் ஒரு பிரச்சார மேடை மட்டுமே’ என்பதை சொல்லவே இல்லை. ஏதோ இந்த தேர்தலால் ஒரு பெரும் மாற்றமொன்று நிகழப்போகுது என்ற குடுகுடுப்பை காரனின் குரலாகவே எல்லோர் பிரச்சாரமும் அமைந்திருந்தது. சிங்களத்துடன் இணக்க அரசியலை செய்திருந்த இலங்கை பாராமன்ற எதிர்க்கட்சி தலைவர் அமிர்தலிங்கத்தை கூட 83ல் தலைமறைவாக மாற்று வேடத்தில் சிங்களதலைநகரை விட்டு தமிழ்நாட்டுக்கு தப்பி ஓட வைத்த பாராளுமன்றம் ஒரு போதும் தமிழர்களுக்கு உரிமைகள் எதனையும் தந்துவிடப்போவது இல்லை என்ற பெரிய வரலாற்று பாடத்தை எந்தவொரு தமிழ்வேட்பாளரும் சொல்லாமல் விட்டது ஏன் என்று தெரியவில்லை...

**துரதிஸ்டவசமாக இந்த 2015 தேர்தலில் எவருமே மறந்துபோய்க்கூட ‘இலங்கை பாராளுமன்ற தேர்தல் ஒரு பிரச்சார மேடை மட்டுமே’ என்பதை சொல்லவே இல்லை.ஏதோ இந்த தேர்தலால் ஒரு பெரும் மாற்றமொன்று நிகழப்போகுது என்ற குடுகுடுப்பைகாரனின் குரலாகவே எல்லோர் பிரச்சாரமும் அமைந்திருந்தது.**

அவர்கள் சொன்னாலும் சொல்லா விட்டாலும் தமிழ்மக்கள் ஒன்றை தெளிவாக தெரிந்து புரிந்து வைத்திருக்க வேண்டியது காலம் தந்த கட்டளையாக இருக்கிறது. இந்த பாராளுமன்றத்தின் பெரும்பான்மை கட்சிகளின் தலைவர்கள்தான் பகிரங்கமாகவே ‘போர் என்றால் போர்’ என்றும் தமிழர்கள்மீதான விமான, எறிகளை தாக்குதல்களை நியாயப்படுத்திய ஒவ்வொரு சொல்லும் இன்றும்கூட புதிய புதிய சனாதிபதிகளாலும், பிரதமர்களாலும் அதே அறைகூவலுடன் எமக்கு எதிராக முரசறையப்படுகின்றது. இந்த பாராமன்றத்தை எமது உரிமை வேட்கையை, எமக்கு எதிராக சிங்களம் தொடர்ந்து நடாத்தும் இனிஅழிப்பை உலகுக்கு சொல்லும் ஒரு சாளரமாக பயன்படுத்தலாம் அவ்வளவே தான். வேறு எதுவுமே இல்லை.

மற்றப்படி, எமக்கான விடுதலை என்பது எமது மக்கள் ஒன்றிணைந்து எழுந்து, உலக தமிழினத்துடன் கைகோர்த்து, உலகம் முழுதும் எமக்காக குரல் கொடுக்கும் அனைத்து தரப்புடனும் சேர்ந்தெழுந்து போராடும் ஒரு பொழுதில்தான் எமது விடுதலை கைகூடும். இதற்கான உறுதியை பெற நாம் வேறு எங்கும் போய் தேடவேண்டியதில்லை. கடலினில், தலையினில், வானத்தில் என்று வீரம்விளைத்த எம் மாவீரர்களின் உறுதியில் லட்சத்தில் ஒரு பங்கை எம் மனதில் உள்வாங்கினாலே போதும்.

அது ஒன்றே எம் தாயகவிடுதலைக்கான ஒரே வழி. ஒரே பாதை...


## புலம்பெயர் தேசங்களில் வாழும் எம் உறவுகளே!

உங்கள் வணிக நிலையங்களில் நடைபெறும் திருட்டு, மோசடி போன்றவற்றை தடுக்கவும் உங்கள் நம்பிக்கை தன்மையை பேணவும் நேரடியாக கண்காணிப்பு கமராவினுடான பதிவுகளை இலங்கையிலிருந்து அனுபவம் வாய்ந்த பணியாளர்களின் மூலம் 24 மணி நேர கண்காணிப்பு சேவையினை வழங்குவதோடு இலவச தொலைபேசி இணைப்பின் ஊடாக உடனுக்குடனான தகவல்களையும் தங்களுக்கு அறியத் தருவோம். எமது சேவை தங்கள் வணிக நிலையங்களுக்கு தேவைப்படின் கீழ் கண்ட இலக்கத்துக்கு தொடர்பு கொள்ளவும்.



**Eagle Vision**

**CCTV Monitoring Service**



172a, Mill Road, Vavuniya, Sri Lanka

Tel : 0094773180716 | 0094242051150

EMail: shopigan@gmail.com

இலண்டனில் தொடர்புகளுக்கு சிவா : 07405 406 806

# வாழ்க்கைத் துணை

## இலவச திருமண விளம்பர சேவை

இது புலம்பெயர் தமிழர்களுக்காக **ஒரு பேப்பர்** நடாத்தும் இலவச சேவை. இப்பகுதியில் விளம்பரம் செய்ய விரும்புவோர் உங்கள் விபரங்களை தொலைநகல் அல்லது மின்னஞ்சல் மூலம் எமக்கு அனுப்பி வையுங்கள். வெளியிட்டுள்ள விளம்பரங்களின் விபரங்களை அறிய விரும்புவோர் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.


பிரித்தானியா:
Tel: 020 7043 4315
Fax: 020 7043 4312

கனடா:
Tel: 647-724-4188
Fax: 416-438-7855

email: **info@orumanam.com**




## மணமகள் தேவை

1. 34 வயது, 5'6" British citizen தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5535

2. 31 வயது, 5'4" British citizen graduate working in a service industry தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5537

3. 41 வயது, 6'0" British citizen தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5542

4. 33 வயது, 5'11" work permit graduate working in a Information technology தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4579

5. 43 வயது, 5'8" Canadian citizen graduate working as an engineer தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5520

6. 29 வயது, 5'5" British citizen graduate working in a services industry தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5521

7. 42 வயது, 5'6" தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5523

8. 27 வயது, 5'6" Born & brought up in uk. Finished degree working as an accountant தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5524

9. 37 வயது, 5'6" Living in sri lanka working in a medical business தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5529

10. 30 வயது, 6'0" living in India. Graduate working as a sales manager தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5419

11. 32 வயது, 5'8" Born & brought up in uk. Qualified MSC in internet computing working as an IT consultant தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4710

12. 30 வயது, 5'7" Living in sri lanka. working in a Bank தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5531

13. 30 வயது, 5'5" Asylum seeker working as a decorating job தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5533

14. 30 வயது, 5'7" British citizen working as a Technician for an Electrical Gaming Company தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5325

15. 37 வயது, 5'8" British citizen தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5502

16. 31 வயது, 5'5" British citizen working as a financial sector தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5509

17. 43 வயது, 5'8" British citizen working in an Investment bank as an accountant தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4558

18. 35 வயது, 5'5" British citizen Finished degree in MBA working in a supermarket தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5510

19. 36 வயது, 5'7" swiss citizen living in swiss working in a Own business தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5512

20. 28 வயது, 5'7" German citizen. living in uk finished degree in German language (Hons), working as a language translator தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5513

21. 41 வயது, 5'6" British citizen தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5516

22. 37 வயது, 5'11" Born and brought up in uk, master degree from Imperial college, working as an Investment banker தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5517

23. 34 வயது, 5'5" British citizen, BSc (Hons) in computer science, working as an accounts manager at Deloitte company தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 236

24. 42 வயது, 5'6" Divorced, British citizen Graduate தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4816

25. 41 வயது, 5'8" British citizen working in a company தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5486

26. 31 வயது, 5'10" Asylum seeker தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5488

27. 35 வயது, 6'1" British citizen Graduate working as an IT Programmer and organizer தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5490

28. 30 வயது, 5'7" living in saudi தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5491

29. 33 வயது, 5'0" Refugee visa working as site engineer தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5492

30. 38 வயது, 5'5" Divorced born & brought up in the UK. Currently working in UAE as business and sales director தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5393

31. 29 வயது, 5'5" Born & brought up in uk graduate working in a Electronic engineer தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5498

32. 24 வயது, 5'8" asylum seeker working as a customer services தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5455

33. 27 வயது, 5'6" british born and brought Graduate Engineer தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5458

34. 31 வயது, 6'0" born and brought up in UK. Working in market ing & financial department தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5465

35. 29 வயது, 5'9" graduate Student visa தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5470

36. 32 வயது, 5'3" Student visa Graduate completed in Electrical and Electronic Engineering HNDE. working as a technician தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5472

37. 33 வயது, 6'0" british citizen. Working as a engineer தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5475

38. 26 வயது, 5'5" Living in sri lanka தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5477

39. 26 வயது, 5'6" British citizen working as a engineer தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5478

40. 31 வயது, 5'5" work permit Graduates working as a financial sector. தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4650

41. 31 வயது, 6'1" PSW visa graduates working as a Electronic Engineer தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4687

42. 33 வயது, 5'6" UK citizen graduate working as a manager of five star hotel தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5258

43. 32 வயது, 5'5" work permit graduate working as a Information technology தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3397

44. 32 வயது, 6'0" UK citizen graduate doing own business தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 587

45. 31 வயது, 5'6" Divorced UK citizen doing own business தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5343

46. 34 வயது, 5'5" British citizen தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5267

47. 32 வயது, 5'6" British citizen doing own business தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3272

48. 27 வயது, 5'8" Work permit graduate. Working as a Tesco team Leader தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5451

## மணமகன் தேவை

1. 27 வயது, 5'1" Born in Germany finished degree in Airport Management working in a Airport தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5538

2. 29 வயது, 5'3" Born and brought up in Uk தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5540

3. 30 வயது, 5'6" work permit, Graduate Administrative service தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5543

4. 28 வயது, 5'3" Graduate living in sri lanka தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5544

5. 32 வயது, 5'2" British citizen graduate working as a clinical coding supervisor தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4388

6. 32 வயது, 5'7" Divorced graduate living in Sri Lanka தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5519

7. 27 வயது, 5'0" Asylum seeker தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5522

8. 24 வயது, 5'4" Born & brought up in uk. Graduate working as a medical sector தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5526

9. 41 வயது, 5'6" divorced living in Sri Lanka தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5528

10. 27 வயது, 5'4" living in sri lanka graduate working in a international school in colombo as a teacher தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4536

11. 25 வயது, 5'3" Born & brought up in uk finished degree working in a pharmaceutical company as a laboratory technician தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5530

12. 26 வயது, 5'6" Living in sri lanka Finished Dance degree grade 6 தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5532

13. 32 வயது, 5'2" Born & brought up in uk. Finished degree in Finance தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3914

14. 33 வயது, 5'4" British citizen Graduate working as an Accountant தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5504

15. 28 வயது, 5'6" British citizen working in at Childcare, christian தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5505

16. 27 வயது, 5'3" Finished degree living in Srilanka தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5506

17. 25 வயது, 5'4" Studying CIMA at colombo, living in Srilanka தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5507

18. 30 வயது, 5'3" British citizen Graduate working in medical sector christian (catholic) தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5400

19. 36 வயது, 5'2" Born and brought up in uk, working as a marketing manager தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5494

20. 26 வயது, 5'0" Living in Srilanka தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5518

21. 27 வயது, 5'2" France Citizen தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5481

22. 27 வயது, 5'1" living in Sri Lanka தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5485

23. 25 வயது, 5'4" UK Citizen graduate working as a Financial Sector தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5487

24. 30 வயது, 5'4" British Citizen medical doctor, Catholic, seeking a UK professional தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5489

25. 33 வயது, 5'4" British Citizen working as a research & policy officer தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5493

26. 29 வயது, 4'9" British Citizen தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5495

27. 32 வயது, 5'5" Born and brought up in uk working as a accounts Manager. Graduates in BSC horns தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5497

28. 32 வயது, 5'5" Born and brought up in uk working as a accounts Manager. Graduates in BSC horns தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5497

29. 22 வயது, 5'6" British citizen graduates தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5457

30. 31 வயது, 5'3" Living in sri lanka தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5459

31. 28 வயது, 5'0" Living in sri lanka தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5476

32. 30 வயது, 5'2" British citizen graduate working as Accounts Assistant தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4754

33. 29 வயது, 5'5" British citizen working medial sector தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3615

34. 31 வயது, 5'6" British citizen working as an investment banker தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 1722

35. 29 வயது, 5'2" British citizen working medial sector தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3615

36. 29 வயது, 5'7" British citizen graduate working as a information technology தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4703

37. 30 வயது, 5'8" British citizen working medial sector தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3359

38. 36 வயது, 5'1" Divorced Asylum seeker living uk தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5438

39. 30 வயது, 5'4" Living in Sri Lanka Graduate working in a English teacher at school தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5439

40. 25 வயது, 4'8" Living in Sri Lanka Graduate working in a maths teacher தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5447

41. 25 வயது, 4'8" Living in Sri Lanka Graduate working Administrative service தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5450

42. 26 வயது, 5'4" British citizen as a doctor தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5448

43. 21 வயது, 5'4" Living in Sri Lanka working as a pharmacist தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5449

44. 35 வயது, 5'3" Living in Sri Lanka Graduate working as a accounts executive தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5425

45. 22 வயது, 5'4" Permanent residence in UK graduate தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5435

46. 32 வயது, 5'4" EU citizen graduate living in Germany தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5431

47. 24 வயது, 5'1" EU citizen graduate தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5424

48. 29 வயது, 5'6" British citizen Graduate working in a medical sector தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5417

49. 27 வயது, 5'5" British citizen MBBS doctor தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5413

50. 30 வயது, 5'10" German citizen graduate working in a company தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5399

51. 25 வயது, British citizen graduate working in a company தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5398

52. 28 வயது, 5'2" British citizen graduate working in a company தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5397

53. 42 வயது, 5'3" Permanent residence in uk divorced working in a factory தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5374

54. 30 வயது, 5'6" Graduate nurse living in sri lanka தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5391

55. 25 வயது, 5'4" German citizen doctor living in uk தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5376

56. 27 வயது, 5'6" Born and brought up in uk lawyer தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5360

57. 29 வயது, 5'4" student visa graduate working as a accountant தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5354

58. 32 வயது, 5'3" British citizen Graduate working in a company தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5345

59. 26 வயது, 5'3" British citizen Graduate Medical sector தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5343

**இணையத்தில் மேலதிக விபரங்கள்**
**www.orumanam.com**

# நீர்நிலைகள்



மாசிலாமணி

*(ஒரு பேப்பருக்காக)*

ஆழி (கடல்) சூழ் உலகென்பர். நீரால் சூழப்பட்டது இந்த உலகம் என்ற அர்த்தத்தில்தான் அப்படி அழைக்கிறார்கள். உண்மையும் அதுதானே. உலகின் கால் பங்குதானே நிலம். மிகுதி முக்கால் பங்கையும் கடல்தானே தன் உவர் நீரால் நிரப்பி உள்ளது. ஆக 3.5 சத வீதம்தான் நன்நீராக எஞ்சியுள்ளது. அதிலும் அரைவாசி பனிக் கட்டிகளாக எமக்கு கிடைக்காத நிலையில் உறைந்துள்ளது. எமக்கு அருமருந்தாகும் நன்நீர் மழையாக வந்தடையும் நிகழ்வின் மகிமையை வள்ளுவர் எவ்வளவு அழகாகக "விசும்பின்(மேகத்தின்) துளிவீழின் அல்லால்மற்று ஆங்கே பசும்புல் தலைகாண்பு அரிது" என்று கூறுகின்றார். நன்நீரின் அரைவாசிப் பகுதி உறைந்து விட்டதே என்று குறைபடுகின்றோமா அல்லது உறைநீரின் ஒரு பகுதி உருகினாலே தரையின் பல பகுதி நீரில் மூழ்கி விடும் என்று கவலைப்படுகின்றோமா என்பதில் எமக்கே தெளிவில்லை.

வான் பொழியும் மழையின் ஒரு பகுதி தரையின் பள்ளங்களில் நீர்நிலைகளாகத் தங்குகிறது. அவற்றின் அளவையும் பயன்பாட்டையும் பொறுத்து துரவு, குளம், குட்டை, மடு, மோட்டை ஏரி, வாவி, நீர்த்தேக்கம் என்று பல சொற்களால் அழைக்கின்றோம். இவற்றில் நாம் கவனத்தில் கொள்ள வேண்டியவை ஏரிகளும் குளங்களும் நிர்த் தேக்கங்களும்தான். உலகின் 10 கோடிக்கு மேற்பட்ட இந்த ஏரிகளும் குளங்களும் நீாத்தேக்கங்களும் இல்லாவிடில் பொழியும் மழைநீர் தங்குதடையின்றி கடலை அடைந்து விரையமாகிவிடும். மழைநீரின் ஒரு பகுதியைத் தடுத்து எம் பயன்பாட்டுக்கு சேமிப்பவை இந்த நீர்நிலைகள்தான்.

குளம் என்ற சொல் வாழ்வுடன் பின்னிப்பிணைந்த ஒன்று. குளங்களை மையமாக வைத்தே அநேக கிராமங்கள் உள்ளன. கிராமத்து மொழியில் குளத்திற்கு போய்வருகிறேன் என்றால் காலைக்கடள் முடித்து வருகின்றேன் என்று பொருள்படும். மேய்ச்சல் தரைவையில் மேயும் கால்நடைகள் குளத்தில் நீரைக் குடித்து வாழ்வதால் கிராமத்திலுள்ள கால்நடை உரிமையாளர்களுக்கு எவ்வளவோ சிரமங்கள் குறைகிறது. கிராமத்துக் குளங்களில் தொடங்கி 20 ஆயிரம் ஏக்கர் வயல் நிலத்திற்கு நீர் கொடுக்கும் இரணைமடுக் குளம் போன்ற பாரிய குளங்கள்வரை குளம் என்றே அழைக்கப்படுகின்றது. பொதுவாக வயல்களுக்கு நீர்பாய்ச்சும் நீர்நிலைகளையும் கிராமத்து நீர்நிலைகளையும் குளம் என்றும், இயல்பாகவே நீர் தேங்கி நிற்கும் பாரிய நீர்நிலைகளை ஏரி அல்லது வாவி என்றும் அழைக்கும் பழக்கம் எம்மிடமுண்டு. இந்த வாவி என்ற சொற்தான் சிங்களத்தில் குளங்களைக் குறிக்கும் வெவ ஆனதோ தெரியவில்லை. யாழ் இந்துவுக்குப் பக்கத்தில் ஒரு வாவியை ஆவி என்றுகூட அழைக்கிறார்கள். (நீராவியடி)

இரணைமடு போன்ற நீர்ப்பாசனத்திற்கு பயன்படும் குளங்கள் பேச்சு வழக்கில் குளம் என்று அழைக்கப் பட்டாலும், உண்மையில் அவை அணைபோட்டு மறித்து உருவாக்கப்பட்ட நீர்த் தேக்கங்களே. பொதுவாக இதுதான் குளம், இதுதான் ஏரி இதுதான் நீாத்தேக்கம் என்ற ஒரு வரையறை கிடையாது. ஆனால் நீாத் தேக்கங்கள் அமைக்கும்போது சாத்தியத்திற்கு ஏற்ப நீர்மின் உற்பத்தியையும் கவனத்தில் கொண்டு அமைக்கிறார்கள்.

நீர் வளமும் மலை வளமும் கொண்ட ஓர் தீவுதான் இலங்கை. ஆண்டுதோறும் சராசரி 360 இலட்சம் ஏக்கர் அடி வரையான நீர், கிட்டத்தட்ட 45 கன கிலோ மீற்ரர் அல்லது 10 கன மைல் நீர் எம்தீவிற்கு மழை வடிவில் அளிக்கப்படுகிறது. ஒரு ஏக்கர் நிலத்தில் ஒரு அடி உயரத்திற்கு நிற்கும் நீரின் அளவுதான் ஒரு ஏக்கர் அடி. குளங்களைக் கட்டுவதன் மூலம் வடிந்தோடிக் கடலுடன் கலக்கும் நீரின் சுமாரான பகுதியை விவசாயத்திற்குப் பயன்படுத்த வழிவகுத்திருந்தார்கள் இலங்கையின் மன்னர்கள். சற்று அணையின் உயரம் கூடி தேக்கும் நீரின் அளவும் கூடினால் நீர்த் தேக்கம் என்று பெயர் மாறும் அவ்வளவுதான். இலங்கையின் பாரிய நீர்த் தேக்கங்களான சேனநாயக்க சமுத்திரம், விக்ரோறியா, றன்தெனிகல, மதுறுஓயா ஆகிய நான்கும் 5 இலட்சம் ஏக்கரடிக்கு கூடிய நீரைத் தேக்கும் அளவுக்கு கொள்திறன் கொண்டவை. இதில் சேனநாயக்க சமுத்திரம் 7.7 இலட்சம் ஏக்கரடி நீர் கொண்டது. இது கிட்டத் தட்ட ஒரு கன கிலோ மீற்றர் அல்லது கால் கன மைலாகும்.

உலகில் பாரிய நீர்த் தேக்கங்கள் உள்ளன. அதில் சிம்பாவேயின் கரிபா நீர்த் தேக்கம் 180.6 கன கிலோ மீற்ரர் அல்லது 45 கன மைல் நீர் கொண்டது. எகிப்தின் நாசர் (அஸ்வான்) அணையின் கொள்திறன் 132 கன கிலோ மீற்ரர். என்ன இவ்வளவு பாரிய நீாத்தேக்கங்கள் இருக்க எமது 1 கன கிலோ மீற்ரருக்கும் குறைந்த நீர் தேக்கங்கள் பற்றி ஏன் தம்பட்டம் அடிக்கவேண்டும் என்று நீங்கள் கேட்கலாம். அது எமது நீர்த் தேக்கம். ஏன் இலங்கையின் நீர்த் தேக்கங்களில் கொத்மலை, மேல் கொத்மலை, விக்ரோறியா ஆகிய மூன்றும் முறையே 201, 150, 210 என்று மொத்தம் 360 மெகாவற்ஸ் மின்சாரம் உற்பத்தி செய்யும் திறன் கொண்ட நீர் மின்நிலையங்களை தம்முள்ளடக்கியவை. அவற்றின் அருமை எமக்குத்தான் தெரியும்.

எங்கெல்லாம் மழை உண்டோ அங்கெல்லாம் ஏரிகள் தோன்றும் சாத்தியம் நிச்சயம் உண்டு. உலகில் ஐந்து இடங்கள் மட்டும்தான் ஆண்டுக்கு 4 அங்குலத்திற்கு குறைந்த மழை வீழ்ச்சி உள்ள இடங்களாக அடையாளம் காணப்பட்டுள்ளது. அதை ஒருபுறம் விட்டுவிட்டு எம்மை ஆச்சரியத்தில் மூழ்கடிக்க வல்ல ஆழம் கொண்டவையும், பாரிய பரப்பளவு கொண்டவையுமான ஏரிகள் பற்றியும் சில விசித்திரமான ஏரிகள் பற்றியும் பார்ப்போம்.

ஏரிகளில் ஒருவகை திறந்த ஏரிகள். அவற்றுள் செல்லும் மழை நீர், ஆற்று நீர் ஆகியவை நிறைந்தால் வெளியேற வழி இருக்கும். மற்றைய ஏரிகள் மூடியவை. நீர் சென்றால் வேளியேற முடியாது. மூடிய வகையைச் சேர்ந்த இறப்புக் கடல் என்னும் Dead Sea பற்றிய சில சுவையான தகவல்களைப் பார்ப்போம். இது 30 இலட்சம் ஆண்டுகளுக்கு முன் உருவான ஒரு ஏரி. கடல் மட்டத்திலிருந்து 1388 அடி பள்ளத்தில் அமைந்துள்ளது. 42 மைல் நீளமும் 11 மைல் அகலமும் கொண்ட இந்த ஏரியுட் செல்லும் நீர் ஆவியாக மட்டும் வெளியேற முடியும். பல்லாயிரம் ஆண்டுகளாக நிகழும் இந்நிகழ்வில் எத்தனையோ ஆயிரம் கனமைல் நீர் ஆவியா மாறியிருக்கும். அத்தனை ஆயிரம் கன மைல்கள் நீரினுள்ளும் இருந்த எவ்வளவோ உப்புக்களும் தாதுப் பொருள்களும் எஞ்சி இப்போ அந்த 400 சதுர மைல்களுக்கு உட்பட ஏரிக்குள் அடங்கி இருப்பதால் இதன் உப்புத் தன்மை கடல் நீரின் உப்புத் தன்மைபோல் எட்டு மடங்கு கூடியது. ஒரு மனிதர் எதுவித சிரமமுமின்றி அந்நீாமேல் மிதக்கலாம்.

இவ்வித உப்பில் எவ்வித உயிரினமும் வாழ முடியாது. தாதுப் பொருள்களும் உப்பும் ஏராளம். இங்கு நிலத்தின் கீழிருந்து வரும் அஸ்போல்ட் என்னும் தாதுப் பொருள் பயனுள்ளது. இங்குள்ள மாறுபட்ட சூழலை மருத்துவ ஆய்வுகளுக்குப் பயன்படுத்துகிறார்கள். இவ் ஏரிக்கு செல்லும் பாதைதான் உலகின் கடல் மட்டத்திற்கு கீழுள்ள சாலைகளில் கூடிய பள்ளத்தில் உள்ள ஒன்று. இந்தப் பள்ளத்துக்கு மத்தியதரைக் கடலில் இருந்து நீரை அனுப்பி அவ்வீழ்சியால் ஏற்படும் ஆற்றலைப் பயன்படுத்தி மின் உற்பத்தி செய்ய எடுத்த முயற்சி தாதுப் பொருட்களினதும் உப்புக்களினதும் வளங்களுக்கு குந்தகம் ஏற்படும் என்பதால் கைவிடப்பட்டது.

பெரு நாட்டில் அன்டீஸ் மலையிலுள்ள ரிரிகக்க என்னும் ஏரி, கடல் மட்டத்தில் இருந்து 12,500 அடி உயரத்தில் உள்ளது. தென் அமெரிக்காவிலுள்ள ஏரிகளில் பெரியது இதுதான். 3000 சதுர மைல்களுக்கு மேல் பரப்பளவு கொண்ட இவ் ஏரியினுள் மக்கள் வாழும் 41 தீவுகள் உள்ளன. இன்கா நாகரிகத்துடன் தொடர்புடைய இத்தீவுகளைப் பார்வையிட ஆண்டுதோறும் ஆயிரக் கணக்கில் உல்லாசப் பயணிகள் செல்வர். உலகின் அரும்பெரும் செல்வங்கள் படடியலில் இவ் ஏரியும் தீவுகளும் அடங்குகின்றன.

வட இங்கிலாந்தில் எம் 6ன் 30 வது சந்திக்கப்பால் உள்ள கம்ரியா மாவட்டம் 18 ஏரிகள் கொண்ட அழகிய மாவட்டம். அவ்வேரிகளின் அழகுடன் 3000 அடி உயர மலைகளும் சேர்ந்த அழகு எவரையும் மயக்க வல்லது. அங்கு சென்று குறைந்தது ஒரு வார முடிவை என்றாலும் கழித்துக் களிக்காதவர்கள் இங்கிருக்கின்றோம் என்பதில் அர்த்தமில்லை.

ஏரிகள் பற்றிக் கூறும்போது நாங்கள் தவறுதலாக அழைக்கும் lagoons பற்றியும் சில வார்த்தைகள். யாழ் குடாநாட்டில் வடமராச்சியிலுள்ள நீர் நிலையை வடமராச்சி ஏரி என்று அழைக்கின்றோம். உண்மையில் அது காயல் (lagoon) ஆகும். காயல் கடற்கரைகளில் உள்ள ஆழம் குறைந்த நீர்நிலைகள். கடலுடன் ஏதோ வழியில் தொடர்புடையவை. வடமராச்சி ஏரியை, மன்னிக்கவும் காயலை நன்நீர் ஏரியாக மாற்றுங்கள் என்பதே இன்று வலுப்பெறும் கோரிக்கைகளில் ஒன்று. அது தேவையில்லைப்போல் படுகிறது. வாயால் பல விடயங்களைப் சாதிக்கும் நாங்கள் இதையும் வாயளவில் என்றாலும் சாதித்து விட்டோம்.

மிக முக்கியமான இந்த காயல் பற்றிய தகவலை, வேடிக்கையாகக் கூறுவதற்கு மன்னிக்கவும். இது யாழ். குடாநாட்டின் இன்னியமையாத தேவைகளில் ஒன்று. 30 சதுர மைல் பரப்பளவு கொண்ட இந்த காயலை நன்நீர் ஏரியாக மாற்றுவதால் கிடைக்கப் போகும் நன்மைகள் பற்றி ஏற்கனவே இருமுறை எழுதியுள்ளேன். தொண்டமனாற்றில் அணைபோட்டு கடல் நீர் வருவதை தடுத்துவிட்டார்கள். இப்போ குறையாக இருப்பது ஆனையிறவுக் காயலுக்குள் நீர் புகாமல் தடுத்து அதை நன்நீர் ஏரியாக மாற்றி ஒரு கால்வாயை வெட்டி வடமராச்சி ஏரியுடன் தொடுத்தால் கிளிநொச்சியில் பெரு நிலப்பரப்பின் வெள்ளம் முழுவதும் எம்மை வந்தடைவதற்கு ஏது தடையும் இருக்காது.

பெருநிலப்பரப்பிலிருந்து கொஞ்சநஞ்ச நீரா விரயமாகின்றது. பல ஆயிரம் ஏக்கர் அடி நீரல்லவா விரயமாகின்றது. எதற்கு முன்னுரிமை கொடுக்க வேண்டுமோ அதை தட்டிக் கழிக்கின்றோம். ஒருமுறை ஒரு மேலதிகாரியிடம் குளத்தின் கதவு மூன்றடி உயரம் என்றேன் அதை வெட்டிப் பதிக்கலாம் தானே என்றார் அந்த அதிகாரி. மூன்றடி பதித்தால் வயலுக்கு தண்ணீர் ஏறாது என்பதை அவர் எள்ளளவென்றாலும் சிந்திக்கவில்லை. ஆகையால் எதையும் நாம் பிரச்சினையுடன் மனதை செலுத்தி சிந்தித்தாலன்றி எப்போதுமே சரியான பரிகாரம் காணமுடியாது.

TrainingConnect

For British Citizenship and Indefinite Leave to Remain (ILR) | All Applicants after 28th October 2013

Home Office Approved Test | City & Guilds Approved Centre

Life in the UK Course B1 Speaking & Listening
- Settlement
- Indefinite Leave to Remain (ILR)
- British Passport/Naturalisation

IESOL Diploma (A1, A2, B1, B2, C1)
- Spouse Visa English Test
- Student Visa English Test
- Work Permit English Test



City & Guilds Approved Centre

OUR 100% COMMITMENT

We Train You until You Pass | FREE INITIAL ASSESSMENT

0207 099 2400

694-712 London Road, Hounslow, TW3 1PG

contact@trainingconnect.co.uk | www.TrainingConnect.co.uk

# சின்னதாய் திரில்லிங்காய் ஒரு புன்னகைப் புரட்சி - தமிழ் சினிமா



- வ.சிறீநிவாசன்

'அரிமா நம்பி' (ஆனந்த் ஷங்கர்) என்னும் 'அற்புதத் தமிழ்ப் பெயர்' தாங்கிய படம் ஆங்கிலப் படங்களின் தாக்கத்தில் எடுக்கப் பட்ட த்ரில்லர். உளவியல் விகாரங்களை மையமாகக் கொள்ளாமல் எடுத்திருப்பதே மகிழ்ச்சியைத் தருகிறது. விக்ரம் பிரபு, ப்ரியா ஆனந்த், சக்ரவர்த்தி சரியாகவும், எம். எஸ். பாஸ்கர் அட்டகாசமாகவும் நடித்திருக்கிறார்கள். பொழுது போக்குப் படம். கதா நாயகனான, சிவாஜி பேரனிடம் 'நல்ல பையன்' களை இருக்கிறது. இவர் அடித்தால் வாங்குபவருக்கு வலிக்கும் என்று நம்ப முடிகிறது. இயக்குனரான, கோமல் சுவாமிநாதன் பேரனிடமும் திறமை இருக்கிறது.

'யாமிருக்க பயமே' (2014 – டீகே) வில் கருணாகரனின், மயில்சாமியின் நடிப்பு நன்றாக இருந்தது. பாக்கிப் பேரும் பரவாயில்லை. த்ரில் நிச்சயம் இருந்தது. காமெடி த்ரில்லர் என்கிற வகைக்கு உதாரணமாக இப்படத்தைச் சொல்லலாம். கூடவே ஆபாசம் என்கிற அடைமொழியையும் அடிக்கோடிட்டுச் சேர்த்துக் கொண்டால். இதை மீண்டும் சொல்லக் காரணம் இப்படத்தைக் கோவையில் பார்க்கையில் குழந்தைகளும் வந்திருந்தார்கள். பெண்கள் கூட்டமும் இருந்தது. அவர்களில் பலர் அதிர்ச்சி அடைந்திருக்கக் கூடும். இதற்கு A சான்றிதழ் கொடுத்து அதை கண்டிப்பாக தியேட்டர்களிலும் கடைப் பிடித்து பார்க்க வகை செய்திருந்தால் இது ஒரு செம காமெடிப் படம் என்று ஒப்புக் கொள்ளலாம். அப்போதும் சில பெண்களின் விஷுவல்கள் ஆபாசக் களஞ்சியங்கள்தாம். இதற்கெல்லாம் யாரும் எதிர்ப்புதெரிவிப்பதில்லை என்பதால் நான் என் எதிர்ப்பை இவ்வரிகளின் மூலம் பதிவு செய்கிறேன்.

நேற்றுப் பார்த்த 'டிமான் டி காலனி' இன்னொரு புத்தம் புது நல் வரவு.

இவ்வளவு இருந்தாலும் இந்த வகை த்ரில்லர்களில் நமக்கே நமக்கான ஒரு லயம், அசல் தமிழ்த்தனம் இதுவரை கிட்டவில்லை. (இவை எந்தப் படங்களிலேயுமே இல்லை என்பதும் தெரிந்த விஷயம்தான்)

சமீபத்தில் மிகுந்த மனக் கஷ்டங்களை வெளிக் கொணரும் படங்கள் சிலவும் கையில் பிடித்த காமராவால் படமாக்கப் பட்டு வந்து வெற்றியும் பெற்றன. 'சுப்ரமண்யபுரம்' (2008, சசிகுமார்) துரோகம் என்கிற ஒற்றை இழையை இரண்டு முறை சொன்னாலும் மனதில் நிற்கும் படி இருந்தது.

இதே குழுவினரின் 'நாடோடிகள்' போன்ற படங்கள் அவற்றின் பார்வை, அவை முன்னிறுத்தும் வாழ்க்கை அவசியங்கள் காரணமாக மிகவும் அபாயகரமான மோசமான படங்களாய் ஏமாற்றி விட்டன. மிஷ்கினின் 'சித்திரம் பேசுதடி' மிக நன்றாக எடுக்கப் பட்ட படம். அதற்குப் பின் அவரது படங்கள் ஒரே மாதிரி காட்சிப்படுத்துதல்கள், நம் சூழலுக்கு அந்நியமான நடிப்பு, நல்லபடமாகத் தெரிய மெனக்கிடுதல், ஆகியவற்றால் ஏமாற்றம் தந்தன. ஆனால் பிசாசு வித்தியாசமான பிசாசாக இருந்தது. இது ஒரிஜினல் பிசாசு என்கிற நம்பிக்கையில் சொல்வது. எந்த ஜாடியில் எந்த பூதம் இருக்குமோ?

இம்சை அரசன் இருபத்து மூன்றாம் புலிகேசி (2006, சிம்பு தேவன்), தமிழ்ப்படம் (2010 – சி. எஸ். அமுதன்) போன்ற 'கேலி'ப் படங்கள் (spoof), வந்தன. இருபத்து மூன்றாம் புலிகேசி வடிவேலு என்கிற நகைச்சுவை சக்ரவர்த்தியின் மணி மகுடம். சிம்பு தேவனின் பார்வை, கண்ணியம், சமூகப் பிரக்ஞை போன்றவையும் இப்படத்திற்கு வலு சேர்த்தன. சமீபத்தில் வரிசையாகப் படங்கள் வருகின்றன. வெறும் நகைச்சுவைப் படங்கள் சும்மா சிரிக்கலாம் என்கிற அளவில் வருகின்றன. விமல், சிவ கார்த்திகேயன் முதலிய பக்கத்து வீடுகளில் பார்க்கக் கிடைக்கும் இளைஞர்கள் நாயகர்களாக வருகிறார்கள். வணிக வெற்றியை மட்டும் கருத்தில் கொண்டு எடுக்கப் படும் இன்னொரு வழக்கமான பாதுகாப்பான படங்கள்.

'பசங்க' (2009 –பாண்டிராஜ்) போன்ற யதார்த்தமான படங்களும் வந்தன. இதில் நடித்த, பின்னர் தொடர்ந்து களவாணியாகவே நடிக்கும் விமலின் 'வாகை சூடவா' (2011 – சற்குணம்) என்கிற படம் சில சீரியஸ் விஷயங்களோடு அமைந்து அதே சமயம் 'இதுதாண்டா சீரியஸ்' என்று கண்ணில் மண்ணை வைத்துத் தேய்க்காத படமாக இருந்தது. மேலும் 'பொய் சொல்லப் போறோம்' (2008 – ஏ. எல். விஜய் ஹிந்தியில் கோஸ்லா கா கோஸ்லா), என்கிற தொலைக் காட்சியில் காண்பதற்கேற்ற படம் சுவாரஸ்யமாய் இருந்தது. தரமாகவும் இருந்தது. இந்த இயக்குனரின் இதர படங்கள் வெகு சராசரியாக இருந்தன.

இவற்றுக்கிடையில் 'பீட்ஸா', 'நடுவுல கொஞ்சம் பக்கத்தைக் காணோம்' (2012 – பாலாஜி தரணீதரன்), 'சூது கவ்வும்' (2013 – நலன் குமாரசாமி), 'இதற்குத்தானே ஆசைப்படாய் பாலகுமாரா' (2013 – கோகுல்), 'நேரம்' (2013 – அல்ஃபோன்ஸ் புத்திரன்) போன்ற படங்கள் வித்தியாசமாக வந்தன. வெற்றியும் பெற்றன. 'தேசிங்கு ராஜா' (2013 – எழில்) என்கிற படம் எப்போது தொலைக் காட்சியில் வந்தாலும் பார்த்துப் பார்த்து, விடாது சிரிக்க வைக்கிறது. இதன் க்ளைமாக்ஸ்ஸூம் ஒரு ஹைலைட். இதைக் காட்டிலும் சிறந்த அட்டகாசமான க்ளைமாக்ஸ் இருந்த சமீபத்தியப் படம் 'முண்டாசுப் பட்டி' (2014 ராம்) மட்டுமே.

இப்படங்களின் சிறப்பு அம்சங்கள் என்று எடுத்துக் கொண்டால் நடிப்பு, வசனம், வழக்கமாக இடம் பெற்றே ஆகவேண்டும் என்று விதிக்கப் பட்ட காட்சிகள் இல்லாமை, எளிமை, ஏதேனும் புதுமை. கதை என்பது நேரடியாகவும் இருக்கிறது, சிலவற்றில் கவனத்துடன் ஒரு புதிர் மாதிரி தொடங்கி பின் ஒருமையோடு முடிகின்றது. இவை நட்சத்திர நடிகர்ககளின் படங்களை விட எதார்த்தமாக வாழ்க்கைக்கு அருகாமையில் இருக்கின்றன. ஆட்களின் முகங்கள் நாம் தினசரி சந்திக்கும் முகங்களாக இருக்கின்றன. ஹீரோயின்கள் இன்னமும் நம்மூர்ப் பெண்கள் போல் முழுதாக வரவில்லை, 'வாகை சூட வா' ஒரு விதிவிலக்கு. இன்னும் நான் பார்க்காத எத்தனையோ நல்ல படங்கள் இருக்கக் கூடும்.

பிட்ஸா படத்தின் கதை சொல்லல், நடுவுல கொஞ்சம் பக்கத்தக் காணோம் படத்தின் நடிப்பு, காட்சி அமைப்பு, வசனம் போன்றவற்றில் இருந்த இயல்புத்தன்மை அவற்றின் தர்க்கமற்ற தன்மையை மறக்கடிக்கச் செய்யும். அதுவும் கல்யாண வரவேற்பில் தன் காதலியையே (சமீபத்திய சம்பவங்களின் நினைவை இழந்து விட்ட) விஜய் சேதுபதி திரும்பிப் பார்த்து விட்டு 'ப்பா ! யாருடா இது? பேய் மாதிரி' என்கிற காட்சிகள் அட்டகாசம். 'சூது கவ்வும்' படத்தின் திருப்பங்கள், மிக அமைதியான முறையில் சொல்லப்பட்ட வெடிச் சிரிப்புக் காட்சிகள். "வீரம் அறவே கூடாது என்கிற 'k'e'dnapping' வகுப்பின் அடிப்படை விதிகளில் கடைசி விதி போன்றவை. நடிகர்கள் அனைவரும் பிரமாதமாக நடித்திருப்பார்கள். எதிர்பாராத விதமாக, ஒரே மாதிரி அமைக்கப்படாத கேலிக் காட்சிகள் இப்படத்தை நுணுக்கமாக முந்தைய படங்களிலிருந்து வேறு படுத்துகின்றன.

'இ.ஆ.பா.கு." ஒரு சென்னை கீழ் மத்யதர வாலிபனின் காதல் மற்றும் ஒரு மார்கெடிங் தொழிலில் உள்ள மத்யதர நவீன வாலிபனின் காதல் இரண்டும் கலந்தது. சென்னைக்காரனான எனக்கு அதில் வரும் பலரை நான் சந்தித்திருப்பதாகவே தோன்றுகிறது. இளவயதில் என் நண்பர்களிலே விஜய் சேதுபதி மாதிரி காதல் வயப்பட்டவர்களை நான் கண்டிருக்கிறேன். இந்தப் படத்தின் உத்தி பெரிய டைரெக்டர்கள் முன்பு எடுத்துத் தோற்ற ஒன்று. 'ஆயுத எழுத்து' படத்தில் மூன்று கதையோட்டங்கள் ஒரு புள்ளியில் சந்திக்கும். இதிலும். ஆனால் சரியாக, துல்லியமாக முன்னாலும், பின்னாலும் நிகழ்பவை அமைந்து இப்படத்தை எங்கோ எடுத்துச் சென்று விட்டன. விஜய் சேதுபதி தவிர, ஒரே காட்சியில் வரும் பசுபதி, சூரி அவர் அண்ணியாக வருபவர் கொலையாளிகள் இருவர் என்று படம் நெடுக நடிப்புக் கொடி உயரே பறக்கும்.

ஜிகிர்தண்டா (2014 கார்திக் சுப்புராஜ்) ஒரு புது மாதிரியான படம். முற்றிலும் புதிதான அணுகுமுறை, வழங்கு முறை. படம் பார்த்துக் கொண்டே வருகையில் ஒரு சமயம் நாமும் உள்ளே மழையில் நனைந்து கொண்டு இருப்போம். அப்புறம்தான் கதையில் ட்விஸ்ட். அற்புதமான கற்பனை. காட்சியமைப்புகள். புத்திசாலித்தனம். ஆனாலும் இதில் சில பிரச்னைகளும் இருந்தன. மிகவும் வன்முறையாகக் கொலைகளைச் செய்யும் ஒருவன் கடைசியில் காமடிப் பீசாவதால் படம் ஒரு அபாயகரமான நுண்ணுணர்வுக் குறைபாட்டுக்கு சமூகத்தை இட்டுச் செல்கிறது.

குற்றவாளிகள் தண்டிக்கப்படுவதும், நிரபராதிகள் தப்புவதும் எப்போதும் நடக்கிற விஷயம் இல்லை என்பது வாழ்க்கையில் உள்ள நிதர்சனம். ஆனால் ஒரு வன்முறையாளனை காமடி பீசாக்கி சாதாரணமாக உலவ விடுவது – அதுவும் அவ்வளவு விலாவாரியாக அவன் வன்முறைகளைக் காட்டியபின் – ஒரு பொறுப்பற்றதனம். ரோமன் பொலான்ஸ்கி படங்களிலும் எப்போதும் சாத்தானே வெல்லும். ஆனால் அந்த வெற்றியின் சோகம் உங்கள் மேல் கனமாகக் கவிந்து கொள்ளும்.

தோனியும், கோலியும் கோலொச்சும் மைதானத்தில் விஜய் மஞ்ச்ரேகர் வந்து விளையாடுவதைப் போல 'உத்தம வில்லன்' என்னும் புது மாதிரிப் படத்தை கமலஹாசன் எடுத்திருகிறார்.

முன்பெல்லாம் நல்ல படங்கள், இயக்குனர்கள் கூடவெல்லாம் பெரும்பாலும் இளையராஜா இருப்பார். எம்.எஸ்.வி., கே.வி.எம்., இளையராஜா, ரஹ்மான், சிவாஜி, எம்ஜியார், கமல், ரஜினி, டி.எமெஸ், சுசீலா, எஸ்பிபி ஜானகி காலம் போய் இப்போது பல இசையமைபாளர்கள், நடிகர்கள், பின்னணிப் பாடகர்கள். ஒரு விதமாக அதீதமான பெரிய ஆளுமைகள் காலம் முடிந்த மாதிரி இருக்கிறது. தனிமனித ஆதிக்கம் குறைந்து, படங்கள் முன்னிறுத்தப் படுகின்றன.

இவற்றுக்கிடையில் 'இமான்', 'சந்தோஷ் நாராயணன்' இசையமைத்த பாடல்கள் பெரிய ரசிகர் வட்டத்தை உருவாக்கியுள்ளன. ஜனரஞ்சகமான ஹிட்களாக உள்ளன. அதே போல் எத்தனை நல்ல நடிகர்கள், சின்னச் சின்ன பாத்திரங்களில் வந்து என்னமாய் நடிக்கிறார்கள்.

*அடுத்த பேப்பரில் தொடரும்..*

*நன்றி - சொல்வனம் இணையம்*



# சினிமா



## திரை விமர்சனம்

# வாசுவும் சரவணனும் ஒண்ணா படிச்சவங்க..

மதுவிலக்கு நிச்சயம் எனும் தகவல் வந்தா VSOP-2ல் செல்போன் டவரில் ஏறி ரகளை செய்யப் போகும் முதல் ஆள் டாஸ்மாக் டைரக்டர் ராஜேஷாகத் தான் இருப்பார் என்பதை இம்மாநிலம் அறியும். 'அழகு ராஜா'வில் கார்த்தியிடம் காமடி நடிப்பை கொண்டுவர குட்டிக்கரணம் அடித்து மூக்கை உடைத்துக்கொண்டார். தற்போது ஆர்யாவின் 25 படத்தின் மூலம் கிச்சு கிச்சு மூட்ட கிளம்பி வந்திருக்கிறார்.

ராஜேஷ் காது குடைய வைத்திருந்த லாட்டரி சீட்டில் எழுதப்பட்டிருந்த கதையாகப்பட்டது இதுதான். வாசுவும், சரவணனும் ஒன்றாய் படித்து, குடித்து வளர்ந்த உயிர் நண்பர்கள். சரவணனின் நட்பை கத்தரித்தால்தான் நமக்கு சாந்தி முகூர்த்தம் என வாசுவின் மனைவி கண்டிஷன் போட தவித்துப்போகிறான் வாசு. ஆசைக்காதலி ஐஸ்வர்யா முறைத்துக்கொள்ள, வாசுவும் சுடுசொல் பேச சோகத்தில் தத்தளிக்கிறான் சரவணன். பிரச்னையை தீர்க்க இந்த நண்பேன்டாக்கள் போடும் திட்டங்கள் என்ன?

'என்னடா சரவணா வானம் நீலமா இருக்கு' என்று சந்தானம் சொன்னால் கூட 'செம்ம கலாய் மச்சான்.. செம்ம கலாய்' என்று பூரித்துப்போகும் கேரக்டர் ஆர்யாவிற்கு. பாஸ் என்கிற பாஸ்கரனில் சந்தானத்திற்கு சமமாக காமடியில் வெளுத்து வாங்கிய ஹீரோ. ஆனால் அந்த எனர்ஜி இம்முறை பெரிதாய் இல்லை. ஒரு சில இடங்களை தவிர சந்தானத்தின் காமடி எடுபடாமல் போகிறது. தமன்னாவின் முகத்தில் ஆண்டிட்த்தன அறிகுறிகள். அவரது வாயிலும் ஒரு பாட்டில் பீரை ஊற்றி சமத்துவத்தை நிலைநாட்டி இருக்கும் இயக்குனர் நாக்கில் ஒரு கப் ஊறுகாயை அமுக்கி பாராட்டலாம்.

ஆர்யாவின் அம்மாவாக ரேணுகா. நகைச்சுவையில் வெளுத்துக்கட்டும் ஆற்றல் கொண்டவர். ஏனோ சரியாக பயன்படுத்தப்படவில்லை.

கிளைமாக்ஸ் உண்ணாவிரதப் போராட்டம். இதற்கு ஆதரவு தெரிவிக்க நேரில் வரும் அவர்களின் தங்கத் தலைவி ஷகிலா.. அதைத் தொடர்ந்து அஸிஸ்டெண்ட் கமிஷனர் என்ற சிறப்புத் தோற்றத்தில் வரும் விஷால். அவருக்கான பில்ட்அப்.. மனைவிகளுக்கு பயப்படும் கணவன்களின் கூட்டணி என்று கடைசிக் கட்டத்திலும் டிவிஸ்ட்டுகளை கொடுத்துக் கொண்டேயிருக்கிறார் இயக்குநர். அதேபோல் பாட்டில்களையும் கண்ணில் காட்டிக் கொண்டேயிருக்கிறார்.

அதேபோல் கௌரவ வேடங்களில் கருணாகரன், ஷாயாஜி ஷிண்டே, ஷகிலா, விஷால் என ரக ரகமாக ஆட்களில் இறக்கியும் பருப்பு வேகவில்லை. அப்ரண்டிஸ் தமாசு நடிகை வித்யுலேகா இன்னும் லோக்கலாய் வீடு கட்டி அடித்தால்தான் கரகோஷங்களை அள்ள முடியும். தன் உருவத்தை வைத்து சந்தானம் பேசும் காமெடி டயலாக்குகளையெல்லாம் எப்படி இவர் ஒத்துக் கொண்டார் என்றே தெரியவில்லை. முற்றிலும் தவிர்த்திருக்க வேண்டிய விஷயம்.

இமானின் இசையில் பாடல்கள் எதுவும் தேறவில்லை. முழுநீள நகைச்சுவை படத்திற்கு ஒளிப்பதிவு செய்ய வேண்டும் என்ற நீரவ் ஷாவின் கனவு இம்முறை நிறைவேறி இருக்கிறது.

ஐடியா தரும் நண்பனை காதலி வந்ததும் கழற்றி விடும் ஹீரோ, சரக்கடித்து குப்புற படுப்பது, கல்யாணம் நடக்கும் சமயத்தில் கலாட்டா செய்வது, வினோத காரணத்திற்கு உண்ணாவிரதம் இருப்பது என தனது முந்தைய பட காட்சிகளை பிசைந்து கூட்டாஞ்சோறாக பரிமாறி இருக்கிறார் ராஜேஷ். முதல் ஒரு மணி நேரம் மிக சுமாராய் இருக்க அதன் பிறகு இழுவையோ இழுவை.

கதையை தூக்கி காயலான் கடையில் போட்டுவிட்டு டாஸ்மாக் யுக யூத்களுக்கு பிடித்த அம்சங்களை வைத்து ஹாட்ரிக் பொங்கலை கிண்டியவருக்கு அழகுராஜா பெரிய எச்சரிக்கை மணியை அடித்தது. அதன் பிறகும் இப்படி ஒரு சரக்கே இல்லாத சரக்கு காவியத்தை எடுக்கும் துணிச்சல் எப்படித்தான் வந்ததோ? ஹர்பஜன் சிங் போல குத்துமதிப்பாக மட்டையை சுழற்றி பவுண்டரிகளை விளாசிய ராஜேஷ் இப்போது 'ஹிட் அவுட்' ஆகி வருவதில் ஆச்சர்யமில்லை. ஹாட்ரிக் வெற்றி தந்தவர் தற்போது ஹாட்ரிக் தோல்வியை எதிர்நோக்கி இருக்கிறார். அதனை தவிர்த்து 'மகிழ்ந்திரு'க்க வேண்டுமெனில் ராஜேஷ் கதை சொல்லியே ஆக வேண்டும். பேனா, பேப்பரை கையில் எடுங்க பாஸ். தெய்வ குத்தம் ஆகிவிடாது.

இயக்குநர் ராஜேஷுக்கு இன்னுமொரு கோரிக்கை. உங்களுடைய இயக்கத்தில் எங்களுக்கு மாறுபட்ட கருத்தில்லை. மிகச் சிறப்பாக நடிகர்களை இயக்கி நடிக்க வைக்கிறீர்கள். திரைக்கதையை சுவாரஸ்யமாகவே எழுதுகிறீர்கள். ஆனால் இன்னமும் ஏன் இப்படி டாஸ்மாக்கையே கட்டி அழுகுறீர்கள் என்று தெரியவில்லை. இந்தப் படத்தில் கடைசியாக மப்டியில் வரும் அஸிஸ்டெண்ட் கமிஷனர் விஷாலையும் தண்ணியடிப்பதுபோல காட்டியிருப்பதை பார்த்தால் உங்களுக்குள் ஏதோ ஒருவித டாஸ்மாக் பிரியம் இருப்பது போல தெரிகிறது.

எந்தவொரு கெட்ட செயலும் வலிந்து திணிக்கப்படுதல் கூடாது என்பதே நாம் இங்கே சொல்ல விரும்புவது. இதற்கு பதிலாக குடித்துவிட்டு பேசுவதுபோலகூட காட்டி விடலாம். ஆனால் படம் முழுவதும் குடித்துக் கொண்டேயிருப்பதுபோல என்றால் எப்படி ? கொஞ்சம் யோசியுங்கள்!

பொழுதுபோக்குக்கு கொஞ்சம் உத்தரவாதம் தருகிறார்கள் இந்த வாசுவும், சரவணனும்..!

*இமயவரம்பன்*

# சினித்துளி

## ரஜினியின் 'கபாலி'க்கு சிக்கல்!



ரஞ்சித் இயக்கத்தில் ரஜினி நடிக்கும் படத்தின் பெயர் கபாலி என்று அதிகாரப்பூர்வமாக அறிவித்தவுடனே சிக்கலும் வந்துவிட்டது. மைசூரைச் சேர்ந்த சிவக்குமார் என்பவர் தயாரித்து கதாநாயகனாகவும் நடித்துக் கொண்டிருக்கும் படத்தின் பெயர் கபாலிதானாம். சிவா பிக்சர்ஸ் என்கிற பெயரில் கில்டில் இந்தப்பெயர் பதிவு செய்யப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. எனினும் தயாரிப்பாளர் பெரிய கை என்பதால் அந்தப் பெயரை ரஜினி படத்துக்குக் கொடுத்துவிட்டார்களாம்.

அந்த பெரிய கை தயாரிப்பாளர் என்பது தாணு தான் என்பது அனைவரும் தெரிந்ததே ! பெயர் வைத்ததுமே இப்படி ஒரு பஞ்சாயத்து வரும் என்று ரஜினியும் நினைத்திருக்கமாட்டார்.

## 'ஹைக்கூ..'



'36 வயதினிலே' படத்தை தொடர்ந்து சூர்யாவின் '2டி என்டர்டெயின்மென்ட்' நிறுவன தயாரிப்பில் வெளியாகவிருக்கும் படம் 'ஹைக்கூ'. குழந்தைகளை மையமாக வைத்து எடுக்கப்பட்டிருக்கும் இப்படத்தை பாண்டி ராஜ் இயக்கியுள்ளார். இப்படத்தில் குழந்தைகள் கவின், நயனா, அபிமான் ஆகியோருடன் சூர்யா, அமலா பால் ஆகியோர் நடித்துள்ளார்கள். படப்பிடிப்பு முடிந்து தற் இம்மாதம் இறுதியில் பாடல்கள் வெளியீடு நடைபெறவிருக்கிறது.

## சத்தமில்லாமல் வெங்கட்பிரபு படம்.?



ஒரு காலத்தில் அஜீத் வா... வா... என்று அழைக்க, இன்னொரு பக்கம் சூர்யா வா... வா... என்று அழைக்க, இதென்னடா வெங்கட் பிரபுவுக்கு வந்த வாழ்வு என்று வயிறார எரிச்சல் பட்டது ஊர் உலகம்! ஊரு கண்ணு... ஒறவு கண்ணு... எல்லாம் சேர்ந்து வெங்கட்பிரபுவின் கனவை பொசுக்கிவிட, மனுஷன் இப்போ யாருக்கும் தெரியாமல் ஒரு படம் எடுத்துக் கொண்டிருக்கிறார். இதையாவது உருப்படியாக எடுத்து ஊரறிய வெற்றி காணவேண்டுமென துடிக்கிறாராம் வெங்கட்பிரபு.

இந்த படத்தில் ஹீரோயினாக நடித்துக் கொண்டிருப்பது ஹன்சிகா. செட் பிராப்பர்ட்டியான தம்பி பிரேம்ஜியும் இருப்பாரே?.

## பிரபுதேவா இயக்கத்தில் விஜய்!



பிரபுதேவா-விஜய் கூட்டணியில் "போக்கிரி", "வில்லு" ஆகிய படங்கள் வெளியாகியுள்ளன. இதில் 'போக்கிரி' படம் சூப்பர், டூப்பர் ஹிட்டானது. இதைத் தொடர்ந்து இவர்கள் கூட்டணியில் வெளிவந்த 'வில்லு' படம் எதிர்பார்த்த வெற்றியை பெறவில்லை. இதனால், பாலிவுட் பக்கம் தனது முழு கவனத்தையும் செலுத்த தொடங்கினார். பாலிவுட்டில் இவர் இயக்கிய பல படங்கள் இவருக்கு மிகப்பெரிய வெற்றியைத் தேடித் தந்தன.

பிரபுதேவா சமீபத்தில்தான் 'பிரபுதேவா ஸ்டுடியோஸ்' என்ற பெயரில் புதிய தயாரிப்பு நிறுவனம் ஒன்றை தொடங்கியுள்ளார். அதுமட்டுமில்லாமல், தற்போது இந்தியிலும் சில படங்களை இயக்கி வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. இந்நிலையில் அட்லி இயக்கும் படத்தினைத் தொடர்ந்து பிரபுதேவா இயக்கும் படத்தில் விஜய் நடிக்க ஒப்பந்தமாகி இருக்கிறாராம்


Kayaal IT Solution Ltd
CCTV Camera Installation & Maintenance
EST Aug 2012
FRIENDLY SERVICES BY QUALIFIED ENGINEER.....







- CCTV Installation and Maintainance
- We are Offering cameras 1000 TVL at Different Prices from £25
- AHD - 720P, 1080p , 1.3 Megapixel Camera, CMOS 1000 TVL all available all day
- Wireless HD IP Cameras also available
- DVR all quality - Sunvision make




Only £ 500.00 (Inc VAT)
4 Dome camreas, DAY AND NIGHT, 1000tvl, cmos 4 ch dvr, 500 GB Hard Disk and Install, Online Support.

Only £ 650.00
4 Dome Cameras 12 MM Lens, 30 Meter, Day And Night Vision , 720p, 1080p, 1.3 Mega Pixel AHD 1000 TVL AHD 4 CH dvr With 1TB Hard Drive, All Install And Online Setup

Simply and Friendly Easily In Your Pocket Money!!!
If Any One Start Pay with Month 50 Pounds Then Year after You Make Weekly Earn Regular and Continue Until You Member Weekly earn 250 pounds *For More Details Call - JOTHY -07859892657*

Please Contact : KAYAL-07457178826
JOTHY - 07859892657
*Electrical and Electronic Engineer [BEng Hons ], CITY UNIVERSITY,LONDON*
*MCP2.0, MCT, [WINDOWS7], MCT[WINDOWS8]. PAT CERTIFIED [CITY AND GUILDS]*




Paying Method : By PayPal or Cash
83, Roberts Bridge Road,
Carshalton, SM5 1AH

E-Mail : info@kayaalcctv.com
Web : WWW.KAYAALCCTV.COM
COMPANY REG NO : 08193915

# JPN

Shipper | Movers | Transporters

Shipping: World Wide Door to Door
Air Cargo: Faster and Promised Delivery
Removal Services: Rate Lower - Job Higher

குறைந்த செலவில்
விமான மற்றும் கடல்-தரை
மார்க்கமான பொதி சேவை
பாதுகாப்பு - விரைவு - நம்பிக்கை

யாழ், வன்னி, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருமலை, அம்பாறைக்கு விரைவான மலிவான சேவை !

**உலகெங்கும் கடல், வான் மார்க்கமாக பொருட்களை அனுப்ப நம்பிக்கையான ஒரே நிறுவனம்**

- *Shipping & Airfreight*
- *Worldwide Destination*
- *Import & Export*
- *Packing & Crating*
- *Collection & Delivery*
- *All Sizes & Weights*
- *Immediate Insurance Cover*
- *Complete Documentation Service*

*Now we are Operating the Coaches Europe Wide!*



Machinaries & Commercial Cargo Clearances and Door Deliveries to any Corner of Srilanka @ Best Rates

குறைந்த விலையில் இலங்கைக்கு பொதிகளை மட்டுமல்லாமல் இலத்திரனியல் பொருட்களையும் பாதுகாப்பான முறையில் அனுப்பிக் கொள்ளலாம். உங்கள் பொருட்களை உங்கள் வீட்டிற்கே வந்து பெற்று அனுப்பும் சேவையும் உள்ளது.

**Passenger Vehicles Available from 9 to 60 Seater Coaches**

**JPN Shipping Ltd.**
**Unit-A2c, Redlands, Coulsdon,**
**CR5 2HT, Surrey.**

Web: www.jpnshippingltd.co.uk
Email: info@jpnshippingltd.co.uk
info@permainternational.co.uk

Call us .........
Tel: **020 8668 0252**
Mob: **079 3119 7571**



TSSA event partner nachiyar events
CELEBRATING 24 YEARS OF TAMIL SPORTS IN THE UK

Raynes Park Sports Ground,
Tauton Avenue, Reynes Park,
SW20 0BH, London.

NACHIYAR EVENTS :
Suresh 079 5184 7840
Haran 079 8882 6507

www.nachiyarevents.com
info@nachiyarevents.com
www.facebook.com/nachiyareventslondon

# SUMMER SPORTS festival - 2015

Powered by Lebara

Fashion Show | Handsome Show
Circus | Nachiyar Bazaar | Auctions

Want to Win Mr.TSSA / Miss.TSSA Awards?



**31st August 2015** 9am - 7pm
(Bank Holiday)

CIRCUS FOR KIDS

OFFICIAL SPONSORS: Franco, e KARD, TIME TRAVEL, SRI AISHVARYA SAREES

CO - SPONSORS: UNIQUE Wedding & Party Services, NEW WAVE

OFFICIAL CATERERS: Abi Fast Food, RISING SUN

TRADE OUTLETS: Abby, Tech Cube, BIZROOTS, CKS Sarees, KuttiBaba, Easyshipping, LIFE LINE, RAINBOW, Embon, Ontime Tours

MEDIA PARTNERS: GTV, IBC தமிழ், வணக்கம் London

SUPPORTERS: Crystal, ABARNA beauty care, GAP FITNESS

iBELL CREATION

# Southall Travel

## *Redefining Travel*

*Why travel with*
**Southall Travel?**

- ✓ Great value flights to Sri Lanka
- ✓ Number One Travel Agent to India, *with over 20 years experience*
- ✓ Open 24 hours a day, seven days a week. *Call us anytime*
- ✓ Price guarantee *will not be beaten on price*
- ✓ Specialists for worldwide flights and holidays with any airline, anywhere, anytime
- ✓ Fast and reliable service
- ✓ Multilingual staff *offering impartial advice*
- ✓ Trusted household brand *for total peace of mind*

ஏன்
**சவுத்ஹோல் டிராவல்**
மூலம் பிரயாணம் செய்ய வேண்டும்?

- ✓ சிறிலங்கா செல்லவிருக்கும் பயணிகளே நீங்கள் கொடுக்கும் பணத்திற்குப் பெறுமதியாக சொகுசாகவும், மனநிம்மதியாகவும் பிரயாணம் செய்லாம்.
- ✓ 20 வருடத்திற்கு மேற்பட்ட அனுபவமுள்ள இந்தியாவிற்கான முதன்மைவாய்ந்த பிரயானமுகவர்.
- ✓ வாரத்தில் 7 நாட்களும் 24மணிநேரம் சேவை. எந்நேரமும் தொடர்பு கொள்ளலாம்.
- ✓ விலைகளுக்கு உத்தரவாதம். விலையில் எங்களை ஒருவரும் வெல்ல முடியாது.
- ✓ உலக விமான விடுமுறைப் பயணங்களையும் எங்கேயும் எப்போதும் எந்நேரத்திலும் எந்த விமானத்திலும் மேற்கொள்ள பிரசித்திபெற்ற நிறுவனம்.
- ✓ நம்பிக்கையான துரித சேவை
- ✓ பலமொழிகளிலும் தேர்ச்சிபெற் ஊழியர்கள். பாரபட்சமற்ற சேவை செய்யக் காத்திருக்கிறர்கள்.
- ✓ நிறைந்த நிம்மதியுடன் பயணம் செய்ய நம்பிக்கையான எல்லோருக்கும் தெரிந்த ஓர் நிறுவனம்

*Call Centre open 24 hours* **0844 855 8017**

ABTA 80626

*Think Travel, Think Southall Travel*

www.southalltravel.co.uk

5553 ATOL PROTECTED